UNIVERSITY LIBRARY MADURAI
16 DEC 1957

சிந்தனையாளர் வரிசை : 3

# சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்

2868

எழுதியவர் : ரா. தணலன்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS




UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

பிரேமா
பிரசுரம்
சென்னை-24

Univ. Grants Commission.

விலை ரூ 1—4—0

பிரேமா பிரசுரம்—15

முதற்பதிப்பு: ஜூன், 1954.

சகல உரிமைகளும் பெற்றது.

முன்பு வெளிவந்தவை:

1. சிந்தனையாளர் டார்வின்
(எழுதியவர்: ஜெகசிற்பிய

2. சிந்தனையாளர் பிளேட்டோ
(எழுதியவர்: அரு. ராமநாதன்

இப்போது வெளிவந்திருப்பது

3. சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்

இனி வெளிவருபவை

4 —12 ?

அச்சிட்டோர்:

பாரதி பிரிண்டர்ஸ், சென்னை-1.

# சிந்தனையாளர் வரிசை

தயாரிப்பு:

அரு. ராமநாதன்

3

பொருளாதார விடுதலையே
மனிதகுலம் மாண்படையும்
வழி எனச் சிந்தித்தவர்

# சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்

எழுதியவர்: ரா. தணலன்

சித்திரங்கள்: உகி

# பொருளடக்கம்

விடுதலை உண்டா?

முதற் பகுதி

கார்ல்மார்க்ஸின் வரலாறு

இரண்டாவது பகுதி

(சிந்தனை விளக்கமும் நூற் சுருக்கங்களும்.)

1. மார்க்ஸ் தத்துவம்
2. மூலதனம் (Capital)
3. இந்தியா பற்றி கார்ல் மார்க்ஸ்

மூன்றாவது பகுதி

கம்யூனிஸ்ட் அறிக்கை

நான்காவது பகுதி

கார்ல் மார்க்ஸின் சிந்தனைகள்

கலைச்சொற்களைப் பற்றி

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI
2868




# விடுதலை உண்டா ?

சரித்திரத்தின் அடிச் சுவட்டிலே சென்று மறைந்து போன பழங்காலம்; சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு.........

படிப்பின் வாசனை அறியாத, சிந்தனை செய்யத் தெரியாத ஒரு பாமர மனிதன். அவனைப் போன்ற இன்னும் பல மனிதர்களுடன் ஒட்டிச் செல்லப்படுகிறான், எஜமானனால். ஆட்டு மந்தையைப் போல், ஓடும் அந்த மனிதக் கூட்டம் காலை முதல் மாலை வரை எஜமானனுக்காக உழைக்கிறது, உடல் ஓயும் வரை! அது ஓர் அடிமைக் கூட்டம்! அடிமைகள் விலங்குகள் போல் விற்கப்பட்டனர்; வாங்கப்பட்டனர்; அடித்து உதைக்கப்பட்டனர்; உழைத்துத் தேய்ந்தனர்; செத்து மடிந்தனர். அடிமைக் கூட்டத்தைச் சேர்ந்த அந்த அடிமை மனிதனுடைய வேதனைப் பெருமூச்சிலே பிறந்த அர்த்தம் புரியாத சிந்தனையின் முதல் கேள்வி.

**விடுதலை உண்டா ?......**

சரித்திர காலத்திலே ஓர் திருப்பம் ; சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு......


இப்பொழுது அந்த உழைக்கும் மனிதன் அடிமையாக இல்லை. பண்ணைக் குடியானவனாக இருக்கிறான். அவனுக்குப் பெயரளவில் ஒரு சுதந்திரம் இருக்கிறது. அதாவது அவனை விற்கவும் வாங்கவும் யாரும் இல்லை! ஆனால் தன்னைத்தானே விற்றுக்கொள்ளவேண்டும்! அவன் அல்லும் பகலும் உழைக்கிறான். உழைப்பைத் தவிர அவன் வாழ்க்கையில் வேறு நிகழ்ச்சியே கிடையாது. ஆனால் அவன் வாழ்க்கை நிலைமையோ...? அடிமையின் நிலைமையினுடையதைக் காட்டிலும் மோசம். அவன் உள்ளக் குமுறலிலே எழுந்த முதல் கேள்வி—**விடுதலை உண்டா?**

இன்னும் கால ஓட்டத்திலே ஒரு திருப்பம்...!

எண்ணற்ற பண்ணை விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்காக உழைக்கின்றனர். அவர்கள் எல்லோரும் சுதந்திரம உடையவர்கள். ஆனால் எஜமான் முகம் கோணினாலோ அவர்கள் வாழ்க்கையே கோணலாகிவிடும். இவர்கள் தனித்தனியாகக் குடும்பங்களில் வசிக்கிறார்கள். சட்டம், தர்மம், நியாயம் எல்லாம் பேசுகிறார்கள். ஓரளவு நாகரிகம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் என்ன? சொத்தின் அடிமைகள்தான் இவர்கள்! பிரபுக்களுக்காக உழைத்து உடல் தேயும் மனித இயந்திரங்கள்தான் இவர்கள்! உழைத்து விளைத்த செல்வங்களிலே பெரும் பகுதி குத்தகை, வாரம், காணிக்கைகளாக பிரபுக்களுக்குப் போய்விடும். எஞ்சிய பகுதி உடலோடு உயிரை வைத்துக் கொண்டிருக்கவே போதாது. அந்த விவசாயக் குடிமகனின் சலித்துப்போன உள்ளத்தைத் துளைத்துக் கொண்டே இருக்கும் ஒரே கேள்வி—**விடுதலை உண்டா?**

சமுதாயம் வேகமாக வளர்ந்து வருகிறது. மக்களின் வளர்ச்சியைச் சரித்திரம் பிரதிபலிக்கிறது.

பெரும் யந்திரத் தொழிற்சாலைகளிலே, அந்த உழைக்கும் மனிதர்கள் ஆயிரக் கணக்கில் குவிந்து கிடக்கின்றனர். இப்பொழுது இயந்திரத்தோடு போராடுவது அவர்கள் வாழ்க்கை என்றாகிவிட்டது. அவர்கள் உழைப்பு இயந்திரங்களை இயக்கி உற்பத்திப் பண்டங்களை ஏராளமாகச்



செய்துகுவிக்கிறது. செல்வம் வளர்கிறது. ஆனல் அவர்களுடைய வாழ்க்கை நிலைமையோ........? அடிமைகளுடையதைவிட மோசம்!

இந்தச் சமுதாயத்திலே வேறு வகைப்பட்ட உழைப்பாளிகளும் விவசாயிகளும் இருக்கிறார்கள் இவர்கள் ஓரளவு விஷய ஞானம் உடையவர்களாகவும் நாகரிகம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் முதலிய பெரிய சொற்கள் எல்லாம் பேசப்படுகின்றன. ஆனலும் என்ன? மூலதனத்தின் அடிமைகளாகக் கிடக்கும் உழைப்பாளி வர்க்கத்தின் கனல் தெறிக்கும் ஆவேசப் பெருமூச்சிலே துடிக்கும் ஒரே கேள்வி—**விடுதலை உண்டா?**

உண்டு என்ற பதிலைக் கிளப்பினன் அறிஞன் ஒருவன். அவன் தான் சிந்தனையாளன் **கார்ல் மார்க்ஸ்!** உண்டு என்று கூறியது மட்டுமல்ல. மனித இனத்தின் வளர்ச்சி நியதியைச் சோதனைக் கூடமாக்கி, அதிலே விஞ்ஞான பூர்வமாக மனித சமுதாயம் இப்படி இப்படி வளர்ந்து வந்திருக்கிறது, இனி இப்படி வளர்ச்சி அடையும், எதிர்கால மனித சமுதாயம் சோஷலிஸத்தை நோக்கி நகர்ந்தே தீரும், சோஷலிச சமுதாயத்திலே மனிதனை மனிதன் சுரண்டும் மட்டமான வழக்கம் இராது, எல்லோரும் பெயரளவில் அல்லாது எல்லாவிதத்திலும் சரிநிகர் சமானராக இருப்பார்கள்—என்றெல்லாம் நிரூபித்துக் காட்டினன்......!


இயற்கை பரிணமரூபத்தில் (Evolution) தானே படிப்படியாக வளர்ந்து வருவதோடு நில்லாமல் சில சமயங்களில் புரட்சிகரமாகத் தாவியும் குதித்தும் திடீரென்றும்




புரட்சி மாற்றம் (Revolution) அடைவதுண்டு. தண்ணீரைக் கொதிக்க வைத்துக்கொண்டே இருந்தால் ஓரளவு சமயம் வரை தான் அது தண்ணீராகவே இருக்கும். அந்த நிலை மாறிவிட்டால் அது திடீரென்று ஆவியாக மாறிவிடுவது போல், சமுதாயத்திலும் ஒரு குறிப்பிட்ட அமைப்பு குறிப்பிட்ட நிலைமைகளில் ஓரளவு காலம் வரைதான் இருக்கும்; பிறகு திடீரென்று புரட்சிகரமாக மாறிவிடலாம். சரித்திரத்திலே அப்படி நடந்தும் இருக்கிறது என்று உதாரணங்களோடு சுட்டிக் காட்டினன். அந்தப் பேரறிஞன் தான் **கார்ல் மார்க்ஸ்.**

அவன் சோதனைக் கூடத்திலே சொல்லியவை ஒரு நூற்றுண்டுக்குள்ளாகவே மனித இனத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டன. புதிய ருஷ்யா, சோஷலிஸ்ட் ருஷ்யா உதயமாகிவிட்டது.

பொதுவுடமை நாளுக்கு நாள் வென்று வருவதன் அறிகுறியைக் காண்கிறோம். மார்க்ஸின் கனவு நினைவாகும் காலம்—எல்லா மக்களுக்கும் பரிபூரண விடுதலை கிடைக்கும் காலம் தூரத்தில் இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.





கார்ல் மார்க்ஸ்
(தோற்றம்: 1818; மறைவு: 1883)

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

## முன்னேட்டம் :

மேதை என்று போற்றுவார் போற்றினர். பேதை என்று தூற்றுவார் தூற்றினர். அவர் வாழ்க்கை வறுமை இருளிலே தட்டுத் தடுமாறி உருண்டு புரண்டு சென்று கொண்டிருந்தது. வாழ்விலே அவரைவிடத் தோல்வியை அனுபவித்தவர்களே, துயரத்திலே அதல பாதாளத்தைக் கண்டவர்களை சரித்திரம் எடுத்துக் காட்ட வில்லே. ஆனல் அவர்.........?

தீர்க்க தரிசிகள் கண்ட மெய்ஞானத் துணிபுகள் எல்லாம் ஒரு நூற்றுண்டுகூட உயிருடன் நிற்கவில்லே: எத்தனேயோ மத புருஷர்களும்,மகான்களும் கண்டமார்க்கங்கள் அவர்களோடேயே மறைந்துவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். அந்தந்தமார்க்க மதத்தவர்கள் பெயரளவிலேயே இருக்கலாம். ஆனல், அவற்றின் தத்துவங்களே முழுக்க முழுக்கக் கடைப் பிடித்து நடப்பவர்கள், அத்தத்துவங்களைஉயிர் வாழ்க்கையாகக்கொண்டவர்கள்,வாழ்க் கையையே தத்துவமாகவும், தத்துவத்தையே வாழ்க்கையாகவும் கொண்டவர்கள், விரல் விட்டு எண்ணக் கூடிய அளவாவது இருந்திருப்பார்களா என்பது சந்தேகம். அத்தத்துவங்களின் நன்மை தீமை பற்றி, அவற்றின் ஆழம் விசாலம்பற்றி ஆராய்வது நமது கருத்தன்று. ஆனல் வாழ்க்கையிலே 'அனுஷ்டானசாத்திய மான' கடைப் பிடித்து வெற்றிகாணத்தக்க ஒரு தத்துவத்தை உருவாக்கினர், ஒரு பேராசிரியர். அவர்தான் கார்ல்மார்க்ஸ்!

மதாசிரியர்களால் ஒரு நூறுபேர்களுக்குக்கூடவாழ்க்கையிலே இன்பத்தை, அமைதியை, திருப்தியை அளிக்க முடியவில்லே. மக்களுக்கு அவர்கள் அளித்தபோதனேகள் உள்ளத்தைத்தொட்ட போதிலும் வாழ்க்கையைச் சென்று தொடவில்லே. அத்தத்துவங் கள் பாமர மனிதனின் வாழ்விலேஇரண்டறக் கலக்கும் பான்மை பெற முடியவில்லே. ஓரளவு பண்பாட்டை வளர்க்கவும், சிந்தனே யைச் செம்மை செய்யவும் அவற்றுல் முடிந்திருக்கக் கூடும். ஆனல் வாழ்க்கையின் அஸ்திவாரத்தை, அந்த வாழ்க்கை எந்த நிலேக்களன் மேல் தோன்றி வளர்ந்து கிளேத்துச் செழித்து நிற்கிறதோ அந்த சமுதாயத்தின் அஸ்திவாரத்தோடு சேர்த்துக்

குலுக்கிப் புரட்டிப் புதியதோர் நிலைக்கும் கொண்டு போகத் தக்க போதனைகளை அளித்தார், ஒரு பேரறிஞர். அவர்தான் கார்ல் மார்க்ஸ் !

வாழ்வுக் காலத்திலே அவருக்கு நூற்றுக் கணக்கான சீடர்கள் கூடவில்லை. அவரை வாழ்த்தி வரவேற்க மன்னர்களும், மண்டலாதிபதிகளும், மாபெரும் பிரபுக்களும், மகிமை பெற்ற சீமான்களும் வந்து சேரவில்லை. பல்லக்கு; பட்டா, விருதுகளோடு பாரோர் துதியும் பெறவில்லை அவர் தம் வாழ்க்கைக் காலத்திலே ! ஆனால் அவர் வாழ்ந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள்ளே வல்லரசுகள் கிடு கிடுக்கும் வலியதோர் சக்தியை, புரட்சிச் சூறாவளியைக் கிளப்பிவிட முடிந்தது அவரால்! புதியதோர் சமுதாயமே பிறந்து வளர்ந்து உரம்பெற்று நிற்கிறது, இன்று அவருடைய போதனைகளின் அடிப்படைமேல்! நிலமண்டலத்திலே, பெரும்பாகம் அவருடைய தத்துவத்தின் உயிர்ச் சின்னமாய்க் காட்சி அளிக்கத் தொடங்கிவிட்டது இன்று! மக்கள் தொகையிலே மூன்றில் ஒரு பகுதியினர் மார்க்ஸீய தத்துவத்தால் இன்று புதுவாழ்வு பெற்று விட்டனர். அத்தகைய மகத்தான சாதனையைச் செய்து முடித்த தத்துவங்களின் உயிர் மூலமாய் வாழ்ந்தார், ஒரு மா மனிதர் ! அவர் தான் கார்ல் மார்க்ஸ் !

உலகம் முழுவதும் அழிந்துபோய், தனி ஒரு மனிதனே எஞ்சி நிற்கினும் அந்த மனிதனின் நினைவிலே நின்றொளிரக்கூடிய ஒரே மேதையின் உருவம் அவருடையதாகத்தான் இருக்கும் என்று அறிஞர்கள் கூறும் சிறப்பைப் பெற முடிந்தது, அந்த, ஒரே மனிதரால்தான் அவர்தான் கார்ல் மார்க்ஸ். வாழ்க அவர் நாமம் வாழ்க !

## 1. மார்க்ஸ் பிறந்தார் !

மார்க்ஸின் வாழ்க்கையைப் பற்றி நினைக்கும் பொழுது உள்ளம் குமுறுகிறது. வாழ்க்கையிலே அதைவிடக் கடினமான துன்பங்களை யாரும் அனுபவித்திருக்க முடியாது. அத்தகைய துயரங்களைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்கக்கூடச் சிலருக்கு முடியாமல் இருக்கலாம். சொந்த நாட்டிலே அவரால் வாழ முடியவில்லை. அந்த நாட்டின் பிரஜா உரிமையைக் கூடத் துறந்துவிட வேண்டிய நிலைமை அவருக்கேற்பட்டது. அவர் எந்தெந்த நாட்டில் சென்றுகுடியேறினரோ அங்கெல்லாம்அமைதியாக ஒரு நாள் ஒரு பொழுது கூட வாழவிடாமல் ஆளும் அரசாங்கமும் அதிகாரவர்க்கமும் போலீஸும் தொல்லைகொடுத்தன.

மனைவியும் மக்களுமாக நாடு நாடாக அலைந்து கொண்டிருக் கையில் அவர்கள் அனுபவித்த வறுமை, அப்பப்பா......சொல்ல முடியாது; நினைக்கவே முடியாது. கண்ணீரையும் இரத்தத் தையும் குழைத்து எழுத வேண்டிய வரலாறு அவருடையது. அந்த வரலாற்றிற்குரிய வாழ்க்கைதான் அரசாங்கங்களையே துடைத்து அழித்து விட்டுப் புதிய அரசாங்கங்களை, புதிய சமுதாய அமைப்புகளைக் காண அடிப்படையாயிற்று.

1818-ம் ஆண்டு ஐந்தாம் (மே) மாதம் ஐந்தாம் நாள் மார்க்ஸ் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு வக்கீல்; யூதர். வாழ்ந்த இடமோ அப்பொழுது ப்ரஷியாவுக்குச் (ஜெர்மனியில் ஒரு மாகாணம்) சொந்தமாக இருந்த ரைன லாந்தில் ட்ரீவ்ஸ் என்னும் நகர்.

பிறந்த இடத்தாலும் குலத்தாலுமே அவர் வாழ்க்கை நெஞ் சைச் சென்று உறுத்துவதாகிறது. ஐரோப்பிய நாடுகளிலே வெறுக்கப்பட்ட இனம் யூத இனம்தான். நாஸி (ஹிட்லரின்) ஜெர்மனியில் யூதர்கள் நர வேட்டையாடப் பட்ட கதை நம்மில் பலருக்கு மறந்து போயிருக்காது. பிறந்த இடம் ரைன்லாந்து என்று கூறினேம். இது ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் இடை யிலே ரைன் நதி ஓடும் செழிப்பான பிரதேசம். இரண்டு நாடு களுக்கு இடையிலே இருக்கும் செழிப்பான பிரதேசம் என்றல் அந்த இடத்தின் கதை எப்படியிருக்கும் என்று யூகிக்கலாம். அது அடிக்கடி சூறையாடப் பட்டுக் கைமாறிக் கொண்டிருந்தது. சில காலம் ஜெர்மனிக்குச் சொந்தமாக இருக்கும். சில்காலம் ப்ரான்ஸுக்குச் சொந்தமாக இருக்கும். இதனல் அங்கு வாழ்ந்த மக்களும் எந்த அரசை நிலையாக நம்புவது என்றில்லாமல் சமயத்திற்குத் தக்கபடி ஊசலாடிக் கொண்டிருந்தனர்.

மனித வாழ்க்கை, மதம், குலம் என்ற பிரிவுகளால் எவ் வளவு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு மார்க்ஸின் தந்தையின் வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டாக அமையும். யூதராக இருந்தவரை அவரால் வக்கீல் தொழிலில் வெற்றி பெறவே முடியவில்லை. அவரிடம் திறமை இருந்தது. நேர்மை இருந்தது. வாக்கு வன்மை இருந்தது. இருந்தும் என்ன? அவர் யூதர்! உண்மைக் கிறிஸ்வர்களான கட்சிக்காரர்கள் யூதனை வக்கீலாக அமர்த்திக் கொள்ளலாமா? கூடவே கூடாது!

மார்க்ஸின் பரம்பரை பழமையான வைதீக யூத வகுப்பைச் சேர்ந்தது. அவருடைய மூதாதையர்கள் 'புரோகிதர்கள்'. ஆனலும் மார்க்ஸின் தந்தைக்கு அவ்வளவு அதிகமான மதப்

பற்று கிடையாது. வாழ்க்கையைக் கொஞ்சம் சுலபமானதாக ஆக்கிக் கொள்வதற்காக அவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவத் தயங்கவில்லை. கிறிஸ்தவரானவுடன் வெற்றியும் செல்வமும் அவரைத் தேடி வந்து சரணடைந்தன. குடும்பம் செல்வச் செழிப்போடிருந்த காலத்திலேதான் பிறந்தார் மார்க்ஸ். மார்க்ஸி னுடைய குடும்பத்தைப் பற்றி லெனினுடைய வார்த்தைகளிலே சொன்னால், 'அந்தக் குடும்பம் நல்ல நிலைமையில், இருந்தது, நாகரிகம் வாய்ந்ததாய் இருந்தது.' ஆனால் புரட்சிகரமானதாக இருக்கவில்லை. புரட்சிகரமானதாக இல்லாத குடும்பதிலேதான் வருங்காலப் புரட்சிகளுக் கெல்லாம் வித்தூன்றிய மார்க்ஸ் பிறந்தார்!

மார்க்ஸின் தந்தை புரட்சிகரமானவராக இராத போதிலும் அரசியல் கருத்துக்கள் உடையனவரகத்தான் இருந்தார். ஜெர் மானிய ஆதிக்கத்திற்குட் படுத்தப்பட்ட ரைன்லாந்து அரசியல் பலாத்காரத்திற்கும் கொடுமையான சுரண்டலுக்கும் உள் ளாக்கப் பட்டு வந்தது. திராட்சைத் தோட்டங்கள் நிறைந்த ரைன் நதிச் சமவெளியில் விளைந்த பொருள்கள் எல்லாம் ஜெர் மனிக்குக் கொள்ளை கொண்டு போகப்பட்டன. விளைவித்த விவசாயிகளோ வறுமைக் கடலில் வீழ்ந்தனர். விவசாயி களிடத்திலோ வாங்கும் சக்தி குறைந்ததால் வியாபாரம் வீழ்ச்சி அடைந்தது. பணத்தட்டுப்பாடு வலுத்தது. பஞ்ச நிலைமை வளர்ந்தது. நாட்டிலே துன்பம் என்றால் நாட்டு மக்கள் எத்தனை நாளைக்குத்தான் சகித்துக் கொண்டிருப்பார்கள்? அவர்களுடைய மௌனப் பெருமூச்சு வேதனைப் பெருங்குரலாகப் பரிணமிக்கத் தொடங்கிற்று. துண்டுப் பிரசுரங்களும் அரசியல் கூட்டங்களும் நடைபெற்றன. ரைன் லாந்தில் நிலவிய குழப்ப நிலைமைக்குக் காரணமானவர்கள் என்று அங்கிருந்த அரசாங்க அலுவலாளர் களால் ஜெர்மானிய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட குறிப் பிலே மார்க்ஸின் தந்தையின் பெயரும் இருந்ததாக ஒரு வரலாறு குறிப்பிடுகிறது.

மார்க்ஸின் உடன் பிறந்தவர்கள் ஏழுபேர். இரண்டு பையன்களும் ஐந்து பெண்களும். அவர்களிலே அந்த இரண்டு பையன்களும் இரண்டு பெண்களும் குடும்ப நோயாகிய (க்ஷய ரோகம்) என்புருக்கியிலே மடிந்தனர். மற்ற மூன்று பெண் களும் கல்யாணமாகிக் கணவன்மாரோடு வசித்தனர். அதனால் மார்க்ஸ் வீட்டிலே செல்லக் குழந்தையாக இருந்தார். அதனால் குடும்பத்தில் எல்லோரும் 'அவன் ஒரு நல்ல மகனாக, பெயரும் புகழும், செல்வமும் செல்வாக்கும் சம்பாதிப்பவனாக அதே

வேண்டும் என்று எதிர்பார்த்தனர். பிற்காலத்தில் மார்க்ஸ், "அம்மாவுக்கு என் மீது ரொம்ப வருத்தம். பணத்தைப்பற்றி எனக்கு எழுதத்தெரிந்ததே தவிரச்சம்பாதிக்கத் தெரியவில்லையே என்று அவள் குறைப் பட்டுக் கொண்டே இருப்பது வழக்கம்" என்று கூறினர் என்றால், அந்தத்தாய் அந்த மகனிடத்திலே எவ்வளவு எதிர்பார்த்திருப்பாள் என்று சொல்ல வேண்டுமா?

மார்க்ஸின் தந்தை தம் மகனை ஒரு தோழனைப் போலவே நடத்தினர். தந்தையிடத்திலே மார்க்ஸுக்கு அளவு கடந்த பிரியமும் மரியாதையும் இருந்தன. ஆனல் மற்றவர்களிடமோ, பிள்ளைப் பிராயத்திலே மார்க்ஸ் ஒரு முரடனகத் தான் இருந்தார். பள்ளியிலே இந்தத் 'துஷ்டப் பிள்ளை'யைக் கண்டு மற்ற மாணவர்களுக் கெல்லாம் பயம்!

பள்ளிப்படிப்பு முடிந்ததும் மார்க்ஸ் ட்ரீவ்ஸ் நகரிலிருந்த உயர்தரப் பள்ளியில் சேர்ந்து லத்தீன், கிரீக், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளைக் கற்றார். கவிதை தத்துவம் முதலியவற்றிலே அவருக்கு அதிகமான ஆர்வம் இருந்தது. உயர்தரப்பள்ளி இறுதிப் பரீட்சையிலே அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் கீழ்க் கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன:

> **"நாம் எந்தத் தொழிலை விரும்புகிறோமோ, எதில் நமக்குத் தகுதி இருக்கிறதென்று கருதுகிறோமோ அந்தத் தொழிலை அடைய முடியாமலே போகலாம், ஏனென்றால், நாம் இந்த சமுதாயத்தோடு எத்தகைய உறவு இருக்கவேண்டும் என்று தீர்மானிப்பதற்கு முன்பே அந்த உறவு உருவாகி யிருக்கிறது."**

பள்ளிப்படிப்பு முடிந்ததும் மார்க்ஸ், பான் சர்வகலாசாலை சேர்ந்தார். பான் நகரிலே அப்பொழுது ஒரு விசித்திரமான நிலைமை நிலவியது. கல்லூரி மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்வதென்பது எங்கும் சகஜமாகக் காணப்படுகிற விஷயம். பான் நகரம் கல்லூரி மாணவர்களின் அரசியல் ஆர்வம் அளவுக்கு மீறிப் போனதன் காரணமாக அவர்கள் ப்ராஸ்பார்ட் நகரிலே கூட்ட இருந்த மாகாண சட்டசபையைக் கலைத்துவிட்டு அதன் இடத்தில் புதியதோர் அரசாங்கத்தை அமைத்து விடுவதென்று தீர்மானித்தார்கள். இந்தச் செய்தி வெளியில் தெரிந்து விடவே அரசாங்கம் மாணவர்களைக் கைது செய்து சங்கங்களைக் கலைத்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. கொடிய அடக்கு முறையில் நகரம் களையிழந்து கிடந்தது. மாணவர்கள் ஒளியிழந்து உற்சாகமிழந்து அஞ்சி அஞ்சி வாழ வேண்டியவர்களாக இருந்தனர்: இத்தகைய நிலைமையிலேதான் மார்க்ஸும் இங்கு வந்து சேர்ந்தார்.

ஆனால், பான் கல்லூரிவாழ்க்கை மார்க்ஸுக்கு ஓராண்டுக்கு மேல் நீடிக்கவில்லை. அடுத்த ஆண்டு படிப்பிற்காக அவரை பெர்லினுக்கு அனுப்பப் போவதாகவும் உடனே புறப்பட்டு வரும் படியும் அவருடைய தந்தையிடமிருந்து கடிதம் வந்ததால் மார்க்ஸ் கோடை விடுமுறையில் ட்ரீவ்ஸ் வந்து சேர்ந்தார்.

## 2. காதலும் கல்வியும்

வயது பதினெட்டு; வாலிபப் பருவம்; கல்லூரி மாணவன்; கவிதை நினைவுகள் குறுகுறுக்கும் நெஞ்சினன்; அவன் உள்ளத்தைக் காதல் கனவுகள் முற்றுகையிட்டால் விந்தை அன்று! மங்கை ஒருத்தி மார்க்ஸின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். அவள்தான் ஜென்னி.

ஜென்னியின் மூதாதையர்கள் பழமையான பிற்போக்குக் குடும்பத்தை சேர்ந்தவர்கள். பிரபு வம்சத்தினர். அவர்கள் ராணுவத்திலோ அரசாங்கத்திலோ முக்கியமான உத்தியோகங்கள் வகித்தனர். ஜென்னியின் தந்தை ட்ரீவ்ஸ் நகரின் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டு மார்க்ஸ் பிறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் அங்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது ஜென்னி இரண்டு வயதுக் குழந்தை. அதாவது மார்க்ஸின் காதலி அவரைவிட நான்கு ஆண்டுகள் வயதில் மூத்தவள்.

ஜென்னியின் குடும்பமும் மார்க்ஸின் குடும்பமும் அடுத்தடுத்து இருந்த வீடுகளிலே வசித்தனர். அதனால் இருவரும் பிள்ளைப்பருவம் முதலே ஒன்ருக வளர்ந்தனர். இருவரின் தந்தைமாரும் செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாயிருந்ததால் அவர்களுக்கிடையே உறுதியான நட்பு ஏற்பட்டிருந்தது. அது குழந்தைகளின் உள்ளத்திலே அரும்பிய நேச உணர்ச்சி வளர உதவிற்று.

மார்க்ஸ் பான் கல்லூரியிலிருந்து விடைபெற்றுக்கொண்டு கோடை விடுமுறையிலே ட்ரீவ்ஸ் வந்து தங்கியபோது அவரும் ஜென்னியும் சந்தித்துத் திருமணம் செய்து கொள்வதாக இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டனர். இச்செய்தியைமுதலாவதாகஅறிந்தவர் மார்க்ஸின் தந்தை ஹென்ரிக் மார்க்ஸ்தான். இதைப்பற்றிக் கேள்விப்பட்டதும்அவர் திடுக்கிட்டார். பரம்பரைப்பணக்காரரான வெஸ்ட் பேலன் பிரபு (ஜென்னியின் தந்தை) எங்கே? நேற்றைப் பணக்காரரான ஹென்ரிக் மார்க்ஸ் எங்கே? மலைக்கும் மடுவுக்கும் முடிச்சுப்போட முடியுமா? இதைப்பற்றி வெஸ்ட் பேலன் பிரபு



மனைவி: ஜென்னி

அறிந்தால் என்ன நினைப்பார்? தம்முடைய நட்புக்கும் கௌரவத்திற்கும் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாதல்லவா? இப்படி எல்லாம் நினைத்து அவர் கவலைப்பட்டார். மார்க்ஸ், பெர்லின் கல்லூரிக்குச் சென்ற பின்னும்கூட தந்தை அவருக்குப் பல கடிதங்கள் மூலம் இந்தச் சம்பந்தத்தின் அசம்பாவிதத்தை எடுத்துக் காட்டிக்கொண்டே இருந்தார்.

ஆனல் மார்க்ஸோ ஜென்னியோ, தாங்கள் செய்து கொண்ட முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை. மார்க்ஸ் தாம் சுயமாகச் சம்பாதிக்கிற வரை கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று தீர்மானித்தார். ஜென்னி அதுவரை காத்துக்கொண்டிருக்க முடிவு செய்தாள். காத்திருக்கவும் செய்தாள்—ஓராண்டு ஈராண்டுகளல்ல; ஏழு ஆண்டுகள் வரை தன் காதலனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்!

ஜென்னியின் அருங்குணத்திற்கு ஒப்பிடுவதென்றுல் வரலாற்றிலே ஒரு பெண்மணியின் சரிதம்கூடக் காணப்படவில்லை. வள்ளுவரின் மனைவி வாசுகியைப்பற்றிப் படிக்கிறேம். வாசுகி அம்மையார் உண்மையில் இருந்தாளா, எப்படி இருந்தாள் என்று நமக்குத் தெரியாது. ஆனல் வாழ்க்கை வரலாறுகள் தரும் சான்றிலே ஜென்னி அம்மையார் இன்னெரு வாசுகி அம்மையாராகக் காட்சி அளிக்கிருர். வறுமையை அவள் எவ்வளவு பொறுமையோடு சகித்துக் கொண்டாள்? நெஞ்சைப் பிளந்து பிய்த்தெறியும் துயரங்களை எப்படித்தாங்கிக்கொண்டாள்? மார்க்ஸோடு போகும் இடம் எல்லாம் போய் எப்படி அரும் துணை வகித்தாள்? —என்பனவற்றை அறியும்போது நம் உள்ளம் கசிந்து கண்ணீர் வடிக்கிறது. உரிய இடத்திலே அவற்றைப் பற்றி விரிவாய்க் கூறுவோம்.

ஜென்னியின் காதலும், சுயமாகச் சம்பாதிக்கிறவரையில் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று தாம் செய்துகொண்ட முடிவுமாகச் சேர்ந்து மார்க்ஸுக்கு, கல்வியிலே அளவு கடந்த

ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தன. பெர்லின் கல்லூரியில் சேர்ந்ததுமுதல் ஓயாது ஒழியாது படிக்கத் தொடங்கினர். சட்டம், சரித்திரம், பூகோளம், தத்துவம் முதலியவை மார்க்ஸின் பாடங்களாயிருந்தன. ஆனல் மற்ற எல்லாவற்றையும்விடத் தத்துவத்தின் மேல்தான் மார்க்ஸுக்கு அதிகமான அக்கரை. தந்தையோ சட்டம் பயிலும்படி அவரைத் தூண்டினர். தம்மைப் போல் மகனும் ஒரு வழக்கறிஞன் ஆகவேண்டும் என்பது அவர் ஆசை! ஆனல் பிறவியிலே தத்துவ ஞானியாய் பிறந்துவிட்ட அவரை வேறு வழியில் திருப்பிவிட யாரால்தான் முடியும்? தத்துவங்களைப் பயிலப் பயில மார்க்ஸின் சிந்தனையிலே சூறுவளிகள் கிளம்பத் தொடங்கின. பழமைக்கும் புதுமைக்கும் ஒரு போராட்டம்; தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் போராட்டம்; மாந்தர்களின் சாதாரண நம்பிக்கைக்கும் உண்மை அடிப்படைக்கும் போராட்டம்—இப்படிப் போராட்டமே சிந்தையராகத் தொடங்கினர். இந்தக் காலத்தில் தம் தந்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றில், "கவிதைகள், சட்டம், தத்துவம் ஆகியவற்றிலே நான் கருத்தைச் செலுத்தினேன். கல்வி என் உள்ளத்திலே உலக வாழ்க்கை எப்படி நடைபெறுகிறது என்பதற்கும் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்கும் இடையே கடுமையான போராட்டத்தை என் உள்ளத்திலே மூட்டிவிட்டது," என்று எழுதுகிறர்.

ஓயாத சிந்தனைகள், கவலைதேங்கிய, உறக்கமற்ற இரவுகள்—இவை மார்க்ஸை நோயாளியாக்கின. டாக்டர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளும்படி யோசனை கூறினர். இந்த ஓய்வுக் காலத்தில் மார்க்ஸ் அக்காலத்திலே பிரபலமாயிருந்த எகலின் தத்துவங்களைக் கற்றுணர்ந்தார்.

எகல் அந்தக் காலத்திலே குழம்பிக்கிடந்த தத்துவங்களை ஒரு வகைப் படுத்தினர். ஆனல் அவர் இன்னும் ஒரு கற்பனவாதி (*Idealist*) யாகவே இருந்தார். உலகம், மதம், அரசாங்கம் யாவுமே கடவுளின் படைப்பு என்றும் அவை தெய்வீக அம்சம் பொருந்தியவையாதலால் அவற்றை மனிதர்கள் ஒன்றும் செய்ய முடியாதென்றும் எகல் கூறினர். ஆனல் அவர் தத்துவங்களை விசாலப்படுத்தித் தெளிவு படுத்தியதானது, ஆர்வம் உள்ள இளைஞர்களையும் சிந்தனவாதிகளையும் மேலும் சிந்திக்கத் தூண்டியது. எகலின் கருத்துக்களிலேயே உள்முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, எகல் அப்படிக் கூறியிருந்தபோதிலும், அவருடைய தத்துவங்கள், இதற்கு நேர்மாறன பாதையில்தான் போகின்றன. மதம், அரசு, சமுதாயம் யாவுமே மக்களிடமிருந்துதான் பிறக்

கின்றன. இவற்றில் எதுவுமே மக்கள் சக்திக்கு விரோதமாகப் போக முடியாது, என்று இவர்கள் முடிவு கண்டனர். இவர்கள் **இடது சாரி எகலியவாதிகள்** என்று கூறப்பட்டனர்.

இந்தச் சமயத்தில் **லட்விக் புயர் பாச்** (*Ludwig Feuerbauch*) என்பவர் கற்பனை வாதத்தைத் தாக்கி 'பொருள் முதல் வாதத்தை' (*Malerialism*) ஆதரித்து தீவிரமான உணர்ச்சிவேகமுள்ள கட்டுரைகள் வரைந்தார். அவை இளைஞரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. உடனே மார்க்ஸ் உள்பட இடதுசாரி எகலியவாதிகள் எல்லோரும் **புயர்பாச்சிய வாதிகள்** ஆயினர். இப்பொழுதுதான் மார்க்ஸுக்கு எழுத்தாளர் **அடால்ப் ரூடென் பெர்க்**, சரித்திர ஆசிரியர் **பிரெடரிக் கோப்பன்**, சமய நிபுணர், **ப்ருனோபாயெர்**, முதலியோர்களின் தொடர்பேற்பட்டது. இவர்கள் அடிக்கடி 'பட்டதாரிகள் சங்கத்தில்' (*Diplomats Society*) கூடி விவாதித்து வந்தனர். மார்க்ஸின் பேச்சுத் திறமையும், கொள்கைத் தெளிவும், வாதம் செய்யும் முறையும் எல்லோரையும் கவர்ந்தன. நீண்டகால தத்துவப் பயிற்சியுடையவர்களும்கூட மார்க்ஸின் அறிவைக் கண்டு வியந்தனர். எல்லோருக்கும் அவர்மேல் ஓர் அலாதி அன்பும் பற்றும் உண்டாயின.

தத்துவப்பற்று முற்ற முற்றக் கல்லூரிப் படிப்பிலே மார்க்ஸுக்கு அக்கரை குறைந்தது. ஆயினும் ஒருவிதமாக மார்க்ஸ் 1841-ம் ஆண்டு பட்டம் பெற்றுக் கல்லூரியைவிட்டு வெளியேறினர்.

கல்லூரியை விட்டு விலகியதுமே மார்க்ஸ் எழுதிய தத்துவ சம்பந்தமானகட்டுரைஒன்றிற்காக ஜீனா சர்வகலாசாலை 'டாக்டர்' பட்டம் வழங்கிற்று. ஆனல் அந்தப் பட்டத்தை மார்க்ஸ் எப்பொழுதுமே உபயோகித்துக் கொண்டது கிடையாது!

## 3. வாழ்க்கைப் போர்க்களத்தில்...?

கல்லூரியை விட்டு விலகியதும் தம் சொந்த சம்பாத்தியத்திற்கு வழிதேடிக் கொள்ளவேண்டும் என்று மார்க்ஸ் விரும்பினர். நீண்டகாலமாகத் தமக்காகக் காத்திருக்கும் ஜென்னியைக் கைப்பிடிக்க அப்பொழுதுதான் இயலும். ஜென்னி பிரிவாற்றுமையால் மிகவும் துன்புற்றுக் கொண்டிருந்தாள். மார்க்ஸ் எப்பொழுதாவது எழுதும் கடிதங்கள்தான் அவளுக்கு ஆறுதலளிப்பவை. மேலும் துன்பத்தை நீடித்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? தவிர மார்க்ஸுக்கும் அவருடைய தந்தைக்கும் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. இதை எல்லாம் எண்ணி மார்க்ஸ் உத்தியோகம் பார்க்க விரும்பினர்.

ஆரம்பத்தில் பான் கல்லூரியில் ஓர் ஆசிரியராக அமர்வது மார்க்ஸின் நோக்கமாக இருந்தது. ஆனால் மாணவர்களிடையே முற்போக்குக் கருத்துக்கள் பரவி வருவதைத் தடுப்பதில் அக்கறை கொண்ட அரசாங்கங்கள் ஆசிரியர்களுக்குக் கடுமையான தடைகள் விதித்து வந்தன. முற்போக்காளர்கள் மேலும் ஆசிரியர்களாகப் பணியாற்ற இயலாதென்பதை உணர்ந்து தாங்களாகவே விலகிக்கொண்டனர். எஞ்சியிருந்த ஒன்றிரண்டு பேர்களும் தொல்லைகளுக்குள்ளாயினர். 1836-ல் லட்விக் புயர்பாச் கல்லூரியில் நுழையாது தடுக்கப்பட்டார். 41-ல் ப்ரூனோ பாயர் பான் கல்லூரியில் பேசமுடியாது தடுக்கப்பட்டார். மதபீடமும், அரசாங்கமும் ஆசிரியர்களைக் கொடும் குற்றவாளிகளைக் கண்காணிப்பதுபோல் கண்காணித்து வந்தன. இவையெல்லாம் எண்ணி மார்க்ஸ் ஆசிரியர் ஆகும் எண்ணத்தை விட்டுவிட வேண்டி வந்தது.

அந்தச் சமயத்தில் ரைன்லாந்து பிரதேசத்தில் இடது சாரி ஏகலிய வாதிகளுக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் சிறிது முற்போக்கு எண்ணம் படைத்தவர்களாயிருந்த முதலாளிகள் அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிப் பத்திரிகை ஒன்றைத் தோற்றுவித்து நடத்த ஏற்பாடு செய்தனர். அதன் விளைவாக 1842-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்றும் தேதில் 'ரைன்லாந்து கெஜட்' என்ற பத்திரிகை வெளிவந்தது. மார்க்ஸும், ப்ரூனோ பாயரும் இதற்குக் கட்டுரைகள் எழுத அழைக்கப்பட்டனர்.

பத்திரிகை தோன்றிப் பத்து மாதங்களுக்குப் பின்னல் மார்க்ஸ் அதன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். உடனே பத்திரிகையின் செல்வாக்கு வளர்ந்தது. வாசகர்கள் அதிகரித்தனர். மார்க்ஸின் காரசாரமான கட்டுரைகள் மக்களிடையே புதிய விழிப்பை உண்டு பண்ணின. அதுகாறும் அரசாங்கத்திற்காகவே மக்கள் இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கவேண்டும் என்று உணரத் தலைப்பட்டனர். எதிர்க்கட்சிப் பத்திரிகை ஒன்று செல்வாக்கு பெறுகிறதென்றல் உடனே அதை ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொள்வது புற்று நெஞ்சம் கொண்ட பிற்போக்கு அரசாங்கங்களின் முதல்வேலை ஆகிறதல்லவா? ரைன்லாந்து கெஜட் மாத்திரம் இந்த விதிக்கு எப்படி விலக்காகி விடமுடியும்? ஆரம்பத்தில் பத்திரிகைத் தணிக்கைச் சட்டங்களுக்குட்படுத்தப்பட்டது. ஒரு முறைக்கு மும்முறை தணிக்கை செய்யப்பட்ட பின்பே அனுமதிக்கப்பட்டது. ஆயினும் அதிகாரிகள் அத்தோடு விட விரும்பவில்லை. மார்க்ஸ் தம் ஆசிரியப் பதவியைத் துறந்தார். அதனல் கூடப்

பத்திரிகையைக் காப்பாற்ற முடியவில்லை. 1833-ம் ஆண்டு மார்ச் மாதம் பத்திரிகை மூடப்பட்டது.

தாம் ஆசிரியராக இருந்த குறுகிய காலத்திலே மார்க்ஸ் அரசாங்கம் என்றால் என்ன? ஆட்சி பீடத்திலே அமர்வோர் கடமைகள் யாவை? என்பனவற்றை மிக விளக்கமாகச் சுட்டிக் காட்டினார். உண்மையான ஒரு பத்திரிகை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கொரு எடுத்துக் காட்டாக இயங்கிற்று. மார்க்ஸின் நேர்மையும், துணிவும், ஆற்றலும் நன்கு வெளிப் பட்டன. தம் நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதத்திலே மார்க்ஸ்,

> "சுதந்திரத்திற்காக என்று சொல்லிக் கொண்டு, பல்லை இளிப்பது, கெஞ்சிக் கூத்தாடுவது, மிருக பலத்தைக் கையாள்வது, குதர்க்கம் செய்வது, கீழ்த்தரமாகப் பணிந்து போவது, இப்படிப்பட்ட வேலைகளைச்செய்வது, மகா தேவலம், அரசாங்கம் என்னை ஆசிரியப் பொறுப்பினின்றும் விடுதலை அடையச் செய்துவிட்டது......இனி நான் ஜெர்மனியிலே இருக்க வேண்டுமானால் எனக்கு நானே பொய்யனாக வேண் டும். என்னை நானே ஏமாற்றிக் கொள்ள வேண்டும்..."

என்று குறிப்பிடுகிறார்.

நேர்மையாக ஜெர்மனியிலே வாழ முடியாது என்று கண்டதும் மார்க்ஸ் அந் நாட்டை விட்டு வெளியேறி விடத் தீர்மானித்தார். ஏற்கெனவே அவருடைய தந்தை இறந்து போனதால் அவருக்கும் குடும்பத்திற்கும் தொடர்பிருக்கவில்லை. ஆனால் இன்னும் அவர் ஜென்னியைத் திருமணம் செய்து கொள்ளவில்லை! மணம் செய்து கொண்டாக வேண்டும், நாட்டை விட்டு வெளியேறியாக வேண்டும்-இந்த இரண்டு விஷயங்களும் மிக முக்கியமானவை யாக இருந்தன.

இந்தச் சமயத்தில் மார்க்ஸும் நண்பர்களும் சேர்ந்து வெளி யூர் சென்று பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து நடத்தத் தீர்மானித் தனர். இந்த விஷயத்தில் ஆர்னால்டு ரூஜ் என்பவன் அதிகமான ஊக்கம்காட்டினான். பாரிஸில் சென்று பத்திரிகையை ஆரம்பிப்பது, ஜெர்மன், பிரெஞ்சு இரண்டு மொழிகளில் பத்திரிகையை வெளி யிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ரூஜ் பத்திரிகை ஆரம்பிப் பதற்கான வேலைகளைச் செய்வதற்காகப் பாரிஸ் சென்றார். மார்க்ஸ் தம் குடும்ப விவகாரங்களைக் கவனிக்கலானார்.

1843-ம் ஆண்டு ஜூன் மாதம் பதின்மூன்றும் தேதி மார்க் ஸும் ஜென்னியும் க்ரூஸ்னாக் என்ற ஊரில் திருமணம் செய்து கொண்டனர். சிறிது காலம் க்ரூஸ்னாக்கிலேயே தங்கியிருந்த பின் மார்க்ஸும் மனைவியும் பாரிஸ் சென்று குடியேறினர்.

1844-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மார்க்ஸின் பத்திரிகையின் முதல் இதழ் ஜெர்மன் பிரெஞ்சு இரண்டு மொழிகளிலே வெளி வந்தது. ஆனால் அதுவே கடைசி இதழாகவும் போய் விட்டது. பத்திரிகையை ஜெர்மனிக்கு இரகசியமாய்க் கொண்டு போய் விற்பதென்பது முடியவில்லை. இதற்கிடையில் ரூஜுவுக்கும் மார்க்ஸுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விட்டது. பத்திரிகை இரண்டு மொழிகளிலே வெளிவர வேண்டும். உழைப்போ, அதிகம்! ஊதியமோ, கிடையாது! தவிர பத்திரிகை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் கைது செய்யவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது!

பத்திரிகை ஆரம்பிப்பதன் முன் மார்க்ஸுக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுக்க ரூஜ் ஒப்புக் கொண்டிருந்தான். இப் பொழுதோ அதற்கும் மறுத்து விட்டு நூறு பத்திரிகைப் பிரதிகளைக் கையில் கொடுத்து அதைவிற்று எடுத்துக் கொள்ளும்படிக் கூறி விட்டான். அந்நிய நாட்டிலே, இளம் மனைவியுடன் என்ன செய்வார் மார்க்ஸ்! ரைன்லாந்து கெஜட்டின் பழய நிர்வாகிகள் உபகாரச் சம்பளமாக ஒரு தொகையை அனுப்பி வைத்தார்கள். நண்பன் ஒருவன் புதிய பத்திரிகையின் நூறு பிரதிகளையும் எடுத்துக் கொண்டு கொஞ்சம் பணம் கொடுத்தான். மார்க்ஸ் இந்தக் குறைந்த தொகையை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்தியதும் அல்லாமல், ஏற்கனவே தனக்கும் பொருளாதாரத் துறையிலே நல்ல பயிற்சி இல்லை என்பதை அறிந்திருந்ததால் அதையும் கற்றுணர்வதிலே தீவிரமாக் ஈடுபட்டார்.

இந்தப் பத்திரிகையில் மார்க்ஸ் இரண்டுகட்டுரைகள் எழுதினர்: அவற்றிலேயே மார்க்ஸ் "ஒரு புரட்சிக்காரனுகத் தோற்ற மளிக்கிறர். பழமையை ஈவிரக்கமின்றித்தாக்குகிறர். பாமரர் களுக்கும் உழைப்பாளிகளுக்கும் அறை கூவல் விடுக்கிறர்." என்று லெனின் எழுதுகிறர்.

## 4. பாரிஸ் நகரில்

தொல்லையுடன் பாரிஸ் நகர வாழ்க்கை ஆரம்பித்தது. ஆயினும் மார்க்ஸ் மனந்தளர்ந்து போகவில்லை. பிரபுக்களின் வம்சத்தில் உதித்தவராயினும் அவருடைய மனைவி ஜென்னி எத்தகைய வறுமை நிலைமையிலும் கணவனிடம் முகங் கடுத்து ஒரு வார்த்தை பேசியது கிடையாது. அதற்கு மாருக ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து வந்தாள். 1844-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது:

எதிர் காலத்தைப் பற்றி என்ன செய்வதென்று சிந்தியாமலே மார்க்ஸ் படிப்பிலும் சிந்தனையிலும் காலம் கழித்து வந்தார்.

இந்தக் காலத்தில் மார்க்ஸுக்குப் பொது வாழ்க்கையில் ஈடுபடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாரிஸ் நகரத்தில் பல இரகசிய தொழிற் சங்கங்கள் இருந்தன. இவை ஜெர்மன் தொழிலாளர்களின் சங்கங்கள் என்றும் பிரெஞ்சுத் தொழிலாளர்களின் சங்கங்கள் என்றும் பிளவுபட்டுக் கிடந்தன. அந்நிய நாட்டிலே பிழைக்க வந்தவர்களான ஜெர்மன் தொழிலாளர்கள் எவ்வளவு குறைந்த சம்பளத்திற்கும் உழைக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்களிடம் வேலைத் திறமையும் காணப்பட்டது. இதனால் பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது கடினமாக இருந்தது. இது இருஇனத் தொழிலாளர்களுக்கும் இடையே பகைமையை மூட்டிவிட்டது. இதே சமயத்தில் இங்கு வசித்த இதர ஜெர்மனியர்கள், ஏழைத் தொழிளாளர்களான ஜெர்மானியர்களோடு, எந்த விதமான தொடர்புமே கொள்ளாமல் இருந்தனர்.

பொதுவாக இக்காலத்தில் தொழிலாளர்கள், மாணவர்கள், அன்னியர்கள் ஆகியவர்களுக் கிடையிலே சோஷலிசக் கருத்துக்கள் நிலவின. இவர்கள் சங்கம் கூடினர் கூட்டம் நடத்தினர். ஆவேசமாகப் பேசினர். சோஷலிஸம் சேரவும் முழக்கினர். ஆயினும் என்? கொள்கையிலே தெளிவோ, நடைமுறையிலே சோஷலிஸத்தை எப்படிக் கொண்டு வருவது என்பதோ யாருக்கும் எள்ளளவும் தெரிந்திருக்கவில்லை. மார்க்ஸ் இந்தக் கூட்டங்களிலே கலந்து கொண்டார். ஆனால் அனுபவத்திற்குப் பொருந்தாத, கற்பனையாகவே பேசப்பட்ட இந்தப் பேச்சுக்களிலே அவருக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. இவற்றிலே மார்க்ஸ் வெறும் பார்வையாளராக மட்டும் இருந்தாரே தவிர எந்த விதமான பங்கும் எடுத்துக் கொள்ளவில்லை.



நண்பர்: ஏஞ்செல்ஸ்

1844-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஏஞ்செல்ஸ் இங்கிலாந்தி லிருந்து தம் ஊருக்குச் செல்கிற வழியில் பாரிசில் வந்து சில நாட்கள் தங்கினர். இப்பொழுது மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் இரண்டாவது முறையாகச் சந்தித்தனர். ஏற்கெனவே மார்க்ஸ் கலோனில் ரைன் லாந்து கெஜட்டின் ஆசிரியராக இருந்த பொழுது இருவரும் சந்தித்திருந்தனர். ஆனல் அப்போதைய சந்திப்பு சுமுகமானதாக இருக்கவில்லை. இருவரும் தப்பபிப் பிராயம் கொண்டிருந்தனர். ஆனல் இந்தச் சந்திப்பு இரு வரையும் ஒன்ருகப் பிணைத்தது என்றே கூறலாம்.

ஏஞ்செல்ஸ் மார்க்ஸோடு பத்து நாட்கள் தங்கியிருந்தார். சோஷலிஸம் பற்றியும் இதர முக்கியமான விஷயங்களிலும் இரு வரும் ஒரே விதமான கருத்துடையவராயிருந்தனர். அது காறும் மார்க்ஸ் தம்முடைய சிந்தனைகளும் தாமுமாய் மனம் புழுங்கிக் கொண்டிருந்தார். மற்ற சோஷலிஸ வாய்ஜாலக்காரர்களோடு அவரால் எந்த விதத்திலும் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏஞ்செல்ஸின் தொடர்பு கிடைத்ததானது சிந்தனை அளவிலும் செயல் அளவிலும் உடனே செயலாற்றவேண்டும் என்கிற எண்ணத்தை உண்டாக்கின. மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் இரு வருமாகச் சேர்ந்து அப்பொழுது பாரிஸில் இருந்த எல்லா சோஷலிஸ குழுக்களிலும் பங்கெடுத்துக் கொண்டனர். பூர்ஷ்வா சோஷலிஸ்ட் தத்துவ வாதிகளோடு தர்க்கித்தனர். அக்காலத் திலே ப்ரௌதன்னுடைய கொள்கைகள் செல்வாக்குப் பெற் றிருந்தன. ப்ரௌதர்ன் **வறுமையின் தத்துவம்** என்ற நூலை எழுதியிருந்தார். அது உண்மையில் சோஷலிஸ தத்துவத்திற்கே புறம்பானதாக இருந்தது. அதைப் பற்றியும் தர்க்கிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தத் தர்க்கங்களின் விளைவாக பூர்ஷ்வா சோஷலிஸ தத்துவதற்கு மாற்ருக **பாட்டாளி சோஷலிஸ தத்துவத்தையும்** அதன் கொள்கைகளையும், போர்த்தந்திரங்களை யும் உண்டாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தொழிற் சங்கங்களிலே பங்கு கொள்ள ஆரம்பித்து, தொழிலாளர்கள் ஜெர்மன் தொழிலாளர்கள் என்றும் பிரிந் திருப்பதன் ஆபத்தை மார்க்ஸ் உணரலானர். தொழிலாளர்கள் அனைவரும் தொழிலாளர்கள் என்கிற முறையில் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும், இனத்தைச் சேர்ந்தவர்களா யினும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்என்பதுதான்மார்க்ஸிய தத்துவத்திற்கே அடிப்படை. ஆனல் மார்க்ஸ் இந்தத் தொழிற் சங்கங்களை ஒன்றுபடுத்தப் பாடுபட்டார்.

தவிர சோஷலிஸம் பேசுகிறவர்கள் தாங்கள் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டு பாமர மக்களை அணுகாதிருந்தால் அவர்களுடைய சோஷலிஸம் வெறும் வாய் வேதாந்தமாகப் போய்விடும் என்பதைச் சுட்டிக் காட்டினார். சோஷலிஸம் எழுத்திலும் தர்க்கத்திலும் மாத்திரமே அடங்கி விடக் கூடிய தத்துவம் அன்று; அது செயலிலே கடைப் பிடிக்க வேண்டியது; நடைமுறைக்கும் கொண்டு வரப்பட வேண்டியது; அதுவும் தொழிலாளிவர்க்கத்திலல்! எனவே சோஷலிஸப் படிப்பாளிகள் அனைவரும் தொழிலாளர்களுக்கிடையே சென்று வேலை செய்துதான் ஆகவேண்டும்– இதை மார்க்ஸ் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சமயத்தில் பாரிஸ் நகரத்தில் இருந்த சோஷலிஸப் படிப்பாளிகள் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கென்று ஒரு பத்திரிகை ஆரம்பித்தனர். அது பெயரளவில் சோஷலிஸ்ட் பத்திரிகையாக இருந்ததே தவிர உண்மையில் வெறும் பொழுது போக்குப் பத்திரிகையாகத்தான் இருந்தது. ஆயினும் மார்க்ஸ் இதற்குக் கட்டுரைகள் எழுதினார். இந்தக் கட்டுரைகள் ஜெர்மன் சர்வாதிகாரக் கோட்டைக்குச் சாவு மணி அடிப்பவையாக இருந்தன. கடவுள் பிரதிநிதி என்று கருதப்பட்டு வந்த ஜெர்மானிய மன்னன் பிரெடரிக் வில்லியம் என்பவனைப் பிற்போக்கின் கடைந் தெடுத்த பிரதிநிதி என்று மார்க்ஸ் தம் கட்டுரை ஒன்றிலே வருணித்தார். மக்களைப் புரட்சி வெறி கொள்ளச் செய்தார். இதை எல்லாம் கண்ட ஜெர்மானிய அரசாங்கம் அந்தப் பத்திரிகை தன் நாட்டின் எல்லைக்குள் வராது தடை செய்தது. அத்தோடு அந்தப் பத்திரிகையை அடக்கி விடும்படி பிரெஞ்சு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. அப்பொழுதைய பிரெஞ்சு அரசாங்கம், 'பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்கள்' என்று மார்க்ஸ் முதலானவர்கள் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது. மற்றவர்கள் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி இந்த உத்தரவிலிருந்து தப்பித்துக் கொண்டனர். தன்மான உணர்ச்சி உடையவரான மார்க்ஸ் மட்டும் மனைவி மக்களைக் கூட அழைத்துச் செல்லப்பட முடியாத நிலைமையிலே, அவர்களைப் பின்னல் வந்து சேரும்படி ஏற்பாடு செய்து விட்டுத் தாம் மட்டும் தனியாக 1845-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஐந்தாம் தேதி பெல்ஜியம் நாட்டின் தலைநகரான **பிரஸ்ஸல்ஸ்** (*Brussels*) வந்து சேர்ந்தார்.

## 5. ப்ரஸ் ஸெல்ஸில்...!

மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு வழங்கத் துடித்த ஒரு மா மேதையின்...மண்ணிலத்தைப் பொன்னிலமாக்கக் கனவு கண்ட ஒரு மெய் ஞானியின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பொழுது, பாரிஸில்...ப்ரஸ்ஸெல்ஸில்...லண்டனில்...என்று எழுதவேண்டியிருக்கிறது. நாடோடியாக அலைய வேண்டியிருந்த அவருடைய வாழ்க்கையைப் பற்றி எழுதும்போது நமக்கே மெய்சிலிர்க்கிறது. பாரிஸ் அவருக்களித்த வரவேற்பைப் பார்த்தோம். ப்ரஸ் ஸெல்ஸ் தந்த வாழ்வையும் பார்ப்போம்.

ப்ரஸ்ஸெல்ஸிற்கு வந்த வுடனே மார்க்ஸ் தாம் அங்கும் அமைதியாக வாழமுடியா தென்பதை உணர்ந்து கொண்டார். இருந்த போதிலும் முன்னெச்சரிக்கையாகத் தாம் அங்கு வசிக்க அனுமதியளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். அரசாங்கம் அவருக்கு அனுமதி அளித்தது, ஒரு நிபந்தனையின்மேல், எந்தவிதமான கட்டுரையோ பத்திரிகையோ வெளியிடுவ தில்லை என்று! வாயிருந்தும் ஊமையாக வாழ வேண்டிய நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை யூகித்துப் பாருங்கள். சிறைத் தண்டனையை விடக் கடுமையான தண்டனையாக இதைக் கருதினார் மார்க்ஸ்.

ஆனால் வேறு வழி இல்லை. ஜெர்மனியிலிருந்து அரசியல் காரணங்களுக்காக நாடு கடத்தப்பட்டவர்கள் பல்வேறு நாடுகளிலும் வசித்தார்கள். எல்லா நாடுகளிலும் அவர்கள் ஒரே விதமான கொடுமைகளுக்காளானார்கள். ப்ரஸ்ஸெல்ஸிலும் அவர்கள் கொடுமையாகவே நடத்தப்பட்ட போதிலும் இங்கு வாழ்வது கொஞ்சம் எளிதாக இருந்தது. எப்படியும் சிறிது காலமாவது பொறுமையுடன் இங்கு வாழ்ந்தாக வேண்டும் என்று மார்க்ஸ் தீர்மானித்தார். எல்லா இடமும் ஒரே மாதிரித் துன்பம் தருவதென்றால், பின் எங்கு தங்கினால் தான் என்ன ?

சொந்த நாட்டிலே அவரை வாழவிடாத தோடு, வேறு எங்கு சென்றாலும் அங்கும்வாழவிடாது தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தது ஜெர்மானிய அரசாங்கம். மார்க்ஸ் எந்தெந்த நாட்டில் நுழைகிறாரோ அந்தந்த நாட்டுக் கெல்லாம் அவரை நாடுகடத்தும் படித் தாக்கீது விடுத்துக் கொண்டிருந்தது. இந்தத் தொல்லை பொறுக்க முடியாமல் மார்க்ஸ் 1845-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தமது ஜெர்மானிய பிரஜா உரிமையைத் துறந்தார். மக்கள் அனைவருக்கும் பிரஜா உரிமைக்காகப் போராடிய ஒரு மேதை

தாம் எந்த நாட்டின் பிரஜா உரிமையும் இல்லாமலே மரிக்க வேண்டிய நிலைமைதான் ஏற்பட்டது.

1845-ம் ஆண்டில் **ஏஞ்செல்ஸும்** ப்ரஸ்ஸெல்ஸ் வந்து சேர்ந்தார். இருவருமாகச் சேர்ந்து அப்பொழுதைய அரசியல் பொருளாதார நிலைமைகளை அலசி ஆராய்ந்தனர். அவற்றைப் பற்றி ஒரு பெரிய நூல் எழுதவேண்டும் என்பது அவர்களின் திட்டமாக இருந்தது. மார்க்ஸ் இந்தக் காலத்தில் புத்தகக்கடலிலே மூழ்கிக் கிடந்தார் என்று சொல்லவேண்டும். இந்த உழைப்புத் தான் திட்டப்படி பெரிய நூல் ஒன்றை அப்போது வெளியிட உதவவில்லையாயினும் மனித இன வளர்ச்சியின் சரித்திரத்தின் சாரம்சம் என்று சொல்லத் தக்கதான கம்யூனிஸ்ட் அறிக்கை யைப் பின்னால் தயாரித்து வெளியிட உதவிற்று. (*Communist Manifesto*— ) கம்யூனிஸ்ட் அறிக்கை இதன் சுருக்கம் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் போலிச் சமவுடமைத் தத்துவங் களை அம்பலப்படுத்தி உண்மையான பொதுவுடமைக் கோட்பாடு களை விளக்கிப் பல துண்டுப் பிரசுரங்களை இந்தக் காலத்தில் வெளியிட்டனர். இவற்றிலே முக்கியமானது **ப்ரௌதானுடைய** வறுமையின் தத்துவம் என்ற நூலுக்கு மறுப்பாக மார்க்ஸ் எழுதிய **தத்துவத்தின் வறுமை** என்ற நூலாகும்.

ஆராய்ச்சி வேலை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மார்க் ஸும் ஏஞ்செல்ஸும் நாடுகள் பலவற்றிலும் சிதறிக் கிடந்த பொதுவுடமை விதிகளை ஒன்றுபடுத்தும் முறையில் ஈடுபடத் தீர் மானித்தனர். இருவருமாகச் சேர்ந்து லண்டன் சென்று அங் குள்ள பொதுவுடமை வாதிகளைச் சந்தித்துப் பேசினர். திருப்பி வருகையில் ஏஞ்செல்ஸ் இன்னும் பல ஊர்களுக்குச் சென்று வந்தார்.

இக்காலத்தில் தான் 'பொதுவுடமைக் கழகம்' (*Communist League*) தோன்றிற்று.

ஜெர்மனியிலிருந்து வெளியேறியவர்கள் லண்டன் முதலிய பல முக்கிய நகரங்களிலும் வசித்தார்கள் என்று கூறினேம். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாடுகடத்தப் பட்டோர் சங்கங்களை உண்டாக்கியிருந்தனர். இந்தச் சங்கங்கள் பிற்போக்கு உறைவிடங்களாய் அந்தந்த நாட்டின் ஆட்சிகளைத் திருப்திப்படுத்துவதே நோக்கமாய்க் கொண்டவைகளாய் இருந்

தன. எனவே இவற்றிலிருந்த தீவிரவாதிகள் பிரிந்து வேறு சங்கத்தைத் தோற்றுவித்தனர். அதற்கு, 'நியாயம் கோருவோர் சங்கம்', என்று பெயர். இவற்றில் பெரும்பாலும் தொழிலாளர் களே அங்கும் வசித்தனர். ஆயினும் அவை எந்தவிதமான முற் போக்கும் உடையவையாய் இருக்கவில்லை.

ப்ரஸ்ஸெல்ஸில் இருந்தகாலத்தில் மார்க்ஸ் அங்கிருந்த இந்தச் சங்கத்தின் கிளையோடு நாடுகடத்தப் பட்டவர் என்ற முறையிலே தொடர்பு கொண்டார். கடிதப் போக்கு வரத்தைக் கவனித்துச் சொல்லும் வேலை இவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. மார்க்ஸ் லண்டனிலிருந்து தலைமைச் சங்கத்திற்கு எழுதிய கடிதங்களில் கோட்பாடற்ற சங்கங்களால் பயன் ஏதும் விளைய முடியா தென்றும், பொதுவுடமையை ஒப்புக்கொண்டு சும்மா விருப்பது என்பது பயனற்ற தென்றும் எடுத்துக் காட்டினர். பொது வுடமை ஜீவனற்ற தத்துவம் அல்ல, 'இயங்கக் கூடியது; இயக்கப் படவேண்டியது, மார்க்ஸின் இந்த முயற்சி வீண்போக வில்லை. லண்டன் தலைமைச் சங்கத்தார் மார்க்ஸைச் சந்தித்துப் பேச ஒரு முக்கியமான ஆளை ப்ரசெல்ஸுக்கு அனுப்பினர். இந்தப் பேச்சின் விளைவாக, "நியாயம் கோருவோர்" சங்கம், 'பொது வுடமைக்கழகமாக, விரைவில் மலர்ச்சி அடைந்தது.

சங்கத்தின் அடிப்படைக் கொள்கை வகுக்கப்பட்டது. சட்ட திட்டங்கள் மாற்றியமைக்கப் பட்டன. ஒரு பூரண ஜனநாயக ஸ்தாபனம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படி அமைக்கப்பட்டது இந்தச் சங்கம். இவற்றைச் செய்து முடித்த லண்டன் முதலா வது மகாநாட்டில் மார்க்ஸ் கலந்து கொள்ள முடியவில்லை. ஏஞ் செல்ஸ் மாத்திரம் கலந்து கொண்டார். ஆனல் 1847-ம் ஆண்டு நவம்பர் டிசம்பர் மாதங்களில் கூடிய இரண்டாவது மகாநாட்டில் மார்க்ஸும் கலந்து கொண்டார். இந்த மகாநாட்டில் சங்கத்தின் விதிகள் முதலியவை இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டன. அத்தோடு பொதுவுடமைக் கட்சியின் நோக்கமென்ன வென்பதைத் திட்ட மாக விளக்கம் காட்டக்கூடிய ஓர் அறிக்கையைத் தயாரித்து வெளியிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு அந்த அறிக்கை யைத் தயாரிக்கும் பொறுப்பை மார்க்ஸ், எஞ்செல்ஸ் ஆகிய இருவ ரிடமும் ஒப்புவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர் மானத்தின் அடிப்படையில் 'தீட்டப்பட்டது' தான் கம்யூனிஸ்ட் அறிக்கை. மானிட சமுதாயம் தோன்றியது முதல் அன்று வரை அது அடைந்து வந்திருந்த வளர்ச்சிகளை, பிற்காலத்தில் அது அடையப் போகும் மாற்றங்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டிற்று அந்த அறிக்கை. ஏறக்குறைய நூற்றாண்டுகளுக்குப் பின் இன்று

படிக்கிற போதும் அதன் வாசகங்கள் அனுபவத்திற்கு எவ்வளவு பொறுத்த மானவையாக இருக்கின்றன என்பதைக் காணலாம். (கம்யூனிஸ்ட் அறிக்கையின் சுருக்கம் பிற்பகுதியி லிருப்பதைப் படித்துப் பார்க்க).

கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியான சில நாட்களுக்குள் பாரிஸ் நகரத்தில் ஒரு பெரும்புரட்சி உண்டாயிற்று. முடியரசு வெட்டி வீழ்த்தப்பட்டது. குடியரசு தோற்று விக்கப்பட்டது. 1848-ம் ஆண்டைப் புரட்சிகளின் ஆண்டு என்று குறிப்பதுண்டு. பிரான்சிலே புரட்சி வெற்றி பெற்றதைக் கண்டு உலகம் முழுவ திலுமிருந்த தொழிலாளிகள் தங்கள் விடுதலைக் கொடியை உயர்த் தினர். ஆஸ்திரியாவின் தலை நகரான **வியன்னுவிலும்** ஜெர்மனி யின் தலைநகரான **பெர்லினிலும்** தொழிலாளர்கள் ஆயுத மேந்திக் களத்திற்குக் கிளம்பினுர்கள். இத்தாலி முழுவதிலும், ப்ரஷ்யா வுக்கு அடிமைப்பட்டிருந்த போலந்திலும் பெரும் கலகங்கள் கிளம் பின. ஹங்கேரியர்கள் ஆஸ்திரியாவின் ஆட்சியை எதிர்த்துக் கிளம்பினர். இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்க ஆர்ப்பாட்டங்கள் கிளம்பின. பெல்ஜியத்தின் தலைநகரான ப்ரஸ்ஸல்ஸிலும் ஜன யெழுச்சிகள் தோன்ற ஆரம்பித்தன.

ப்ரஸ்ஸெல்ஸில் மூலைக்கு மூலை பொதுக் கூட்டங்கள் நடை பெற்றன. இவற்றில் நாடு கடத்தப்பட்ட ஜெர்மன் தேசபக்தர் கள்தான் முன்னணியில் நின்றனர். பெல்ஜியம் அரசாங்கத் திற்கு உள்ளூற நடுக்கம். எனவே பசப்பு வார்த்தைதளால் மயக்கத் தீர்மானித்தது. அப்பொழுது மன்னுக இருந்தவன் மக்கள் எண்ணத்திற்கு விரோதமாகத் தான் எதுவும் செய்ய விரும்பவில்லை என்றும் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு பதவியிலிருந்து விலகிவிடவும் தான் தயார் என்றும் கூறினுன். ஆனுல் அதே சமயத்தில் அரசாங்கம் மறைமுகமாகத் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதில் ஈடுபட்டிருந்தது.

அரசாங்கம் தன்னுல் எதிர்ப்பைச் சமாளிக்க முடியும் என்று தெரிந்து கொண்டவுடன் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடத் தொடங்கிற்று.

இந்தச் சமயத்தில் லண்டனில் பொதுவுடமைக் கழகத்தின் தலைமைக் காரியாலயத்தை—ப்ரஸ்ஸல்ஸுக்கு மாற்றிவிட்டு அதன் அங்கத்தினர்கள் புரட்சியின் விளைவுகளை நேரில் காண்பதற் காகப் பாரிஸ் சென்று விட்டனர். ப்ரஸ்ஸல்ஸில் பொதுவுடமைக் கழகத்தில் ஐந்து அங்கத்தினர்கள் இருந்தார்கள். ஆனுல் மார்க்ஸ்

ஒருவர்தான் உடலும் உயிருமாக இருந்தார். ப்ரஸ்ஸல்ஸில் நெருக்கடியான நிலைமை தோன்ற ஆரம்பிக்கவே ப்ரஸ்ஸல்ஸ் பொதுவுடைக் கழகத்தினர் தம் பொறுப்பை மார்க்ஸ் ஒருவருக்கே மாற்றிவிடத் தீர்மானித்தனர். இதற்கான கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் கழகத்தின் காரியாலயத்தைப் போலீசார் சூழ்ந்து கொண்டனர். போலீசார் அந்த இடத்தைப் பரிசோதனை செய்துகொண்டிருக்கையில் மார்க்ஸைத் தவிர மற்ற அங்கத்தினர்கள் தப்பிச்சென்றுவிட்டனர். மார்க்ஸ் மாத்திரமே அகப்பட்டுக்கொண்டார். மார்க்ஸைப் போலீஸ் கைது செய்து கொண்டு போயிற்று.

மார்க்ஸ் மனைவி ஜென்னி, மார்க்ஸின் விஷயமாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்வதற்காக பெல் ஜியம் ஜனநாயக சங்கத்தின் தலைவரான **ஜோட்ரான்ட்** என்பவரைப் பார்க்க சென்றாள். திரும்பி வந்துப்பார்க்கையில் வீட்டு வாசலில் ஒரு போலீஸ்காரன் நின்று கொண்டிருந்தான். மிகுந்த மரியாதையோடு "மார்க்ஸைப் பார்க்கவேண்டுமானால் என்னுடன் வாருங்கள்," என்றழைத்தான். ஜென்னியும் அவனுடன் வந்திருந்த ஜனநாயகக் கட்சி அங்கத்தினர் **கிகாட்** என்பவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றனர். அங்கிருந்த அதிகாரி ஜென்னியிடம் மரியாதைக் குறைவான முறையிலே பேசத் தொடங்கினார். இதைக் கண்டித்த **கிகாட்** சிறைக்குள் தள்ளப்பட்டார். ஜென்னியும் **வில்லே** சிறையில் விபசாரி களோடு சேர்த்து அடைத்து வைக்கப்பட்டாள்.

ஜென்னியின் உள்ளம் பட்ட வேதனையை வார்த்தைகளால் உரைக்கத்தான் முடியுமா? காவலர்களின் கீழ்த்தரமான பேச்சு; உடனிருந்த பெண் கைதிகளின் அருவருக்கத்தக்க நடத்தை...! ஜென்னி மனம் துடித்தாள்.

மறுநாள் பகல் பதினொரு மணிக்கு பலத்த காவலுடன் ஜென்னி விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். விசார ணைக்கு முன்பாக இரண்டுமணிநேரம் அவளைத்தனிக்கொட்டடியில் அடைத்து வைத்தனர். ஒன்றும் அறியாத சாதாரண மனிதர்கள் கூட இதைக் கண்டித்தனர். அதிகாரிகள் லட்சியம் செய்யவே இல்லை. விசாரணை செய்த மாஜிஸ்ட்டிரேட்டோ இதை விட ரொம் பவும் நீதி உள்ளம் படைத்தவர். அவர், குழந்தைகளையும் சேர்த்து கைது செய்யாத போலிஸாரின் காருண்யத்தை — வெகுவாகப் பாராட்டினார்! விசாரணை எப்படி நடந்திருக்கும் என்பதைக் கூற வேண்டுமா?

கடைசியாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அப்பொழுது ஏற்கெனவே இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என்று அரசாங்கம் அளித்திருந்த, உத்தரவின் காலம் முடிந்து விட்டது. அவசியமான தேவைப் பொருள்களைக் கூட எடுத்துக் கொள்ள முடியாமல் ஊரைவிட்டே ஓட வேண்டி வந்தது. கருணை உள்ளம் படைத்த போலீஸார் மார்க்ஸை நாட்டின் எல்லையில் கொண்டு வந்து விட்டுச் சென்றனர்.

## 6. பாரிஸ் கலோன் வழியாக...!

மார்க்ஸ் மீண்டும் பாரிஸ் வந்து சேர்ந்தார். புரட்சியில் வெற்றியடைந்த உற்சாகத்திலே பாரிஸ் ஆனந்தக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. மார்க்ஸ் புரட்சியின் சாதனைகளைக் கற்றுணர்வதிலே ஈடுபட்டனர்.

மார்க்ஸ் பாரிஸுக்கு வருவதற்குச் சிலவாரங்களுக்கு முன்பாக அங்கிருந்த ஜெர்மானியர் ஒரு திட்டம் தீட்டினர். பாரிஸில் வசித்த ஜெர்மானியர்கள் ஒரு படையாகத் திரண்டு சென்று ஜெர்மனியில் புரட்சியைக் கிளப்பிவிட வேண்டும் என்பது அது. மார்க்ஸ் இத்திட்டத்தை எதிர்த்தார். போதிய முன்னேற்பாடுகள் ஏதும் இல்லாமல் உற்சாகம் ஒன்றையே துணையாய்க்கொண்டு ஓர் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதென்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? அனுபவத்திற்குப் பொருந்தாத இத்தகைய திட்டங்களைக் கைவிட்டுத் தொழிலாளர்களுக்கு அரசியல் பயிற்சி அளிக்கும் வேலையில் ஈடுபட வேண்டும்; பாரிஸில் வசித்த ஜெர்மானியர்கள் தனித்தனியாக ஜெர்மனிக்குள் நுழைந்து ஒரு குறிப்பிட்ட திட்டப்படி பிரசாரம் செய்து மக்களைப் புரட்சிக்குத் தயார்ப் படுத்தவேண்டும் என்று மார்க்ஸ் கூறினர். மற்றவர்கள் மார்க்ஸின் வார்த்தைகளைக் கேட்டுக் கொள்ளவில்லை. கோழை என்று பரிகாசம் செய்தனர்.

1848-ம் ஆண்டு ஏப்ரல் ஒன்றும் தேதி இந்தப் புரட்சிப்பட்டாளம் ஜெர்மன் எல்லை நோக்கி நகர்ந்தது. ஜெர்மனிக்குள் நுழைந்தவுடனே முறியடித்துத் துரத்தப்பட்டது. உடனே ஆரம்பத்தில் சூரத்தனமாகப் பேசியவர்கள் அத்தனை பேரும் மனம் உடைந்து போனர்கள். ஆனல் மார்க்ஸ் இன்னும் காலம் கடந்து போகவில்லை என்று கூறினர். அரும்பாடுபட்டுத் தம் கட்சியில் சேர்ந்தவர்களை ஒன்று திரட்டிப் பதினேழு அம்சங்கள் கொண்ட வேலைத் திட்டம் ஒன்றையும் வகுத்துக் கொண்டு எல்லோரும் ஜெர்மனியில் மூலைக்கு மூலை சென்று பரவத் தீர்மானித்தனர்.

மார்க்ஸும் தம் பழைய உறைவிடமாகவிருந்த கலோன்நகரை நோக்கி நடந்தார்.

கலோன் நகரம் முக்கியமான தொழில் ஸ்தாபனங்களைக் கொண்டது. இங்கு பெரும்பான்மையான தொழிலாளர்கள் வசித்தனர். இதனாலேயே மார்க்ஸ் தம் பிரசார வேலைக்கு இந்த நகரை மீண்டும் தேர்ந்தெடுத்தார். இங்கே பொதுவுடமைக் கழகத்தின் கிளைக் காரியாலயம் ஒன்றிருந்தது. இதன் அங்கத்தினர்கள் வாரத்திற்கொருமுறை கூடி வம்பளப்பதல்லாமல் வேறு ஒரு காரியமும் செய்ய இயலாதவர்களாக இருந்தனர். இதிலே உற்சாகம் காட்டிய **கோட்ஷாக்** என்பவரும் திட்டபடி வேலை செய்யும் ஆற்றல் இல்லாதவராக இருந்தார். இந்தச் சங்கத்தை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாதென்று கண்ட மார்க்ஸ், பொதுவுடமைக் கழகம் தனக்களித்திருந்த விசேஷ அதிகாரங்களைக் கொண்டு அதைக் கலைத்து விட்டார். சங்கத்திற்குப் பதிலாக மீண்டும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்ற மார்க்கஸ் தீர்மானித்தார்.

ஏற்கெனவே இதே கருத்துடையவர்களாயிருந்த சிலர் ஒத்தாசை செய்ய முன்வந்தனர். அவர்களின் உதவியோடு தம் கையிலிருந்த சிறிதளவு பணத்தையும் போட்டு 1848-ம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்ரும் தேதி, "புதிய ரைன்லாந்து கெஜட்," என்ற பத்திரிகையை வெளிக் கொணர்ந்தனர். இத்தப் பத்திரிகையில் மார்க்ஸ் ஆதார பூர்வமாக, புள்ளி விவரங்களோடு உணர்ச்சியூட்டும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். பத்திரிகையின் தலையங்கம் மக்களின் நன்மைக்கு விரோதமாக இருந்த யதேச்சாதிகாரத்தையும், ராணுவ ஆதிக்கத்தையும் ஆவேசமாதத் தாக்கின. அந்நிய நாட்டுச்செய்திகளுக்கு இந்தப் பத்திரிகையில் முக்கியமான இடம் கொடுக்கப்பட்டது. யதேச்சாதிகாரத்தூண்களான ஜெர்மனியும் ரஷ்யாவும் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளும், இதனால் மக்கள் சக்தி அதிகரிக்கும் என்று மார்க்ஸ் துணிச்சலாகத் தீர்க்கதரிசனத்தோடு எழுதினர்.

பத்திரிகையில் எழுதியதோடு நில்லாமல் மார்க்ஸ் கலோன் தொழிலாளர்களின் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். தொழிலாளிகளிடையே பத்திரிகையின் செல்வாக்கு வளர்ந்தது. தொழிலாளிகள் விழிப்படைய ஆரம்பித்தனர். இதை எல்லாம் பார்த்துக் கொண்டு பத்திரிகைக்கு உதவிசெய்து வந்த பண மூட்டைகள் சும்மா இருப்பார்களா? அது காறும் பத்திரிகைக்குச் செய்து வந்த உதவிகளை நிறுத்தி விட்டார்கள். அச்சுக்கூடச்

சொந்தக்காரன் கடனுக்கு அச்சிட்டுத்தர முடியாதென்ருன். பணக் கஷ்டம் அதிகரித்தது. ஆயினும் மார்க்ஸ் சற்றும் தயங்கவில்லே. ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து தம் பத்திரிகைக்கு நிதி திரட்டிக் கொண்டு வந்தார் மார்க்ஸ்.

இச் சமயத்தில் உற்சாகம் கொண்டிருந்த தொழிலாளிகளின் மீது பிற்போக்குப் பிண்டங்களான ராணுவ அதிகாரிகள் ராணுவத்தினரை ஏவி விட்டனர். துருப்பினருக்கும் தொழிலாளருக்கும் இடையே சிறுசிறு கலவரங்கள் நிகழ்ந்து வந்தன. இந்த அக்கிரமச் செயல்களேக் கண்டிக்கும் பொருட்டு கலோன் நகரில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதோடு நகரப் பாதுகாப்பு ஏற்பாடுகளேச் செய்ய முப்பது பேர் கொண்ட கமிட்டி ஒன்றும் நிறுவப்பட்டது. மார்க்ஸ் இந்தக் கமிட்டியிலும் அங்கம் வகித்தார்.

இந்த நிலேயில் பிற்போக்குப் பெட்டகமான ப்ரஷ்ய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே நாளுக்கு நாள் பிளவு அகன்று கொண்டே வந்தது. மக்கள் பல மாகாணங்களாகச் சிதறுண்டு கிடந்த ஜெர்மனியை ஐக்கியப்படுத்த வேண்டும் என்று கோரினர். ப்ரஷ்ய மாகாண அரசாங்கம் ஜெர்மனியின் இதர மாகாண அரசாங்கங்களுக்கு விரோதமாக, ஜெர்மனியின் நலனுக்கே விரோதமான ஓர் உடன்படிக்கையை டென்மார்க்குடன் செய்து கொண்டது. இதைக் கேட்டதும் மக்கள் கொந்தளித்தெழுந்தனர். யதேச்சாதிகார வெறியில் குருடாகப் போயிருந்த ப்ரஷ்ய அரசாங்கம் மக்களேக்கொடுமையான அடக்கு முறைகளுக்காளாக்கிற்று. பத்திரிகைகள் நின்றன. பலர் கைது செய்யப்பட்டனர். ரைன்லாந்து கெஜட்டும் தடை செய்யப்பட்டதென்று சொல்லத் தேவை இல்லே. ஆனல் மார்க்ஸின் மேல் சாட்டப்படக்கூடிய குற்றம் எதுவும் இல்லாமையால் அவர் கைது செய்யப்படவில்லே.

இந்த அடக்குமுறை அதிக காலம் நீடிக்கவில்லே. பிற்போக்குவாதிகள்கூட இதைக் கண்டித்தனர். அரசாங்கம் தன் நடவடிக்கைகளே நிறுத்திக் கொள்ளவேண்டி வந்தது. ரைன்லாந்து கெஜட் மீண்டும் வெளிவரத் தொடங்கிற்று. மக்கள் உற்சாகத்தோடு வரவேற்றனர். இந்தச் சமயத்தில் மார்க்ஸ் தொழிற்சங்கத் தலேவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடக்கு முறையை வாபஸ் வாங்கிக் கொண்ட போதிலும் ப்ரஷ்ய அரசாங்கம் சும்மா இருக்கவில்லே. ஜனங்களுக்கிருந்த

அபிப்பிராயம் கூறும் உரிமையைக்கூடப் பறித்துவிடும் முறையில் சட்டசபையைக் கலைத்தது. வேறு எதுவும் செய்யச் சக்தியற்ற தாகவிருந்த சட்டசபை, அரசாங்கத்திற்கு யாரும் வரி செலுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு கலைந்தது. இந்த வரி கொடா இயக்கத்தை ஆதரித்து மார்க்ஸ் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

எதிர்ப்புக் காட்டிய மக்களை ப்ரஷ்ய அரசாங்கம் மிகவும் கொடுமைப் படுத்த ஆரம்பித்தது. பெர்லின், கலோன் முதலிய நகரங்கள் ராணுவமயமாயின. செறுக்குக் கொண்டிருந்த ராணுவத்தினர் மக்களைத் துன்புறுத்தினர். மார்க்ஸ் ராணுவத்தினர் செய்த தொல்லைகளை எல்லாம் சற்றும் தயங்காமல் தன் பத்திரிகையில் விவரமாக வெளியிட்டார். இதைக் கண்ட ராணுவத்தினர் மார்க்ஸின்மேல் ஆத்திரம் அடைந்தனர்.

ஒருநாள் ரைன்லாந்து கெஜட் காரியாலயத்தின் முன் இரண்டு ராணுவ அதிகாரிகள் குடித்து விட்டுக் கலாட்டா செய்ய வந்தனர். மார்க்ஸ் அவர்களை அமைதியாக வரவேற்றார். அவருடைய சட்டைப்பையிலிருந்து தலைநீட்டிக் கொண்டிருந்த கைத்துப்பாக்கியைக் கண்டதும் அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் கம்பி நீட்டினர்.

அரசாங்கம் மார்க்ஸை எப்படியாவது பிடித்துச் சிறைக்குள் தள்ள வேண்டும்; இல்லையோ, நாடுகடத்த வேண்டும் என்று தீர்மானித்தது. சட்டவிரோதமான விஷயத்தை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி அவரைக் கைது செய்து கொண்டு போயிற்று. இதைக் கேள்விப்பட்ட தொழிலாளர்களும் பொதுமக்களும் ஆயிரக் கணக்கில் அணிதிரண்டு கோர்ட்டின் முன் சென்று கூடினர். 'மார்க்ஸை விடுதலை செய்' என்று கோஷமிட்டனர். போலீஸில் மார்க்ஸை மக்கள் முன் கொண்டு வந்த நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மார்க்ஸ் ஒரு பிரசாங்கம் செய்து மக்களைக் கலைந்து போகுமாறு கேட்டுக் கொண்ட பின் தான் அவர்கள் கலைந்து சென்றனர். மார்க்ஸுக்கு மக்களிடத்திலே உள்ள செல்வாக்கை உணர்ந்த அரசாங்கம் மேலும்மேலும் அவர்மேல் வழக்குகள் தொடர்ந்தும் இன்னும் பல விதத்திலும் துன்புறுத்திக் கொண்டே இருந்தது. ஆனால் எந்தக் குற்றச் சாட்டும் மெய்ப்பிக்கப்பட வில்லை. மறைமுகமான வழியில் மார்க்ஸையும் பத்திரிகையையும் தடுத்து நிறுத்த முடியாமல் போகவே, அரசாங்கம் நேரடியான தாக்குதல் தொடுக்க விரும்பி 1849-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதி நாடுகடத்தல் உத்தரவு

பிறப்பித்தது. 18-ம் தேதி புதிய ரைன்லாந்து கெஜட்டின் கடைசி இதழ் சிவப்பு மையால் அச்சிடப்பட்டு வெளி வந்தது. "வாசகர்களே, விடைபெற்றுக் கொள்கிறோம். ஆனால் கடைசி முறையாக அல்ல......" என்ற வாசகத்துடன் வெளி வந்த இந்த இதழைப் பெறுவதற்காக மக்கள் முண்டியடித்துக் கொண்டு பத்திரிகாலய வாயிலிலே நின்றனர். இருபதினாயிரம் பிரதிகள் செலவாயின. பத்திரிகையைப் பலபேர் கண்ணாடி போட்டு வைத்தனர் என்றால் மார்க்ஸுக்கும் பத்திரிகைக்கும் இருந்த செல்வாக்கைப் பற்றிக் கூறவும் வேண்டுமா ?

ஏற்கெனவே, மார்க்ஸ் பணக் கஷ்டத்தால் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தார். கடன் வேறு ஆளைப் பிடுங்கிக் கொண்டிருந்தது. நாடு கடத்தல் உத்தரவு கிடைத்தவுடன் அச்சாபீஸை விற்றுக் கடன்காரர்களுக்குக் கொடுத்தார். பாத்திரம் பண்டங்களை விற்றுக் குடும்பச்செலவுகளையும் பிரயாணச் செலவுகளையும் செய்யவேண்டி வந்தது.

மார்க்ஸ் மீண்டும் பாரிஸ் வந்து சேர்ந்தார். ஒரு மாதம் கழித்துத்தான் மனைவி மக்கள் வந்து சேர்ந்தனர். ஆனால் இந்த ஓராண்டுக்குள் பாரிஸில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. குடியரசின் சேனைகள் தோல்வியுற்று வந்தனர். மக்கள் சோர்வுற்றுப் போயிருந்தனர். நிலைமை ஒரே குழப்பமாக இருந்தது. மேற்கொண்டு என்ன செய்வதென்றறியாமல் மார்க்ஸ் திகைத்துக் கொண்டிருந்தார். அவ்வளவு சங்கடத்தில் விட்டு வைக்க அரசாங்கம் விரும்பவில்லை. இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற உத்தரவை ஒரு 'நல்லநாள் காலையில்' அதிகாரி ஒருவன் கொண்டு வந்து நீட்டினான்.

என்ன செய்வது ? எங்கு போவது ? மனைவியோ, பூரண கருப்பவதி! குழந்தைகளோ, சின்னஞ் சிறியவை! மார்க்ஸ் தவித்தார். 'நாடு கடத்தல்' உத்திரவை ரத்து செய்து கொள்ள முயன்றார். ஆனால் அரசாங்கம் சம்மதிக்க வில்லை. வேண்டுமானால் அவர் மனைவி மக்கள் மாத்திரம் தங்கலாம் என்று கூறப்பட்டது. இல்லாவிட்டால் சதுப்பு நிலப் பிரதேசத்தில் இருந்த வான்னெஸ் நகரத்திற்குப் போகும்படிக் கட்டளையிட்டது. அங்கு போவது தற்கொலைக்கு ஒப்பானது எனவே, வேறு வழியின்றி லண்டனை நோக்கிப் புறப்பட்டார்.

## 7. லண்டன் வந்து சேர்ந்தார்!

1849-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் தேதி மார்க்ஸ் லண்டன் வந்து சேர்ந்தார். செப்டம்பர் மாதம் 15-ம் தேதிதான் ஜென்னியும் குழந்தைகளும் வந்து சேர்ந்தனர்.

கையிலே காசில்லாமல் நாடுவிட்டு நாடு ஓடிவந்து சேர்ந்த ஒருவரின் வாழ்க்கை எப்படி இருக்கும்? லண்டன் நகரத்திலே மார்க்ஸ் அனுபவித்த தொல்லைகளைப் பற்றி நினைக்கவே மனம் கூசும். அதிலும் அவர் பெரும்பாலும் மற்றவரைப்பற்றிச் சிந்திப்பவராய் இருந்தாரே தவிர நம்மைப்பற்றிச் சிந்தித்ததே இல்லை!

லண்டன் நகரிலே ஜெர்மானியத் தொழிலாளர்கள் பலர் வசித்தனர். ஆனால் இவர்கள் வாழ்க்கையோ மிகவும் பரிதாபகரமானது. உண்ண உணவு இல்லை; உடுக்க உடை இல்லை; இருக்க இடமில்லை - என்ற நிலைமையிலே இவர்கள் அனாதைகளாகத் திரிந்தனர். லண்டன் வந்து சேர்ந்ததும் இவர்களுடைய பரிதாபகரமான நிலைமை மார்க்ஸின் மனத்தைப் பெரிதும் வாட்டிற்று. உடனே அவர் தம் நண்பர்கள் சிலரின் உதவியைக்கொண்டு சங்க ஒன்று ஏற்படுத்தினார். இந்தச் சங்கத்திற்கு ஜெர்மன்தொழிலாளர்கள் எங்கெங்கு வசித்தார்களோ அங்கெல்லாம் கிளைகள் தோற்று விக்கப்பட்டன. மார்க்ஸ் ஓயாமல் ஒழியாமல் தினந்தோறும் முக்கியமான பிரமுகர்களைச் சென்று சந்தித்து இவர்களுடைய குறைகளைப் போக்க ஏதாவது செய்யும்படி கேட்டுக்கொள்வார். நன்கொடையாகக் கிடைத்த தொகைகளை அவரவர்களுக்கு உரிய முறையில் பகிர்ந்து கொடுப்பார். யார் யாரை வேலைக்குச் சேர்க்க முடியுமோ அவர்களையெல்லாம் வேலையில் சேர்க்கவும் பாடு பட்டார்.

1848-ம் ஆண்டுப் புரட்சிச் சூறாவளிக்குப் பின் பொதுவுடைமைக் கழகம் பல நாடுகளிலும் உடைந்து தகர்ந்து விட்டது. ஆனால் மார்க்ஸ் லண்டன் கழகத்தை உயிரோடு காப்பதற்காக மிகவும் போராடினார். ஆனால் இதன் அங்கத்தினர்களாகச் சேர்ந்த பெரும்பாலான தொழிலாளர்கள் அன்றாடப் பிரச்னைகளைப் பொருத்த வரையில் அக்கறை காட்டினார்களே தவிர, சமுதாய தத்துவத்தைப் புரிந்து கொண்டு பாட்டாளி சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கான ஒரு நீண்டகாலப் போராட்டத்திற்குத்தயாராக வேண்டும் என்று உணரவில்லை. பலர் திட்டமிட்ட புரட்சிக்குப் பதில் சதிச் செயல்களாலேயே அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும்

என்று கருதினர்கள். இதனையெல்லாம் மார்க்ஸுக்கும் மற்ற வர்களுக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டு வந்தது.

மார்க்ஸ் இந்தச் சமயத்தை, மேற்கொண்டும் தமது ஆராய்ச்சி அறிவை வளர்த்துக்கொள்ளப் பயன் படுத்தினர். அரசியல் பொருளாதார தத்துவத்தைக் கற்றுணரவும் தமது வாழ்வுச் சாதனையாகக் கருதிய 'மூலதனம்' (*Capital*) நாலைத் தயாரிப்ப தற்கு வேண்டிய கருத்துக்களைச் சேகரிப்பதற்காகப் பன்மொழி பயிலவும் தொடங்கினர்.

இங்கிலேயில், கலோன் நகரிலிருந்த பொதுவுடமைக் கழகத் தின் காரியாலயத்தை ப்ரஷ்யப் போலீஸார் கண்டுபிடித்து விட்ட னர். முக்கியமான கடிதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பதி னொரு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மேல் குற்றப் பத்திரிகை தயார் செய்வதற்கு மாத்திரம் போலீஸாருக்குப் பதி னெட்டு மாதங்கள் பிடித்தனவாம். சமுதாயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று கருதியதல்லாமல் வேறு குற்றம் செய்யாதவர்கள்மேல் என்ன குற்றம் சாட்டமுடியும்? ஆனல் அரசாங்கம் குற்றச்சாட்டி கண்துடைப்பு விசாரணை ஒன்றும் நடத்தியது; மார்க்ஸ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக மிகவும் உழைத்தார். சுமார் இருபது மாத காலம் இதற்காகப் போராட வேண்டியிருந்தது. ஆயினும் பயன் ஏற்படவில்லை. ஏழுபேர் மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரைப் பல விதமாகச் சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டனர். நான்குபேர் விடுதலை செய்யப்பட்டனர். இதன் பிறகு மேற்கொண்டு பொதுவுடமைக் கழகத்தால் எந்தவிதமான செயலாற்றவும் முடியாதென்றறிந்து மார்க்ஸ் அதைக் கலைத்துவிட்டார். அதன் பிறகு மற்ற சங்கங் களிலிருந்தும் விலகிக்கொண்டு, தம் ஆராய்ச்சி வேலையிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தத் தொடங்கினர்.

இந்தச் சமயத்தில் மார்க்ஸ் பத்திரிகைகள் பலவற்றிற்குத் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தார். அவற்றில் 'நியூயார்க் ட்ரிப்யூன்' என்ற அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுதான் அவருக்கு ஏதாவது சன்மானமளித்து வந்தது. ஆரம்பத்தில் கட்டுரை ஒன் றிற்கு ஒரு பவுன் வீதமும் பின்னல் இரண்டு பவுன்கள் வீதமும் கொடுத்தது. ஐரோப்பிய அரசியல் விவகாரங்கள் சம்பந்தமாக மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் மக்களிடையே அமோகமாக வரவேற்கப்பட்டதால் இந்தப் பத்திரிகை பின்னல் மார்க் ஸையே ஐரோப்பிய விவகார கட்டுரையாளராக நியமித்தது.

இந்தச் சமயத்தில்தான் மார்க்ஸ் இந்தியாவைப்பற்றிச் சில புகழ்பெற்ற கட்டுரைகள் எழுதினர். ஆரம்பத்தில் இந்திய சமுதாய நாகரிகம் எப்படி இருந்தது, அந்நிய ஆட்சியால் அதில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன, இன்னும் எத்தகைய மாற்றங்களை நோக்கி அது வளர்ந்து செல்லும் என்பவை பற்றி எல்லாம் மார்க்ஸ் நூருண்டுகளுக்கு முன்பு எழுதிய கட்டுரைகள் இன்று படிக்கும்போதும் எவ்வளவு உண்மையானவையாய் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

'நியூயார்க் ட்ரிப்யூன்' அளித்த சன்மானத் தொகை ஒன்று தான் வருமானம். அதுவும் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. ஒரே மாதிரியாகவும் இருக்கவில்லை இதைக்கொண்டு லண்டன்மாநகரில் எப்படித்தான் உயிர் வாழ முடியும்? மார்க்ஸ் எப்படியாவதுஉயி ரோடிருக்க வேண்டுமே என்பதற்காகவே அறிஞர் எஞ்செல்ஸ் மீண்டும் மாஞ்செஸ்டர் கார்டியன் தொழிற்சாலையில் குமாஸ் தவாக அமர்ந்தார். ஆனல் அந்த உதவியும் குடும்பத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவு கிடைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் மனைவி மக்களை உயிரோடு வைத்திருக்க, அவர்களுக்கு உணவு கொடுக்க, மார்க்ஸ் பட்டபாடு சொல்லமுடியாது. குடும்பச் செலவுக்காக ஒரு சமயம் தன் மேல் சட்டையை அடமானம் வைத் தார்! சட்டை இல்லாததால் பல நாட்கள் வரை வெளியே போக முடிய'வில்லை. சிறு குழந்தையின் பூட்ஸ் ஒரு முறை அடமானக் காரன் கடையைப் பார்வையிடச் சென்றது. வீட்டிலே உள்ள எந்தச் சாமானுமே அடமானக் கடை போய் வராததாக இருக் காது. குழந்தைகளுக்கும் மனைவிக்கும் மார்க்ஸின் குடும்பத் தோடு ஐக்கிய மாகிவிட்ட வேலைக்காரி ஹெலன் டெமத்துக்கும் நாட் கணக்கில் சரியான உணவு கிடைக்காது. ரொட்டியும் உருளைக்கிழங்கும் கூடக் கிடைக்காமல் குழந்தைகள் வாடிய நாட்கள் பலப் பல. மார்க்ஸ் கட்டுரை எழுதி வைத்திருப்பார். அதைப் பத்திரிகைக்கு அனுப்பத் தபால் தலைகள் வாங்கக் காசிருக்காது!

எவ்வளவு தொல்லைகள் வந்த போதிலும் சற்றும் மனம் தளராது தன் கணவனுக்குச் சேவை செய்வதொன்றே லட்சிய மாகக் கருதி அல்லும் பகலும் உழைத்து வந்தாள் ஜென்னி. வறுமையும் துன்பமும் அவள் உடல் நலத்தைப் பாதித்தன. முதுகு வலி, நெஞ்சுவலி, சாப்பாடு கிடையாது; இந் நிலையிலும் பசிக்கு அழும் குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும்; குழந் தைக்குப் பாலும் வராது; தாயின் இரத்தமே பீறிக்கொண்டு வரும்! படுக்கைகளைக் கூட விற்றாயிற்று. குளிரிலே வெறும்

தரையிலே படுக்க வேண்டும். ஆனாலும் இவ்வளவு துன்பங்கள் மத்தியிலும் எந்த நிலையிலும் அவள் தன் கணவனைக் கடிந்து கொண்டதே கிடையாது! அவருடைய கருத்துக்களைப் பெற்றுக் கொள்கிறவர்கள், அவருடைய பத்திரிகைக்குக் கூடச் சரியாக உதவ முடியவில்லையே என்ற துன்பம்தான் அவள் உள்ளத்தை வாட்டிற்று. சில்லறைத் தொல்லைகளால் அவதியுற்றுத் தன் கணவர் பெரும் வேலைகளைச் செய்ய முடியாமல் போகிறதே என்றுதான் அவள் வருந்தினாள். எஞ்செல்ஸ் இல்லாவிட்டால் மார்க்ஸால் தம் ஆராய்ச்சி வேலைகளைச் செய்தே முடித்திருக்க முடியாதென்பது உண்மை. ஆனால் ஜென்னி இல்லாவிட்டால் அவரால் உயிருடனே இருந்திருக்கவே முடியாது!

வறுமையோடு போராடிக் கொண்டிருக்கையில் ஒருநாள் மார்க்ஸ் குடியிருந்த வீட்டுக்காரி, உண்மையில் அவளுக்கு வாடகை வசூலிக்கும் உரிமை இல்லாதிருந்தும், ஏலம் போடுகிற தரகர்கள் சகிதம் வீட்டிற்குள் வந்து நுழைந்து விட்டாள். குழந்தையின் விளையாட்டுச் சாமான்கள் உட்பட எல்லாவற்றையும் பொறுக்கிக்கொண்டு சற்றுநேரத்திற்குள் ஐந்து பவுன் கொடுக்காவிட்டால் அவற்றை ஏலம் போட்டு விடுவதாக உறுமினாள். குழந்தைகள் நடுங்கி அழத் தொடங்கிவிட்டன. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போய் அமர்ந்து விட்டார் மார்க்ஸ். மார்க்ஸின் நண்பர் ஒருவர் எங்காவதுபோய் உதவிபெற்று வரலாமென்று ஒரு குதிரை வண்டியைப் பிடித்துக்கொண்டு கிளம்பினார். குதிரை, வண்டியைக் கவிழ்த்து விட்டு ஓட்டம் பிடித்தது. உடம்பெல்லாம் இரத்தக் காயத்துடன் அவர் திரும்ப வேண்டியதாயிற்று.

மறுநாள் கொட்டும் மழையில், கொல்கிற குளிரில் அந்த வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. வேறு வீடு பிடிப்பதோ அதைவிடச் சிரமமாக இருந்தது. நான்கு குழந்தைகள் உடைய குடும்பத்திற்கு யாரும் வீடு கொடுக்கத் தயாராயில்லை! கடைசியாக நண்பர் ஒருவர் மனமிரங்கிச் சிறிது பணம் உதவினார். ஆனால் வீட்டிற்குள் ஏலக்காரர்கள் நுழைந்து விட்ட செய்தி கேட்டதும் கடன்காரர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டனர். தங்கள் படுக்கைகளை விற்றுக் கடன்காரர்களுக்குக் கொடுக்கலாம் என்று தீர்மானித்துப் படுக்கைகளை வெளியே எடுத்துக் கொண்டு போனதும் வீட்டுக்காரன் போலீஸை அழைத்துக் கொண்டு வந்து விட்டான். லண்டனில் விளக்கு வைத்தபின் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சாமான்களை எடுத்துச் செல்வது சட்ட விரோதமாகும்! போலீஸ் வந்தவுடனே வீட்டின்

வாசலில் கூட்டம் கூடி விட்டது. அவமானம்...! அவமானம்...! மார்க்ஸ் வாழ்ந்த வாழ்க்கையைப்பற்றி வர்ணிப்பதென்றால் நம் உள்ளமே துடித்து வெடித்து விடும்போல் இருக்கிறது!

மறுநாள் காலை படுக்கைகளை விற்றுக் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்துப், பின் வேறு இடத்தில் சென்று குடியேறினார். அங்கு வாடகை அதிகம். அதனால் மார்க்ஸ் ஏழைகள் வசிக்கும் ஸோஹோ என்ற இடத்தில் வீடு பிடித்தார். மகாமோசமான அசங்கியமான இடம் இது. தொத்து நோய்களுக்கெல்லாம் உறைவிடம். இரைச்சலும் அழுக்கும் துர்நாற்றமும் நிறைந்தது. இந்த இடத்தில் ஒரு வீட்டில் இரண்டு அறைகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதில் ஆறு ஆண்டுகள் வாழ்ந்தார் மார்க்ஸ். அப்பப்பா......அப்போது அவர் பட்ட தொல்லைகள் சொல்லவே முடியாது. வறுமையின் அதல பாதாளத்திலே, பாதாளத்தின் எல்லைக்கே இறங்கி விட்டார் மார்க்ஸ். இங்கு வசிக்கையில்தான் இவருடைய மூன்று குழந்தைகள் சாவின் பிடியில் அகப்பட்டன.

சிறிய குழந்தை ஒன்று மார்ச்சளியினால் இறந்துவிட்டது. மூன்று நாட்கள் அது யமனோடு போராடிக் கொண்டிருந்தது பார்க்கச் சகிக்கமுடியாமல் இருந்தது. ஆனால் அது இறந்த பின்னே, அதைக் கொண்டுபோய் அடக்கம் செய்யச் சவப் பெட்டி வாங்கக்கூட கையிலே காசில்லை! நண்பர் ஒருவர் வந்து பார்த்தார். ஆனால் அவரும் எதுவும் செய்யக்கூடிய நிலைமையிலே இல்லை. மார்க்ஸின் மனைவி ஒரு கடிதத்தில், "அந்தக் குழந்தை பிறந்தபோது தொட்டில் இல்லை! இறந்தபோது சவப் பெட்டி இல்லை!" என்று எழுதுகிறாள். நினைக்கவே நம் நெஞ்சம் குமுறுகிறது. அந்தத் தாயின் உள்ளம் என்ன பாடு பட்டிருக்கும்? பக்கத்தில் வசித்த ஒரு பிரஞ்சுக்காரர், இவர்களைப் போல் நாடு கடத்தப்பட்டவர், கொடுத்த இரண்டு பவுன்களைக் கொண்டு அந்தக் குழந்தையை அடக்கம் செய்ய வேண்டியிருந்தது! மார்க்ஸ் வாழ்ந்த வாழ்வைப்பற்றி ஜெர்மானிய ஒற்றன் ஒருவன் எழுதிய குறிப்பில் கீழ்க்கண்ட வார்த்தைகள் காணப்படுகின்றன:

"பொதுவுடமை வாதிகளின் முக்கியத் தலைவன் மார்க்ஸ். சுமாரான உயரம் உடையவன். நல்ல உடற்கட்டு வாய்ந்தவன்......தன்னைப் பொறுத்த மட்டில் மிகவும் அசுத்தமாகவும் காட்டுமிராண்டி போலும் வசிக்கிறான். குளிப்பது, தலைமயிரை ஒழுங்கு படுத்திக் கொள்வது போன்ற வழக்கங்கள் எல்லாம் இவனிடமில்லை..........நாட்கணக்காக, ஒரு வேலையும் செய்யாமல்

சோம்பேறியாக இருப்பான். உழைக்கத் தொடங்கி விட்டால் ஓயாமல் இரவு பகலாக உழைத்துக் கொண்டே இருப்பான்...... இவனுடைய மனைவி ப்ரஷ்ய மந்திரி வெஸ்ட்பாலன் பிரபுவின் சகோதரி. படித்தவள். இனிய பண்புடையவள். ஆயினும் வறுமைக்கும் துன்பத்திற்கும் பழக்கபடுத்திக் கொண்டாள். கணவன் மேலுள்ள அன்புதான் காரணம்......

'மார்க்ஸ்' கேவலமான ஓர் இடத்தில், வாடகை அதிகமாக இல்லாத வீட்டில் வசிக்கிறான். இவன் குடியிருப்பது இரண்டு அறைகள். இவற்றில் ஒரு சுத்தமான மரச் சாமான்கூடக் கிடையாது. முன் பக்கத்து அறையில் ஒரு மேஜை உண்டு. கந்தல்கள், கிழிசல்கள், அழுக்குத் துணிகள், உடைந்த விளையாட்டுச் சாமான்கள். பழைய புத்தகங்கள், பத்திரிகைகள் இப்படி வீடே அலங்கோலமாகக் கிடக்கும்!.........அறைக்குள் நுழைந்தவுடன் புகையும் புகையிலை நாற்றமும் சேர்ந்து கண்களில் கண்ணீர் வரச் செய்துவிடும். ஏதோ ஒரு குகைக்குள் நுழைகிற மாதிரித்தான் செல்லவேண்டும். உட்காரவோ இருக்கும் ஒரே நாற்காலியின் மேலும் குப்பை கூளங்களும் விளையாட்டுச் சாமான்களும் கிடக்கும். இவற்றைப்பற்றி எல்லாம் மார்க்ஸோ அவன் மனைவியோ கவலைப்படுவதில்லை.......வந்தவர்களை அவர்கள் இன்முகத்தோடு வரவேற்பார்கள். தங்களிடமிருப்பது புகையிலையோ, தேநீரோ எதுவானாலும் அளிப்பார்கள். உடனே பேசவும் தொடங்கிவிடுவார்கள். பேச்சிலே ஈடுபட்டுவிட்டால் மற்ற குணங்களைப்பற்றி ஒன்றுமே தோன்றாது......"

மார்க்ஸின் குடும்ப வாழ்க்கையைப்பற்றி எதிர்தரப்பு ஒற்றனால் எழுதப்பட்டச் சித்திரம் இது. ஆனால் எவ்வளவு கொடுமையானவறுமையிலும் மார்க்ஸ் வாய்விட்டுத் தம்துன்பத்தை யாரிடமும் கூறியதுகிடையாது. யாருடைய தயவையும் எதிர்பார்த்ததும் கிடையாது. பணத்தொல்லை காரணமாகத் தான் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து முடிக்க முடியவில்லையே என்று தவிர வேறு வருத்தப்பட்டதும் கிடையாது. தன் நம்பிக்கை ஒன்றே துணையாய்க் கொண்டு இரவும் பகலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். லண்டன் கண்காட்சியைச் சேர்ந்த நூல் நிலையத்தில்தான் இவர் பகற்பொழுதில் பெரும் பகுதியையும் கழிப்பது வழக்கம்!

ஓயா உழைப்பின் காரணமாக மார்க்ஸின் உடல் நலம் குன்றியது. கண் வலி, வயிற்றுக் கோளாறு, உடலெல்லாம் கொப்புளங்கள். தரித்திரம்......அப்பா...சிந்தித்துப்பார்க்கவே முடியாது. இந்த நிலையிலே அவருடைய மகன் எட்கார், ஆறு

வயதுப் பையன் இறந்து விட்டான். இந்த துன்பத்தால் மார்க்ஸின் உள்ளம் நிலை குலைந்துபோய் விட்டது. ஜென்னியின் துயரத்திற்கோ அளவில்லை. பத்து ஆண்டுகளுக்கு பிறகு ஜென்னி எழுதிய ஒரு கடிதத்தில், "அந்தக் குழந்தையில்லாமல் நான் வாழ்கிற நாட்கள் அதிகரிப்பதானது என் துன்பத்தைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறது !" என்று எழுதுகிருள்.

1862-ம் ஆண்டோடு நியூயார்க் ட்ரிப்யூனிலிருந்து கிடைத்து வந்த பணமும் நின்று விட்டது. மார்க்ஸ் வயிற்றுக் கோளாருல் அவதிப்பட்டார். மனைவிக்கு அம்மை; குழந்தைகளோ பட்டினி; ஏதாவது வேலை பார்க்கலாமா என்றுகூட மார்க்ஸ் முயன்ருர். ஆனல் இத்தகைய விகாரமான தோற்றம் உடையவருக்கு யார் தான் வேலை கொடுப்பார்கள்? துன்பம் தாள முடியவில்லை. பெரிய பெண்கள் இரண்டு பேரையும் ஏதாவது பெரிய மனிதர்கள் வீட்டில் தாதிகளாக அமர்த்தி விட்டுத் தானும் மனைவியும் கைக் குழந்தையும் ஏதாவது அநாதைகள் விடுதியில் தங்கி விடுவது என்றுகூட மார்க்ஸ் யோசித்தார். மனித இனத்திற்கு விடுதலையையும் நல்வாழ்வையும் அளிப்பதற்காகப் போராடிய,—வாழ்வு முழுவதையும் செலவழித்த இந்த மனிதன், தம் சொந்த வாழ்க்கையிலே பட்ட அல்லல்களை நினைத்தால், துன்பக் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. வறுமையின் இடையிலேதான் இவர் ஒப்பற்ற நூல்களை உண்டாக்க முடிந்தது என்று கன் நெஞ்சர்கள் கூறலாம். ஆனல் அமைதியும் இன்பமும் உள்ள வாழ்க்கை மட்டும் கிடைத்திருந்தால் மார்க்ஸின் உழைப்பால் எத்தகைய பயன் விளைந்திருக்கக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, "ஐயகோ! மனித குலமே, நீ எவ்வளவு இழந்து விட்டாய்!" என்று சொல்லத் தோன்றுகிறது.

1863-ம் ஆண்டின் இறுதியிலே ஏஞ்செல்ஸ் தம் துன்பங்கள் தொல்லைகள் எதையும் பாராட்டாமல் 350 பவுன்கள் கொடுத்தார். அதே ஆண்டில் மார்க்ஸின் தாயார் இறந்தாள். அவளுடைய சொத்தாகக் கொஞ்சம் பணம் வந்தது. 1864-ம் ஆண்டு மே மாதம் மார்க்ஸின் சிறந்த நண்பன் வில்லியம் வுல்ப் என்பவன் இறந்து போனுன். அவனுடைய மரண சாஸனப்படி 800 பவுன் மார்க்ஸுக்கு கிடைத்தது. இதற்கு நன்றியாக மார்க்ஸ் தம் ஒப்பற்ற படைப்பாகிய 'மூலதனம்' (*Capital*) நூலையே அவனுக்குக் காணிக்கையாக்கினர். ஏஞ்செல்ஸின் வியாபார நிலைமை கொஞ்சம் அபிவிருத்தி அடையவே அவர் மேலும் மார்க்ஸுக்கு அதிக உதவி புரிந்தார். அதோடு வருஷந்தோறும் மார்க்ஸுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கிடைக்கவும் ஏற்பாடு செய்தார்.

கடைசிப் பத்தாண்டுகள் லண்டனில் மார்க்ஸ் கொஞ்சம் நிம்மதியாக வாழ்ந்தார் என்று சொல்லலாம்.

## 8. முதலாவது அகிலம்! (First International)

1848-ம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளிலே வெடித்த ஜனக் கிளர்ச்சிகள் அடக்கப்பட்டதும் சோர்வு கொண்ட மக்கள் செய லற்றுப் போயினர். அரசாங்கங்களுக்கு விரோதமாகப் பேசவும் சிந்திக்கவும்கூடப் பயந்தனர். ஆனால் அந்தந்த நாட்டில் உள்ள தொழிலாளி வர்க்கங்கள் மாத்திரம் நீண்ட காலத்திற்கு அப்படி இருக்க முடியவில்லை. ஏனென்றால், தொழிலாளி வர்க்கம் ஒன்று தான் தன் வாழ்வுக்காகவே போராட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. இங்கிலாந்திலும், ப்ரான்ஸிலும், ஜெர்மனியிலும் இருந்த தொழிலாளர்கள் தங்களுக்கென்று தனித்தனித் தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

தொழிற்சங்க இயக்கம் வளர்ந்ததானது வளர்ச்சியடைந் திருந்த தொழிலாளர்களுக்கிடையே வர்க்க ஞானம் உண்டாக உதவிற்று. அதாவது உலகம் எங்கணும் உள்ள தொழிலார்களி னுடைய நலன்கள் யாவும் ஒரே வகையாக இருக்கின்றன. வாழ்க்கை நிலைமை, சமுதாய அந்தஸ்து எல்லாவற்றிலும் எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்கள் ஒரே மாதிரியான நிலைமை யில் இருக்கின்றனர். இந்தத் தொழிலாளர்களைச் சுரண்டுகிற முதலாளிவர்க்கத்தின் நிலைமையும் நலனும் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. தொழிலாளிகள்—அவர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்தாலும சரி, பிரான்ஸில் வாழ்ந்தாலும் சரி, அல்லது முதலாளித்துவ சமுதாய அமைப்பை உடைய வேறு எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சரி, ஒரே விதமாகத்தான் சுரண்டப் படு கின்றனர்; அடக்கி வைக்கப் படுகின்றனர்; அரசியல் அதிகார மற்ற நிலையில் வைக்கப் படுகின்றனர் — என்பவற்றைக் கண்டனர்.

இந்தச் சமயத்தில் இங்கிலீஷ் தொழிலாளிகளும், பிரெஞ்சுத் தொழிலாளிகளும் கலந்து பேசுவதற்கான சில வாய்ப்புக்கள் கிடைத்தன.

ருஷ்ய ஜார் மன்னன் தனக்குக் கீழ்ப்பட்டிருந்த போலந்து மக்கள் செய்த கிளர்ச்சியை மனிதத் தன்மையற்ற முறையில் அடக்கினான். இதைக் கண்டிக்க இங்கிலீஷ் தொழிலாளிகளும் பிரெஞ்சுத் தொழிலாளிகளும் ஒன்றுதிரண்டெழுந்தனர். தங்கள் அரசாங்கங்கள் ருஷ்ய ஜாரைக் கண்டிக்க வேண்டுமென்று

கோரினர். முதன்முறையாகத் தொழிலாளி வர்க்கம் ஓர் அரசியல் கோரிக்கையை முன் வைத்துப் போராடத் தொடங்கியது.

இவ்வாறாக ஐரோப்பிய நாடுகளிலே நடந்த பல நிகழ்ச்சிகளானவை, ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனித் தொழிற் சங்கங்கள் இருந்தபோதிலும் எல்லா நாடுகளுக்குமாகச் சேர்ந்த ஒரு மத்திய ஸ்தாபனம் அவசியம் என்றுணரச் செய்தன. இப்படிப் பட்ட ஒரு ஸ்தாபனத்தைக் கூட்டுவதென்று ஆங்கில, பிரெஞ்சு தொழிலாளர்கள் தீர்மானித்தனர். 1864-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி 'மார்ட்டின்ஸ் ஹால்' என்ற மண்டபத்தில் இதற்கான ஆரம்பக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜெர்மன், பெல்ஜிய, போலந்து, இத்தாலி தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் ஜெர்மன் தொழிலாளர்களின் பிரதிநிதியாகக் கார்ல் மார்க்ஸும் கலந்து கொண்டார்.

இந்த மகாநாடு சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் விதி முறைகளைத் தயாரிப்பதற்காக ஐம்பத்தொருபேர் கொண்ட கமிட்டி ஒன்று நியமித்தது. இதிலே மார்க்ஸும் ஒருவர். இந்தக் கமிட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்த போதிலும் மார்க்ஸ் மட்டும் தனியாகத் தயாரித்த திட்டம் ஒன்றுதான் கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றால், தொழிலாளர்களைப் பற்றிய விஷயங்களிலே மார்க்ஸுக்கு இருந்த அக்கறையையும் அனுபவத்தையும் இது தெளிவாகக் காட்டுகிறதல்லவா? இவ்வாறாக சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் அல்லது முதலாவது அகிலம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பலவகைத் தொழிலாளர்களையும் ஒன்று படுத்துவதும் எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களும் தங்கள் கோரிக்கைகளுக்காகப் பரஸ்பரம் ஒத்துழைப்பதும் ஆகும். ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்களும் பிற நாட்டுத் தொழிலாளர்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவும் தொழிற்சங்க இயக்கம் பின் தங்கிக் கிடந்த நாடுகளிலே புத்துயிர் கொடுத்து ஊட்டி வளர்க்கவும் இந்த ஸ்தாபனம் மிகவும் பயன்பட்டது.

சர்வதேசத் தொழிலாளர் சம்மேளனத்திலே மார்க்ஸ் அரும்பாடுபட்டார். இந்தச் சமயத்தில் இவருடைய பொருளாதார நிலைமை ஓரளவு சரிப்பட்டிருந்ததால் இவர் தமது முழு நேரத்தையும் உழைப்பையும் ஸ்தாபன வளர்ச்சிக்காகவே செலவழிக்க முடிந்தது.

இந்தச் சமயத்தில்தான் 1871-ம் ஆண்டில் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. பாரிஸ் கம்யூன் ஸ்தாபிக்கப் பட்டது. ஒரு பிறவிப் புரட்சிக்காரர் என்ற வகையிலே மார்க்ஸ் இந்தப் புரட்சியின் போக்கையும் இதன் விளைவாக எழுந்த கம் யூனின் நடவடிக்கைகளையும் மிகக் கூர்மையாகக் கவனித்து வந்தார். பாரிஸ் கம்யூன் அவர் கனவுகண்டு வந்த 'பாட்டாளி சர்வாதிகார' அரசின் ஒரு லட்சிய பிம்பமாகவே திகழ்ந்ததை உணர்ந்தார். அதைப்பற்றி மார்க்ஸ் எழுதிய விமர்சனம் மார்க் ஸிஸத்தின் முக்கியமான ஓர் அங்கமாக இருக்கிறது. ஆனால் முதலாவது அகிலத்தில் இதைப் பற்றிப் பலமான கருத்து வேற் றுமை ஏற்பட்டது. சிலர் பாரிஸ் கம்யூனின் செய்கைகளைக் கண்டித்தனர். பலாத்காரத்தின் மூலம் அரசாங்கத்தைக் கைப் பற்றும் நடவடிக்கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பாகுனின் என்ற அராஜகவாதிகள் புரட்சிக்குப் பின்னால் எந்தவிதமான அரசாங்கமுமே இருக்கக்கூடாதென்றனர். ஆயினும் மார்க்ஸை ஆதரித்தவர்கள்தான் மெஜாரிட்டியினராயாயிருந்தனர் பாகுனின் முதலியோர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். சங்கத் தின் தலைமைக் காரியாலயம் லண்டனிலிருந்து நியூயார்க்குக்கு மாற்றப்பட்டது. ஆனால், அதன் பிறகு அதிக காலம் முதலாவது அகிலம் உயிரோடிருக்கவில்லை.

முதலாவது அகிலம் எதிர்பாராதவிதமாக முடிவு பெற்ற போதிலும், அது சாதித்த காரியம் மகத்தானது. ஏறக்குறைய உலகம் முழுவதிலும் தொழிற்சங்க இயக்கங்களைத் தோற்று வித்து வளர்த்த பெருமை இதனையே சாரும் என்று கூறுவது மிகையாகாது.

முதலாவது இன்டர்நாஷனலோடு மார்க்ஸின் வாழ்க்கை யும் முடிந்துவிட்டதென்று கூறலாம். மார்க்ஸின் பிற்காலம் மிகவும் துன்பகரமானதென்று கூறவேண்டும். நோய் அவரை ஓயாமல் துன்புறுத்திக் கொண்டிருந்தது. வைத்தியர்கள் ஓய் வெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினர். ஆனால், மார்க்ஸோ ஓயாமல் காலைமுதல் இரவுவரை படிப்பதும் மூல தனம் (*Capital*) எனும்நூலின் இரண்டாவது பாகத்திற்கான குறிப்புகள் சேகரிப்பதும் ஆன வேலையிலேயே ஈடுபட்டிருந் தார்.

1881-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி மார்க்ஸின் மனைவி காலஞ்சென்றாள். அவளுடனேயே மார்க்ஸும் இறந்து

விட்டார் என்று கூறலாம்" என்று ஏஞ்செல்ஸ் எழுதுகிறார். இதன்பிறகு சுமார் பதினைந்து மாத காலம் மார்க்ஸ் உயிரோடிருந்தார். 1883–ம் ஆண்டு ஜனவரி 11-ம் தேதி மார்க்ஸின் மூத்த மகள் பாரிஸில் காலமானாள். அதே ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி பிற்பகல் 2–45 மணிக்கு மார்க்ஸும் தம் கடைசித் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.

மார்ச் 17-ம் தேதி லண்டன் ஹைகேட் மயானத்தில் அவருடைய சவம் அடக்கம் செய்யப்பட்டது.

அவருடைய கொள்கைகள் உலகெங்கும் உயிர்பெற்றெழுந்தன.

## 9. ஏஞ்செல்ஸ்

அறிஞர் ஏஞ்செல்ஸினுடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறாவிட்டால் கார்ல் மார்க்ஸினுடைய இந்தச் சரித்திரம் முற்றுப் பெறாததாகும். ஏனென்றால் தத்துவத்திலும் சரி, வாழ்க்கையிலும் சரி இருவரின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து கொண்டே தான் வருகிறது: ஏஞ்செல்ஸின் தங்குதடையற்ற பொருளுதவி இருந்திராவிட்டால் மார்க்ஸால் உயிர் வாழ்ந்திருக்கவே முடியாது. மார்க்ஸீய நூல்களின் திறவுகோல் போன்ற 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யை இருவரும் சேர்ந்துதான் தயாரித்தனர். கம்யூனிஸ தத்துவத்தின் ஆணிவேர் போன்ற 'காபிடல்' என்னும் மூலதனம் (*Das Capital*) நூலின் முதல் பகுதியை மட்டும்தான் மார்க்ஸ் எழுதி முடித்தார். மற்ற பகுதிகள் ஏஞ்செல்ஸால் எழுதி முடிக்கப்பட்டன. எல்லா விதத்திலும் ஏஞ்செல்ஸின் வாழ்க்கை மார்க்ஸின் வாழ்க்கையின் இரண்டாம் பகுதிபோலவே அமைந்திருக்கிறது.

மார்க்ஸும் ஏஞ்செல்ஸும்தான் முதன் முதலாகத் தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கை என்பது, தற்காலிக முதலாளித்வ பொருளாதார நிலைமையால் தானாக உண்டாக்கப்படுவது என்பதைச் சுட்டிக் காட்டினர். மனித இனத்தை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் அடிமைத்தளைகளிலிருந்து விடுதலை அடையச் செய்யத் தொழிலாளி வர்க்கம் ஒன்றினால்தான் முடியும்; ஏதோ சில நல்லெண்ணக்காரர்களால் அதைச் சாதித்துவிட முடியாது என்பதையும் அவர்கள்தான் விஞ்ஞான பூர்வமாக நிரூபித்தனர். சோஷலிஸம் என்பது கற்பனா வாதிகளின் 'மனோராஜ்யம்' அல்ல; இன்றைய சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் ஏற்படக்கூடிய தடுக்க முடியாத விளைவுதான் அது என்பதை

அவர்கள் எடுத்துக் காட்டினர். இன்றுவரை வரையப்பட்டுள்ள மனித சரித்திரம், வர்க்கப் போராட்டங்களின் சரித்திரமாகவே இருந்திருக்கிறது. இனியும் அப்படித்தான் இருக்கும். வர்க்கங்கள் மறைந்துபோய்,—தனி உடைமையும், உற்பத்தியில் அராஜக நிலைமையும் மங்கி மறைந்து—வர்க்கப் போராட்டத்திற்கும் வர்க்க ஆட்சிக்கும் முடிவு கட்டப்படும்வரை அப்படித்தான் இருக்கும். வர்க்க உணர்வுள்ள தொழிற் சங்க வாதிகள் தங்களுடைய போராட்டங்களை இவற்றிற்கெதிராகவே கட்டி அமைக்க வேண்டும், என்று தெளிவு படுத்தினர்.

மார்க்ஸ்-ஏஞ்செல்ஸின் இந்தச் சித்தாந்தங்கள் உலகம் முழுவதிலும் தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தினரால்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனல் இந்த இரண்டு நண்பர்களும் சோஷலிஸ்ட் இலக்கியத் துறையிலும் சமுதாய இயக்கங்களிலும் பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பித்த காலத்திலே இந்தக் கருத்துக்கள் பலருக்கும் புரியவில்லை. நேர்மையாகவோ, சுயநலத்திற்காகவோ, மக்கள் விடுதலைக்காவும் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட பலரும் இந்த வர்க்க வேற்றுமையையும், வர்க்கங்களின் நலன்களுக்கிடையே உள்ள முரண்பாட்டையும்—ஒன்றின் அழிவிலேதான் இன்னென்று வாழ முடியும் என்ற நிலைமையில் இருப்பதையும் புரிந்து கொள்ளவில்லை. தொழிலாளர்கள் ஒரு தனிப்பட்ட சமுதாய சக்தியாக இயங்கமுடியும் என்பதைக்கூட இவர்களால் நம்ப முடியவில்லை. பலர் கற்பனை செய்தார்கள்—இவர்களில் புத்திசாலிகள்கூட இருந்தார்கள், ஏதாவது ஒரு காலத்திலே ஆள்வோர் மனம் மாறி அடிமைகளின் நிலைமை உயர்த்தி விடுவார்கள்; அவர்களுடைய மனத்தை மாற்ற வேண்டியதுதான் பாக்கி; உலகத்திலே அமைதியும் ஆனந்தமும் பொங்கி வழிந்துவிடும்; என்றெண்ணினர்கள். போராட்டம் என்பதில்லாமலேயே பொதுவுடமை வந்துவிடும். புரட்சி என்பதில்லாமலேயே மக்களுக்கு புது வாழ்வு கிட்டிவிடும் என்று கற்பனை செய்தார்கள்; கடைசியாக அந்தக் காலத்தில் சோஷலிஸ்ட்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள்கூட வளர்ந்து வரும் பாட்டாளி வர்க்கத்தைக்கண்டு கிலிகொண்டு, 'இந்தப் புற்று நோயை என்ன செய்வது, இதன் பிரச்னையை எப்படி ஒழிப்பது' என்ற அச்சத்துடனேயே சிந்தித்தார்கள். அவர்களுடைய நோக்கமெல்லாம் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை எப்படித் தடுத்து நிறுத்துவது, பாட்டாளி வர்க்கம் பெருகிவிடாமல் எப்படித் தடை போடுவது என்று சிந்திப்பதிலேயே இருந்தது. சுருக்கமாகச் சொன்னல் அவர்கள், சரித்திரத்தைப் பின்னேக்கித் தள்ள விரும்பினர்கள்.

மார்க்ஸும் ஏஞ்செல்ஸும், பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி கண்டு பயப்படவில்லை. அதற்கு மாருகத் தங்களுடைய எதிர்கால நம்பிக்கை முழுவதையுமே அந்தப் பாட்டாளி வர்க்கத்தின் மேலேயே வைத்தார்கள். பாட்டாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கும் ஒரு புரட்சிகரமான வர்க்கமாக அதன் ஆற்றல் அதிகரிக்கும்; சோஷலிஸம் கிட்ட நெருங்கிவரும் என்று கூறினர்கள். மார்க்ஸும் தொழிலாளி வர்க்கத்திற்குச் செய்த சேவையை இந்தச் சில வார்த்தைகளிலே குறிப்பிடலாம்: "அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்குத் தன்னைத் தானே உணர்ந்து கொள்ளவும், தன்னுணர்வோடிருப்பதற்கும் கற்பித்தார்கள். கற்பனுவாதத்திற்குப் பதிலாக விஞ்ஞானத்தை அதன் கையிலே கொடுத்தார்கள்," என்று லெனின் கூறுகிருர்.

இந்த மகத்தான காரியத்திலே மார்க்ஸின் பெயரோடு ஏஞ்செல்ஸின் பெயரும் இரண்டறக் கலந்து நிற்கிறது. மார்க்ஸின் பெயர் எங்கெங்கு உச்சரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஏஞ்செல்ஸ்ஸின் பெயரும் உச்சரிக்கப்படுகிறது. மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் இரட்டையர்கள் என்று கூறவேண்டும். ஏஞ்செல்ஸின் வாழ்க்கைச் சுருக்கத்தை இங்கு வரைவோம்.

ப்ரஷிய நாட்டிலே மார்க்ஸ் பிறந்த அதே ரைன் லாந்து மாகாணத்தில் பார்மென் என்ற ஊரில் 1820-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் தேதி ஏஞ்செல்ஸ் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு வியாபாரி; இங்கிலாந்திலுள்ள மாஞ்செஸ்டர் நகரத்தில் ஒரு நூல் தொழிற்சாலையில் இவருக்கு முக்கியமான பங்கிருந்தது. தந்தை வைதிகப்பித்துப் பிடித்தவர்; பணம் சேர்ப்பதே குறியாய்க் கொண்டவர்; தொழிலாளர்களை எத்தனை அதிகமாகச் சுரண்ட முடியும் என்பதே இவர் குறிக்கோள். ஆகையால் தந்தைக்கும் மகனுக்கும் இளமையிலேயே மன வேறுபாடு முளைத்து விட்டது. அதன் விளைவாக உயர்தரப் படிப்பை முடித்துக் கொள்வதன் முன்பே ஏஞ்செல்ஸ், ப்ரெமென் என்ற இடத்தில் அவருடைய தந்தைக்குச் சொந்தமாக இருந்த தொழிற்சாலைக்கு குமாஸ்தாவாக அனுப்பப்பட்டார்.

இங்கு ஏஞ்செல்ஸுக்குத் தொழிலாளர்களோடு கலந்து பழக நேரடியான சந்தர்ப்பம் கிடைத்தது. எட்டடிக் குச்சுக்குள்ளே புகையும் அழுக்கும் சாக்கடையும் நிறைந்த சூழ்நிலையில் குஞ்சு குட்டிகளோடு வதியும் ஏழைத் தொழிலாளிகளின் நிலைமை அவர் உள்ளத்தை உருக்கிற்று. அவர்கள் ஆலைகளில் பதினன்கு மணி

நேரம் உழைத்தார்கள். அந்த ஆலைக்கு லட்சக் கணக்கில் வருமானம் வந்து கொண்டிருந்தது.

ஏஞ்செல்ஸ் இந்த அனுபவங்களோடு தத்துவத்தை கற்றுணர ஆரம்பித்தார். ஹெகலீய தத்துவம் தான் அந்தக் காலத்தில் முதன்மையானதாக இருந்தது. 'உலகம் இடையறாத மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆட்பட்டுக் கொண்டே இருக்கிறது. என்பது போன்ற சில புரட்சிகரமான சித்தாந்தங்கள் ஹெகலீய தத்துவத்தில் இருந்தன. ஆனால் ஹெகலோ கற்பனாவாதியாகத்தான் இருந்தார். மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் கற்பனாவாதத்தை விட்டு விலக்கி, "எல்லாப் பொருள்களும் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆளானவைவாக இருந்தால் ப்ரஷிய அரசனுடையவோ, ரஷிய ஸாரினுடையவோ ஆட்சி மட்டும் ஏன் நிலையானதாக இருக்க வேண்டும்? முடியாட்சியின் ஊழலும் அட்டூழியமும் மாத்திரம் ஏன் மாற்றத்திற் குள்ளாகக் கூடாது? விரல் விட்டெண்ணப்படக் கூடிய சிலர் நல் வாழ்வடைவதும் சமுதாயத்தின் பெரும் பகுதியினரான உழைப்பவர்கள் அவர்களுக்காகத் துன்பத்தில் உழல வேண்டியதுமாகவும் இருக்கும் நிலைமை மாத்திரம் ஏன் மாறக் கூடாது என்று சிந்தித்தனர். ஏதோ ஒரு சிந்தனைக்குட்பட்டு உலகமும், மக்களும், வாழ்க்கையும் நடைபெறுகிறது. எல்லாம் விதிப்படி இயங்குகின்றன என்ற கற்பனா வாதம் பொய். அதற்கு மாறாகச் சிந்தனை என்பதே பொருளின் பிரதிபலிப்புத்தான். இயற்கையின் அடிப்படையிலிருந்துதான் மனதைப் பற்றி விளக்க வேண்டும் என்று கூறினர். மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் பொருள் முதல் வாத தத்துவத்தை (*Materialism*) வளப்படுத்தினர். உலகத்தையும், மனித இனத்தையும் பற்றிப் பொருள் முதல் வாத அடிப்படையில் ஆராய்ந்து பொருள் எப்படி இயற்கைக்கு அடிப்படையாய் இருக்கிறதோ அதே போல் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் பொருளுற்பத்திச் சாதனங்கள் தான் அடிப்படையாக இருக்கின்றன என்று கூறினர். பொருளுற்பத்திச் சாதனங்களைப்பொறுத்து மனிதர்களின் உறவு முறை நிர்ணயிக்கப் படுகிறது. பண்ணைக்காரன், பண்ணைஎஜமான், எஜமான் தொழிலாளி, முதலாளி தொழிலாளி, மேஸ்திரி என்ற உறவுகளை எல்லாம் பொருளுற்பத்திச் சாதனங்களே உண்டுபண்ணுகின்றன. இந்தஉறவுகளில்தான் சமுதாய வாழ்க்கையின், மனித இனத்தின் ஆசாபாசங்களின், சட்ட திட்டங்களின், எண்ணங்களின் அடிப்படை புதைந்து கிடக்கிறது. பொருளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தனி உடைமையை வளர்க்கிறது; அதே சமயத்தில் பெரும்பாலான சமுதாய மக்களை எந்த விதமான உடைமைகளும் அற்றவர்களாக மாற்றி, மிகச்சிறு

பான்மையினரிடத்திலே உடைமைகள் யாவும் குவிந்து விடவும் செய்கிறது. ஒரு பக்கத்திலே இது சொத்துக்களை அழிக்கிறது. இன்றைய சமுதாய அமைப்பின் அடிப்படையே சோஷலிஸத்தை நோக்கி நகர்கிறது. சோஷலிஸ்டுகள் செய்ய வேண்டியதெல்லாம், சமுதாய சக்திகளிலே எது சோஷலிஸத்தைக் கொண்டு வருவதை சமுதாயத்தில் தான் இருக்கும் நிலைமைகாரணமாக விரும்பவேண்டியதாக இருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கு அந்த உணர்ச்சியையும் அது செய்ய வேண்டிய கடமையையும் ஊட்ட வேண்டியது தான். இந்த சமுதாய சக்திதான் பாட்டாளி வர்க்கம். 1842-ல் மான்செஸ்சடரில் தங்கியபோது ஏஞ்செல்ஸ் இதை நன்குணர்ந்தார்.

மாஞ்செஸ்டர் நகரிலே தமது அனுபவங்களைத் திரட்டி 1845-ம் ஆண்டில் ஏஞ்செல்ஸ் 'இங்கிலீஷ் தொழிலாள வர்க்கத்தின் நிலைமை' என்ற புத்தகத்தை எழுதினர். இதற்கு முன்னல் தொழிலாளி வர்க்கத்தின் தொல்லைகளைப்பற்றி எத்தனையோ பேர் புத்தகங்கள் எழுதியிருக்கிறர்கள். ஆனல் தொழிலாளி வர்க்கம் படும் தொல்லையானது அதை இடை விடாமல் முன்னேக்கி, தனது விடுதலையை நோக்கித் தள்ளிக்கொண்டே இருக்கிறது என்பதை முதன் முதலாக எடுத்துக் காட்டியவர் ஏஞ்செல்ஸ்தான். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கங்கள் அதற்கு சோஷலிஸத்தில் அல்லாமல் வேறு விதத்தில் கடைத்தேறவே முடியாது என்ற படிப்பினையை அளிக்கின்றன. அதே சமயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் நோக்கமாக ஆனல் தான் சோஷலிஸம் ஒரு சக்தியாக மலர முடியும், என்பன போன்ற கருத்துக்கள் ஏஞ்செல்ஸின் இந்த புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இந்த நூல் மக்களிடையே அமோகமான செல்வாக்குப் பெற்றது.

இங்கிலாந்து வந்தபின்தான் ஏஞ்செல்ஸ் சோஷலிஸ்ட் ஆனர் என்று கூறவேண்டும். மாஞ்செஸ்டரில் இருக்கும்போது அவர் பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தோடு தொடர்பு கொண்டு இங்கிலீஷ் சோஷலிஸ்ட் வெளியீடுகளுக்குக் கட்டுரைகள் எழுதிவந்தார். 1844-ல் அவர் திரும்ப ஊர் செல்லும்போது பாரிஸில் மார்க்ஸைச் சந்தித்தார். இந்த சந்திப்புத்தான் இவர்களை இணையற்ற நண்பர்களாக்கி சோஷலிஸ தத்துவத்தின் உயிரூற்றுகளாக மாற்றிற்று என்று கூறவேண்டும்.

ஏஞ்செல்ஸ் பாரிஸில் மார்க்ஸோடு சுமார் பத்து நாட்கள் தங்கினர். இங்கே நண்பர்கள் இருவருமாகச் சேர்ந்து "புனித

குடும்பம்,'' என்ற கட்டுரையைத் தீட்டினர். இது பொருள் முதல் வாத சோஷலிஸத்தின் அடிப்படைக் கருத்துக்களைக் கொண்ட தாக இருக்கிறது. இது 'பாயெர்' சகோதரர்கள் என்பவர்கள் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிக் கேவலமாக, உழைத்துக் கிடக்க வேண்டிய ஓர் ஒழுங்கற்ற கூட்டம் என்று மதித்துச் செய்து வந்த அநாகரிகப் பிரசாரத்திற்கு மறுப்பாகும். ஏஞ்செல் ஸோடு கொண்ட தொடர்புதான் மார்க்ஸை பொருளாதாரத்தைப் பற்றிக் கற்றுணரத் தூண்டிற்று என்று கூறலாம்.

1845 லிருந்து 47 வரை ஏஞ்செல்ஸ் பாரிஸிலும், ப்ரஸ்ஸல் ஸிலுமாகக் காலம் கழித்தார். தத்துவ ஆராய்ச்சியும் ஜெர்மன் தொழிலாளர்களிடையே வேலை செய்வதும் இப்பொழுது அவர் தொழிலாக இருந்தன. இப்பொழுதுதான் மார்க்ஸும் ஏஞ்செல் ஸும் பொதுவுடமைக் கழகத்தோடு தொடர்பு கொண்டனர். இதன் பயன்தான் 1848லே வெளியான உலகப் புகழ் பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கை !

1848 புரட்சி அலைகளிலே மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் பங்கு கொண்டனர். புதிய ரைன்லாந்து கெஜட் நிறுத்தப்பட்டு மார்க்ஸ் நாடு கடத்தப்பட்டார். ஏஞ்செல்ஸ் மக்கள் உரிமைகளைப் பாது காத்து பொதுஜன எழுச்சியிலே மூன்று யுத்தங்களிலே பங்கு கொண்டார். புரட்சிக்காரர்களின் எழுச்சிகள் தோல்வியுற்றதும் ஸ்வித்ஸர்லாந்து வழியாக லண்டனுக்குத் தப்பிச் சென்றார்.

மார்க்ஸும் லண்டனில் வந்து தங்கினர். ஏஞ்செல்ஸ் மீண்டும் மாஞ்செஸ்டர் தொழிற்சாலையில் குமாஸ்தாவாக அமர்ந்து பின் பங்குதாரராகவும் ஆனர். 1870 வரை அவர் மாஞ்செஸ்டரில் தங்கியிருந்தார். மார்க்ஸ் லண்டனில் இருந்த போதிலும் இருவரும் கடிதங்களின் மூலமாக இடையருத தொடர்பு கொண்டிருந்தனர், இந்தக் கடிதங்களிலே விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களை இந்த நண்பர்கள் பரிமாறிக் கொண்டனர். 1870-ல் ஏஞ்செல்ஸும் லண்டன் வந்து சேர்ந்தார். அவர்களுடைய பொது உழைப்பு 1882-ல் மார்க்ஸ் மரணமடையும் வரை தொடர்ந்து நடந்தது. மார்க்ஸ் மூலதனத்தின் பகுதியை எழுதி முடித்தார். ஏஞ்செல்ஸ் பல முக்கியமான சிறு நூல்களை எழுதி வெளியிட்டார்.

'மூலதனத்தை' முழுவதும் எழுதி வெளியிட முடியாமலேயே மார்க்ஸ் மரணமடைந்தார். ஆனால் அதற்கான வேலை முழுவதும் முற்றுப் பெற்றிருந்தது. ஏஞ்செல்ஸ், மார்க்ஸ் சேகரிததிருந்த

குறிப்புகளிலிருந்து மூலதனத்தின் இரண்டாவது மூன்ருவது பகுதிகளை எழுதி வெளியிடும் வேலையில் ஈடுபட்டார். அதை வெற்றிகரமாகச் செய்தும் முடித்தார். உள்ளம் உருக்கும் நட்புக் கதைகளைக் கேட்கிறேம்; படிக்கிறேம். ஆனல் தொழிலாளி வர்க்கம் இந்த நண்பர்களின் கதையை என்றுமே அழியாத நட்பின் சின்னமாகத் தன் சின்னத்தில் பொறித்துக் காக்கலாம்.

முதலாவது அகிலத்தில் மார்க்ஸ் தீவிரமான பங்கு கொண்டிருந்தபோது ஏஞ்செல்ஸூம் அதிலே ஒரு முக்கியமான பாகம் வகித்தார். மார்க்ஸ் இறந்தபின் ஏஞ்செல்ஸ் ஒருவர்தான் ஐரோப்பிய சோஷலிஸ்ட்களின் ஆலோசனையாளராகவும் தோழராகவும் இருந்தார். உயிர் வாழ்க்கைக் காலத்திலும் சரி, இறந்தபின்பும் சரி அவர்களுடைய போதனைகள் உலகமெங்கணும் சோஷலிஸ்டுகளுக்கு வழிகாட்டியாக இயங்கி வருகின்றன.

வாழ்க அவர்கள் நாமம்!

வாழ்க மார்க்ஸ் ஏஞ்செல்ஸ்!!



# இரண்டாம் பகுதி

**சிந்தனை விளக்கமும் நூற் சுருக்கங்களும்**



## பிரிவு: 1

[இந்தப் பகுதி முழுவதும் லெனின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.]

## மார்க்ஸீய தத்துவம்:

### 1. பொருள் முதல் வாதம் (Materialism)

மார்க்ஸினுடைய போதனைகளும் தத்துவங்களும் மார்க்ஸிஸம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

மதங்கள் யாவும் எப்படி உலகத்தினுடைய தோற்றம், வளர்ச்சி முதலியவை உள்ளிட்ட கருத்துக்களை உடையனவாக இருக்கின்றனவோ, அதேபோல் மார்க்ஸிஸமும் உலகம் எப்படித் தோன்றியிருக்கக்கூடும், மனித குலம் எப்படி வளர்ச்சி அடைந்து

வந்திருக்கக்கூடும் என்கிற எல்லா அடிப்படையான விஷயங்களை யும் சென்று தொடுகின்றது. ஆனால் மதம் உலகமும் மக்களும் ஆண்டவனால் படைக்கப்பட்டன என்று கூறுகிறது. மார்க்ஸிஸம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு முதன் முதலாகச் சிந்திக்கிற ஒரு சக்தி தோன்றி உலகத்தைப் படைத்திருக்க முடியா தென்றும் பொருள்களே (ஜடங்களே) முதலில் தோன்றி அவற் றின் பௌதிக, ரசாயன மாற்றங்களின் காரணமாக உயிர்ப் பிராணிகளும் உணர்வும் தோன்றியிருக்கக்கூடும் என்றும் கூறுகிறது.

மதம், அரசு முதலியவை எல்லாம் கடவுளால், சிந்திக்கக் கூடிய ஒரு சக்தியால் படைக்கப்பட்டன என்ற கருத்து கற்பனு வாதம் (*Idealism*) என்று கூறப்படுகிறது. பொருள்களை முதலா வதாகக் கொண்டே எல்லாம் தோன்றியிருக்கக்கூடும் என்ற கருத்து பொருள் முதல் வாதம் (*Materialism*) என்றழைக்கப்படு கிறது. பொருள் முதல் வாதம் சிந்தனை, அல்லது எண்ணம் என்பது உலகத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள பொருள்கள் மனித மூளையால் சிந்தனை உருவங்களாக பிரதிபலிக்கப்படுவது தான் என்று கூறுகிறது.

இயக்கம் என்பதில்லாமல் எப்பொருளும் இருக்க முடியாது. எண்ணமும் மனச்சாட்சியும் எங்கிருந்து வந்தன என்று கேட்க லாம். அவை மனித மூளையில் உற்பத்தியாகின்றன என்பது எல் லாருக்கும் தெரியும். அது (மனித மூளை) அதனுடைய சுற்றுச்சார்பு களுடனேயே வளர்ச்சி அடைந்து வந்ததாகும். மனித மூளையின் உற்பத்திகளும் இயற்கையின் உற்பத்திகளே என்பது இயற்கை யின் இதர பகுதிகளுக்கு முரண்பாடாக இல்லை. அவற்றை உறுதிபடுத்தவே செய்கின்றது என்று ஏஞ்செல்ஸ் எழுதுகிறார்.

கற்பனுவாதிகள் எண்ணத்தின் விளைவே பொருள்கள் என்று கூறுகின்றனர். பொருள் முதல் வாதிகள் பொருள்களிலிருந்து பிறப்பதே எண்ணமும் என்று கூறுகின்றனர். இதுதான் சுருக் கம். கற்பனு வாதம் மதத்தை அடிப்படையாகக் கொண்டது. பொருள் முதல் வாதம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது.

## 2. தர்க்கவியல் (Dialectics)

ஒரு பொருளைப்பற்றி அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றித் தர்க்கித்து, வாத பிரதிவாதத்தின் மூலமாக உண்மையைக் கண்டு பிடிக்கும் முறைக்குத் தர்க்கவியல் முறை என்று பெயர். பழங்காலத்தில் கிரேக்கர்கள் இம்முறையைப் பின்பற்றினர்.

தர்க்க வியல் என்பதென்ன ? பொருள்களைப் பற்றிய உண் மையைக் கண்டு பிடிப்பது. அப்பொருள்களோ ஓயாமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றன என்பது விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. உலகம் என்பது ஏற்கெனவே செய்து வைக்கப்பட்ட பொருள் களின் ஒருதொகுதி அல்ல, பலவிதமான வளர்ச்சிகளின் தொகு தியே அது; அதிலுள்ள எந்த வஸ்துவுமே, எண்ணம் உட்பட நிலை யானதோ, புனிதமானதோ, மாற்றம் அடையாததோ அல்ல; ஒவ் வொரு பொருளும் உள்ளும் புறத்தும் இடையறாத மாற்றத்தை, வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கின்றன ; பொருள்கள் தோன்றுகின்றன ; மறைகின்றன, கீழ்நிலையிலிருந்து மேல் நோக்கிச் சென்று கொண்டே இருக்கின்றன ; தர்க்க வியலுக்கு ஒரு சோதனைக்களமாய் இயற்கை பயன்படுகிறது-இந்த இயற்கை வளர்ச்சி மனித மூளையில் எப்படிப் பிரதி பலிக்கப்படுகிறதோ, அது தான் தர்க்க வியல் தத்துவம் : மார்க்ஸின் கருத்துப்படி தர்க்கவியல் என்பது, வெளி உலகத்திலும் மனித மூளையிலும் உண்டாகிக் கொண்டே இருக்கும் இயக்கத்தின் பொது நியதிகள் பற்றிய விஞ்ஞானம்தான்.

தர்க்கவியல், அறிவு பற்றிய கொள்கையையும், மனித அறிவு எவ்வாறு வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது; அறியாமையிலி ருந்து அறிவுடைமையை நோக்கிச் சரித்திர பூர்வமாக எவ்வாறு முன்னேறி வந்திருக்கிறது என்ற தத்துவங்களையும் உள்ளடக்கி நிற்கிறது.

வளர்ச்சி பற்றிய சித்தாந்தம் மார்க்ஸாலும் ஏஞ்செல்ஸ்ஸா லும் மிகவும் வளமாக்கப் பட்டிருக்கிறது. வளர்ச்சி தான் ஏற் கெனவே தாண்டி வந்திருக்கும் கட்டங்களை மீண்டும் அடைவது போல் காணப்படினும் உண்மையில் அதற்கு நேர் மாறாக, எதிரி டைக்கு எதிரிடை என்ற நியதியில், ஒரே மாதிரியாக நேர்கோட்டில் அல்லாமல், வளைந்து வளைந்து தாண்டித் தாண்டி, குதித்தும், திடீர் மாற்றமாகவும், பயங்கர விளைவுகளோடும் ஏற்படுகிறது. ஒரு குறிப் பிட்ட பொருளில், கொள்கையில், அல்லது சமுதாயத்தில் பல தரப்பட்ட பகுதிகள் ஒன்றை யொன்று சார்ந்தும் தழுவியும் நின்ற போதிலும் அவை எல்லாம் ஒரே ஒரு பொது நியதிக்கு, இயக்கத் தின் வளர்ச்சிக்கு உட்பட்டே தீருகின்றன.

மார்க்ஸீய தர்க்கவியல் இவ்வாறு கூறுகிறது.

## 3. சரித்திரம் பற்றிய பொருள் முதல் வாதக் கண்ணோட்டம் (The Materialist Conception of History)

மார்க்ஸ் சமுதாயம் பற்றிய விஞ்ஞானத்தையும் பொருள் முதல் வாத அடிப்படையில் திருத்தி அமைத்தார். பொருளிலிருந்தே உணர்வு தோன்றியது என்று கூறியதால், மனித இனத்தின் சமுதாய வாழ்க்கையிலும், சமுதாய அமைப்பிலிருந்தே சமுதாய மனப்பான்மையும் உண்டாயிற்று என்பதை விளக்க வேண்டியது அவசியமாகிறது.

மனித சமுதாயம் தன் தேவைகளை உற்பத்தி செய்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. சமுதாய உற்பத்தி முறைகளுக்குத் தகுந்தபடி மனிதர்கள் அவர்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, ஒருவிதமான உறவுமுறைகளுக்காளாக வேண்டியவர்களாகிறார்கள். இந்த உற்பத்தி உறவுகள், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு கட்டம் வரை பொருத்தமானதாக இருக்கிறது. உற்பத்தி உறவுகளின் மொத்தமும் சேர்ந்து சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாகிறது—இந்த அடிப்படைமேல்தான் சட்டம் அரசியல் என்ற மேல் கட்டடமும் அவற்றோடு பொருந்துகிற சமுதாய மனப்பான்மையின் அமைப்புகளும் உண்டாகின்றன. யதார்த்த வாழ்க்கையின் உற்பத்தி முறையே சமுதாய, அரசியல், கலாசார வாழ்க்கை நியதியைப் பொதுப்பட அமைக்கிறது. மனிதர்களின் மனப்பான்மை அவர்களின் வாழ்க்கை அமைப்பை உண்டாக்கவில்லை. அதற்கு மாறாக அவர்களுடைய சமுதாய வாழ்க்கை அமைப்புத்தான் மனப் பான்மையை உருவாக்குகிறது. உற்பத்திச் சாதனங்களின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டம், சமுதாயத்தில் ஏற்கெனவே இருக்கும் உற்பத்தி உறவுகளோடு முரண்பாடடைகிறது.—அதாவது ஏற்கெனவே இருந்த சொத்துடமை உறவுகளோடு முரண்பாடடைகிறது. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு உதவாமல் தடங்கல்களாக வந்து நிற்கின்றன. அப்பொழுது சமுதாயப் புரட்சி சகாப்தம் ஒன்று ஆரம்பமாகிறது. பொருளாதார அடிப்படை மாற்றம் அடைந்து விட்டால், உடனேயே அதனுடனேயே 'அதன்மேல் கட்டடம் முழுவதுமே' தீவிரமான மாற்றம் அடைகிறது. இப்படிப்பட்ட மாற்றங்களைப் பற்றிக் கவனிக்கும்பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் வெளிப்படை மாற்றத்தையும், சட்டம், ஒழுங்கு, நீதி, மதம், தத்துவம், அரசியல் முதலான சிந்தனை பூர்வமான மாற்றங்களையும் பிரித்துணர வேண்டும். இவை இலேசில் ஏற்பட்டுவிடுவதில்லை.

மனிதர்கள் மாற்றத்தின் அவசியத்தை உணர்ந்து போராடித்தான் இவற்றிற்குத் தயாராகிக் கொள்ளவேண்டும். ஒரு மனிதன் தன்னைப்பற்றித் தான் என்ன நினைத்துக் கொள்கிறானோ அதைப் பொறுத்து நாம் அவனைப்பற்றித் தீர்மானிப்பதில்லை. அதைப் போலவே இந்த மாறும் காலத்தை அதனுடைய சொந்த மனப் பான்மையைக் கொண்டு நாம் தீர்மானிப்பதும் இல்லை. அதற்கு மாறாக இந்த மனப்பான்மை, அப்பொழுதைய யதார்த்த வாழ்க் கையின் முரண்பாடுகளிலிருந்து, சமுதாய உற்பத்திச் சக்தி களுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு களிலிருந்து விளக்கப்பட வேண்டும். ஆசிய நிலப் பிரபுத்வ சமு தாயங்களையும், இன்றைய முதலாளித்துவ ஐரோப்பிய சமுதாயங் களையும் நாம் இங்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம்.

பொருள் முதல் வாதத் தத்துவத்தைச் சமுதாயம் பற்றிய கோட்பாடுகளுக்கும் விரிவுபடுத்தியதானது சரித்திரம் பற்றிய கொள்கைகளிலே இருந்த இரண்டு முக்கியமான குறைகளை விலக்கிற்று. பழைய சரித்திரங்கள் மனிதர்களின் கொள்கை பூர்வமான இயக்கங்களை மாத்திரம் கவனித்தன. இந்த இயக்கங்களை எவை உண்டாக்கின என்பதைக் கணக்கிட வில்லை. சமுதாய உறவுகளின் வளர்ச்சி நியதிகளைக் கணக்கி லெடுத்துக் கொள்ளவில்லை. இந்த உறவுகளின் ஆணிவேர் சமு தாய உற்பத்தி முறையிலே இருக்கின்றது என்பதைக் கண்டு பிடிக்கவே இல்லை. இரண்டாவதாக அவை பாமர மக்களின் இயக்கங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கவில்லை. பொருள் முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சரித்திரம்தான் முதன் முதலாகப் பாமர மக்களின் சமுதாய நிலைமைகளையும் அவற்றிலே ஏற்பட்ட மாற்றங்களையும் திட்டமாக, விஞ்ஞான ரீதியாகக் கணக்கிட உதவிற்று.

மார்க்ஸுக்கு முந்திய சரித்திரம் வெறும் சம்பவக் கோவை யாக, சரித்திர வளர்ச்சிகளின் சில பகுதிகளை மாத்திரமே விளக் குவதாக இருந்தது. மார்க்ஸிஸம் தான் பொருளாதார அமைப் புகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சிகளின் முழுமையான விளக்கமான போதனையை அளித்தது. மாறுபட்ட சமுதாய சக்தி களின் இலட்சியங்களை விளக்கி, சமுதாயத்தின் வேறுபட்ட வர்க் கங்களின் வாழ்க்கை, உற்பத்தி நிலைமைகளைச் சரியாகக் கணித்து, கற்பனையான எண்ணங்களையும் சித்தாந்தங்களையும் புறக் கணித்து, எல்லாவிதமான எண்ணங்களுக்கும் மூலம் உற்பத்தி உறவுகளின் நிலைமையிலேதான் இருக்கிறதென்பதைத் தெளிவு படுத்திற்று.

மக்கள்தான் சரித்திரத்தைச் சமைக்கிருர்கள். ஆனல் மக்களின் எண்ணத்தை எவை உண்டாக்குகின்றன? முரண்பட்ட எண்ணங்களுக்கும் முயற்சிகளுக்கும் இடையே போராட்டத்தைக் கிளப்பி விடுவது எது? மனித சமுதாயங்களின் முழு மனித இனத்திற்கும் இந்தப் போராட்டங்களால் என்ன பயன் உண்டாகிறது? மனிதனின் சரித்திர பூர்வமான இயக்கங்களை உண்டாக்குகிற யதார்த்த வாழ்க்கையின் உற்பத்தி நிலைமைகள் என்ன? இந்த நிலைமைகளின் வளர்ச்சி நியதி என்ன?—இவை எல்லாவற்றைப் பற்றியும் நன்கு கவனித்துச் சரித்திரம் பற்றி விஞ்ஞான பூர்வமாகக் கற்றுணர வழி வகுத்துக் கொடுத்தார் மார்க்ஸ்.

## 4. வர்க்கப் போராட்டம் (The Class Struggle)

எந்தச் சமுதாயத்திலே சில நபர்களின் நலன்கள் மற்றவர்களின் நலன்களோடு முரண்படுகின்றனவோ, அந்தச் சமுதாயம் முரண்பாடுகள் உடையதாய், தனக்குள்ளே போராட்டங்கள் நடைபெறுவதாய், புரட்சியும் பிற்போக்கும், அமைதியும், யுத்தமும், தேக்கமும் முன்னேற்றமும் நிரம்பியதாய் இருக்கிறது. இந்த மாதிரி, சமுதாயத்திலே குழப்பங்கள் நிலவுவதன் காரணத்தைக் கண்டு பிடிக்க மார்க்ஸிஸம்தான் முதன் முதல் ஒரு திறவு கோலை அளித்தது. ஒரு சமுதாயத்திலோ அல்லது சமுதாயங்களின் கூட்டத்திலோ உள்ள எல்லா நபர்களின் நலன்களையும் கற்றுணர்வதுதான் இந்த நலன்களைப்பற்றி விஞ்ஞான பூர்வமான ஒரு முடி



வுக்கு வர உதவமுடியும். இந்த நலன்களுக்கிடையே முரண்பாடுகள் வருவதன் காரணம், அந்தச் சமுதாயம் பிரிவு பட்டிருக்கும் வர்க்கங்களின் வாழ்க்கை நிலைமையிலும் அந்தஸ்திலும் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்திருக்கிறது.

"இது வரை எழுதப்பட்டுள்ள சரித்திரம் முழுவதுமே வர்க்கப் போராட்டங்களின் சரித்திரம் ஆகும்," என்று மார்க்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கையில் குறிப்பிடுகிருர்; அடிமை, எஜமானன்-அடிமைத் தொழிலாளி, எஜமானன்—பண்ணைக் குடியானவன் பண்ணை எஜமானன்-பட்டணத் தொழிலாளி, முதலாளி—சுருக்கமாக அடக்கப் பட்டவன், அடக்கி வைப்பவன் — இவர்களுக்கிடையே நேர் முகமாகவோ, மறைமுகமாகவோ, ஓர் இடையருத் போராட்டம் நடந்து கொண்டே வநதிருக்கிறது. இந்தப் போராட்டங்களின் முடிவு இநத வர்க்கங்கள் அடியோடு அழிந்து போவதிலோ, அல்லது சமுதாயம் முழுவதுமே புரட்சிகரமாக மாற்றி அமைக்கப் படுவதிலோ கொண்டு விட்டிருக்கிறது.

நிலப் பிரபுத்வ சமுதாயத்தின் அழிவின் மேல் கட்டுப் பட்டு அமைந்திருக்கும் இன்றைய முதலாளித்துவ சமுதாயம் வர்க்க முரண்பாடுகளற்றதாக இல்லை ஆனல் இது புதிய வர்க்கங்களை உண்டு பண்ணியிருக்கிறது; புதிய விதமான போராட்டங்களுக்கும் வித்தூன்றியிருக்கிறது. ஆனல் முதலாளித்துவ சகாப்தத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு இருக்கிறது. அதாவது இது வர்க்கப் பகைமைகளை நேரடியானதாக்கி விட்டது. சமுதாயம் முழுவதுமே நாளுக்கு நாள் இரண்டு பெரிய பகை முகாம்களிலே பிரிவு பட்டு வருகிறது. பாட்டாளி வர்க்கத்தின் முகாம் ஒன்று. முதலாளி வர்க்கத்தின் முகாம் ஒன்று.

பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னல் ஐரோப்பிய சரித்திரத்தில் பல நாடுகளில் நிகழ்ச்சிகளின் உண்மையான அடிப்படை வர்க்கங்களின் போராட்டம் தான் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவருகிறது. இன்றைய, முதலாளித்துவம் பரிபூரண வெற்றி பெற்றிருக்கும் சகாப்தம், பிரதிநிதித்வ ஸ்தாபனங்கள், பரந்த அளவில் வாக்குரிமை, மலிவான தினச்செய்தி ஸ்தாபனங்கள் இவைகளை உடைய இந்த சகாப்தம் வர்க்கப் போராட்டம்தான் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படை என்பதை இன்னும் தெளிவாக, வளர்ந்து வரும் தொழிற் சங்க ஸ்தாபனங்கள் மூலமாகவும் முதலாளிகள் சங்கங்கள் மூலமாகவும் வெளிப் படுத்தி வருகிறது. இன்றைய சமுதாயத்திலே இருக்கும் வர்க்கங்கள், வர்க்கங்களின்

1210

EXTENSION

வளர்ச்சி ஆகியவை பற்றிக் கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸ் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"முதலாளித்வத்தை எதிர்த்து இன்று நேருக்கு நேர் நிற்கும் வர்க்கங்களில் எல்லாம், பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் புரட்சிகரமானது. மற்ற வர்க்கங்கள் நவீன தொழில் வளர்ச்சியின் முன் நிற்க மாட்டாமல் அழிந்து மறைகின்றன. ஆனால் தொழில் வளர்ச்சி தன் விசேஷ உற்பத்தியாகப் பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது. கீழ்த்தர மத்திய வர்க்கம், சிறு தொழில் கடைக்காரன், கலைஞன், விவசாயி எல்லோரும் முதலாளித்வத்தை எதிர்த்துக் போராடுகின்றனர் — மத்திய தர வர்க்கத்தினராக இருக்கும் தங்கள் நிலைமையிலிருந்து இறங்கி விடாமல் இருப்பதற்காகத்தான். அதனால் அவர்கள் புரட்சிகரமானவர்கள் அல்ல. அவர்கள் மாறுதலை விரும்பாதவர்கள். இல்லை, பிற்போக்கானவர்கள் என்று கூடக் கூறலாம். அவர்கள் சரித்திர ஓட்டத்தைக் தடுத்து நிறுத்த விரும்புகிறார்கள். ஏதாவது காரணத்தால் அவர்கள் புரட்சிகரமானவர்களாக இருக்கிறார்கள் என்றால் பாட்டாளிகளாக மாறவேண்டியநிலைமையில் இருப்பதால்தான் என்றுதான் கருத வேண்டும். எனவே அவர்கள் தங்களுடையதற்காக வாழ்வைப் பாதுகாக்கவில்லை; எதிர்கால நலன்களுக்காகவே அப்படி இருக்கிறார்கள். தங்களுடைய சொந்த இடத்தை விட்டுப் பாட்டாளி வர்க்கத்தோடு வந்து சேருகிறார்கள்."

மார்க்ஸ் தன்னுடைய பல கட்டுரைகளிலே ஒவ்வொரு வர்க்கத்தையும், அந்த வர்க்கத்திற்குள்ளிருக்கும் உட்பிரிவுகளையும் விளக்கிக் காட்டி எப்படி ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் அரசியல் போராட்டமாகவே இருக்கிறது என்பதை விளக்கியிருக்கிறார். சரித்திர வளர்ச்சியின் விளைவுகளைப் பரிசீலிப்பதற்காகவே மார்க்ஸ் வர்க்கங்களைப்பற்றி விரிவாக அலசி ஆராய்கிறார்.

மார்க்ஸின் பொருளாதார தத்துவம்தான் இவற்றில் எல்லாம் மிகவும் முக்கியமானதாகும்.



பிரிவு: 2

# மூலதனம் (DAS-CAPITAL)

[மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' எனும் நூல் உலகிலே தலை சிறந்த நூல்களில் ஒன்ருகக் கருதப்படுகிறது.]

## 1. மார்க்ஸின் பொருளாதார தத்துவம் (Marx's Economic Doctrine)

"இன்றைய சமுதாய இயக்கத்தின் பொருளாதார நீதியை வெளிப்படையாக்குவதுதான் இந்த நூலின் நோக்கம்," என்று மார்க்ஸ் 'மூலதனம்' எனும் நூலிற்கு எழுதிய முகவுரையில் குறிப்பிடுகிருர். ஒரு சரித்திர பூர்வமாகக் குறிப்பிட்டுச் சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி பற்றிய உண்மைகளை ஆராய்வது—அதுதான் மார்க்ஸின் பொருளாதார தத்துவம். முதலாளித்வ சமுதாயத்திலே பண்ட உற்பத்திதான் முதலாவதானது. அதனுல் மார்க்ஸின் ஆராய்ச்சியும் உற்பத்தியும் பண்டத்திலிருந்து ஆரம்பமாகிறது.

## 2. மதிப்பீடு. (Value)

பண்டம் என்பது, முதலாவதாக, ஒரு மனிதத் தேவையைப் பூர்த்தி செய்கிற பொருள். இரண்டாவதாக அது வேருெரு

பொருளுக்கு மாற்றப்படக்கூடியது. ஒரு பொருளின் உபயோகம் அதற்கு ஓர் உபயோக மதிப்பை அளிக்கிறது. மதிப்பு, அல்லது மாற்று மதிப்பு (*Exchange Value*) என்பது முதலாவதாக ஒரு தொடர்பாக, ஒரு குறிப்பிட்ட அளவு உபயோக மதிப்புள்ள ஒருவகைப் பொருள், இன்னொரு குறிப்பிட்ட அளவு உபயோக மதிப்புள்ள வேறு வகைப் பொருளுக்கு மாற்றப்பட உதவும் அளவாகத் தோற்றம் அளிக்கிறது. தினந்தோறும் இதைப் போன்ற கோடிக் கணக்கான பண்ட மாற்றங்கள்-மிகவும் வேறுபட்ட தரத்தைச் சேர்ந்த உபயோக மதிப்புகள் கூட ஒன்றுக்கொன்று மாற்றப்படுவது நடைபெறுவதை—நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஒரு வகைச் சமுதாய உறவிலே இப்படி இடைவிடாமல் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பண்டங்களிலே பொதுப்படையாக இருக்கக்கூடிய அம்சம் என்ன? **இவை உழைப்பால் உற்பத்தி செய்யப்படுபவை. பண்டங்களை மாற்றிக் கொள்வதிலே மக்கள் வெவ்வேறு வகைப்பட்ட உழைப்பையே மாற்றிக்கொள்கிறார்கள்.**

பண்ட உற்பத்தி ஒரு வகைச் சமுதாய உறவுகளை உண்டு பண்ணுகிறது. தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் வெவ்வேறு வகைப் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள். (சமுதாய உழைப்பில் வெவ்வேறு பிரிவுகளை உண்டுபண்ணுகிறார்கள்.) இந்தப் பண்டங்கள் எல்லாம் ஒன்றோடொன்று மாற்றப்படுகின்றன. எனவே, எல்லாப் பண்டங்களிலும் பொதுப்படையாக இருப்பது ஒரே வகை உழைப்போ, உற்பத்தியின் ஒரு வகையைச் சேர்ந்த ஒரேமாதிரியான நிலையான உழைப்போ அல்ல—பொதுப்படையான மனித உழைப்புத்தான். ஒரு சமுதாயத்தின் உழைப்புச் சக்தி முழுவதும், உற்பத்திப் பண்டங்களின் மொத்த மதிப்பிலே பிரதிபலிக்கப்படுவது முழுமையும் மனித உழைப்புத்தான். பல்லாயிரக் கணக்கான பண்டமாற்றங்கள் இதை நிரூபிக்கின்றன. எனவே ஒவ்வொரு குறிப்பிட்ட பண்டமும் சமுதாயத் தேவையான உழைப்புச் சக்தியில் ஒரு குறிப்பிட்ட அளவையே பிரதிபலிக்கிறது. மதிப்பின் அளவு சமுதாயத் தேவையான உழைப்புச் சக்தியின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது அந்தக்குறிப்பிட்ட உபயோகமதிப்புள்ள குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்திக்குத் தேவையான சமுதாய உழைப்பின் நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பண்ட மாற்றத்திலே, வேறுபட்ட பொருள்களை நாம் மதிப்பீடுகளாகச் சமனப்படுத்துகையில், நாம் மனித உழைப்பையும், அந்தப் பண்டங்களின் மேல் (அவற்றின் உற்பத்திக்காக) செலவழிக்கப்

பட்ட வெவ்வேறு வகை உழைப்பையும் சமனப்படுத்துகிறோம். நாம் இதை உணர்வதில்லை. ஆனால் செய்கிறோம்.

பொருளாதார வாதி ஒருவர் முன்பு கூறினர், மதிப்பு என்பது இரண்டு மனிதர்களுக்கிடையே உள்ள தொடர்பு என்று. மனிதர்களுக்கிடையே உள்ள தொடர்பு பொருள்களின் உருவத்தில் வெளிப்படுத்தப்படுவது என்று மாத்திரம் அவர் சேர்த்துக்கொண்டிருந்தால் போதுமானது.

சமுதாயத்தின் ஒருவகைச் சரித்திரபூர்வமான அமைப்பிலே உற்பத்தி உறவுகள் எப்படி இருக்கின்றன என்ற அடிப்படையிலிருந்து பார்த்தால்தான் மதிப்பு என்பது என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இந்த உறவுகள் பண்டமாற்றத்திலே பெரிய அளவு, பல்லாயிரக்கணக்கான நடவை திருப்பத்திரும்ப வெளிப்படுகின்றன. எல்லாப் பண்டங்களும், மதிப்பைப் பொறுத்த அளவில், உழைப்புச் சக்தியால் பொதியப்பட்ட உபயோக உருவங்கள்தாம். பண்டங்களிலே பொதியப்பட்டிருக்கும் உழைப்புச் சக்தியின் இருவகைப் பண்பைப் பரிசீலனை செய்த தன்பின் மார்க்ஸ் மதிப்பின் வகைகளையும் பணத்தையும் பற்றி ஆராயப் புகுகிருர்.

பணமதிப்பு எப்படித் தோன்றிற்று என்பதை இங்கே ஆராய வேண்டும். பண்ட மாற்றத்தின் சரித்திர பூர்வமான வளர்ச்சியை, தனிப்பட்ட எப்போதாவது நடைபெற்ற பண்டமாற்றிலிருந்து (பண்டங்கள் பண்டங்களுக்கு யதேச்சையாக மாற்றப்படுவது) உலக முழுவதும் தழுவிய, வெவ்வேறு வகைப்பட்ட பல பண்டங்கள் ஒரே பண்டத்திற்கு மாற்றப்படுவது, தங்கம் அந்த ஒரே வகைப் பண்டமாகவும், உலகம் எங்கணும் மாற்றப் படக்கூடியதாகவும், பணமதிப்புக்கு அடைந்த வளர்ச்சியை முழுவதையும் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. பண்ட உற்பத்தி, மாற்றத்தின் வளர்ச்சியின் மிக உயர்ந்த பொருளாக, பணம் தனி உழைப்பின் சமுதாயப் பண்பை, மார்க்கெட்டால் ஒன்றுபடுத்தப் பட்டிருக்கும் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் சமுதாய பந்தத்தை, மறைத்துவிட்டது.

மார்க்ஸ், பணத்தின் பலவகைச் செயல்களையும் ஆராய்கிருர். பணம் பண்டமாற்றத்திலே ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பிரதிபலிக்கிறது. பண்டங்களின் மதிப்பீடாக, புழக்கத்தின் சாதனமாக, சம்பளமாகக் கொடுக்கப்படக்கூடியதாக, சேமிப்பாக, உலகம் எங்கணும் புழங்கக்கூடியதாக, ஒரு முறையில்

அல்லது இன்னொரு முறையில் சமுதாய உற்பத்தியிலே ஏதாவது ஒரு வேலையை நிறைவேற்றுகிறது.

## 3. அமித மதிப்பீடு. (Surplus Value)

பண்ட உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்திலே பணம் மூலதனமாக மாற்றம் அடைகிறது. பண்ட மாற்றத்தின் ஒழுங்கு, பண்டம்—பணம்—பண்டம் ஆக இருந்தது. அதாவது ஒரு பண்டத்தைப் பணத்திற்கு விற்று அப் பணத்தைக் கொண்டு இன்னொரு பண்டம் வாங்குவது—இன்னொரு பண்டத்தை வாங்குவதற்காக ஒரு பண்டத்தைப் பணத்திற்கு விற்பது என்பதாக இருந்தது. இதற்கு மாருக மூலதனத்தின் ஒழுங்கு, பணம்—பண்டம்—பணம் என்று மாறிற்று. அதாவது பணத்தைக் கொண்டு ஒரு பண்டத்தை (அதை மீண்டும் லாபத்திற்கு), பணத்திற்கு விற்பதற்காக வாங்குவது என்ருயிற்று. இவ்வாருகப் புழக்கத்தில் போடப்பட்ட பணம் தன் சொந்த மதிப்பிலிருந்து அதிகரிப்பதை அமித மதிப்பீடு என்று மார்க்ஸ் குறிப்பிடுகிருர். முதலாளித்வ பணப்புழக்கத்திலே பணம் இப்படிக் 'குட்டி போடுவது' எல்லோருக்கும் தெரிந்த உண்மை. பணத்தின் இந்த 'வளர்ச்சி' தான் அதை மூலதனமாக, ஒரு சரித்திரபூர்வமான சமுதாய உற்பத்தி உறவை உண்டுபண்ணுவதாக மாற்றுகிறது.

பண்டப் புழக்கத்திலே அமித மதிப்பு உண்டாக முடியாது. ஏனென்ருல் அதில் சம்மதிப்பீடுகள் தாம் மாற்றப்படுகின்றன. விலையைக் கூட்டிவைப்பதாலும் அது உண்டாகிவிட முடியாது. ஏனென்ருல் வாங்குவோர் விற்போருடைய பரஸ்பர லாப நஷ்டங்கள் ஒன்றையொன்று சமனப்படுத்திவிடும். இங்கே நாம் தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கவில்லை. சமுதாயம் முழுவதும் தழுவிய, பெரும்பான்மையான ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிருேம். அதனல் ஓர் அமித மதிப்பை அடைய, பணத்தை வைத்திருப்பவன், சந்தையில் தன்னுடைய உபயோக மதிப்பால் ஒரு மதிப்பீட்டை உண்டுபண்ணக்கூடிய ஒரு பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும். தன்னுடைய அழிவால் ஒரு மதிப்பை உண்டுபண்ணக்கூடிய ஒரு பண்டத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பண்டம் இருக்கிறது. அதுதான் மனித உழைப்புச் சக்தி. அதனுடைய அழிமானம் உழைப்பு. அது மதிப்பீட்டை உண்டுபண்ணுகிறது. பணச் சொந்தக்காரன் உழைப்புச் சக்தியை அதனுடைய மதிப்புக்கு விலைக்கு வாங்குகிருன். உழைப்பின் மதிப்பும், மற்ற பண்டங்களினுடையதைப்

போலவே அதன் உற்பத்திக்குத் தேவையான சமுதாய உழைப்பு நேரத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. (இது தொழிலாளியையும் அவனுடைய குடும்பத்தையும் உயிரோடு வைத்திருக்கப் போதுமான விலையின் அளவாகும்). உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கியதும் பணச் சொந்தக்காரன் அதை உபயோகப் படுத்த, அதை நாள் முழுவதும், பனிரெண்டு மணி நேரம் என்று வைத்துக்கொள்வோம்--வேலையில் ஈடுபடுத்த உரிமை பெற்றவனுகிறான். ஆனல், ஆறு மணி நேரத்தில் உழைப்பாளி, தன் வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவு பண்டத்தை உற்பத்தி செய்துவிடுகிறுன். மற்ற ஆறுமணி நேரத்தில் (அமித உழைப்பு நேரம்) அவன் அதிகமான பண்டத்தை அல்லது அமித மதிப்பை உற்பத்தி செய்கிறுன். இதற்கு முதலாளி சம்பளம் கொடுப்பதில்லை.

உற்பத்தி நியதியின் அடைப்படையிலிருந்து பார்க்கும்போது மூலதனத்தின் இரண்டு பகுதிகளைப் பிரித்துணர வேண்டும். உற்பத்திச்சாதனங்கள் (இயந்திரம், கருவிகள், மூலப்பொருள்கள்) ஆகியவற்றின் மேல் செலவு செய்யப்படும் நிலையான மூலதனம் ஒரு பகுதி. இதனுடைய மதிப்பு முழுவதும், எந்த விதமான மாற்றமும் இல்லாமல் ஒரே அடியாகவோ, பகுதிபகுதியாகவோ பண்டங்களின் மதிப்போடு சேர்க்கப்படுகிறது. இன்னெரு பகுதி மாறுபடும் மூலதனம், உழைப்புச் சக்தி மேல் செலவிடப்படுவது. மூலதனத்தின் இப்பகுதி மாறுபடாதது அல்ல. இது உழைப்பின் நியதியிலே அமித மதிப்பை உண்டுபண்ணி வளர்க்கிறது. இதனல், மூலதனம் உழைப்புச் சக்தியை எந்த அளவு சுரண்டுகிறது என்பதை எடுத்துக்காட்ட அமித மதிப்பு முழு மூலதனத்தோடும் ஒப்பிடப்படக்கூடாது. மாறுபடும் மூலதனப் பகுதியோடு மாத்திரம்தான் ஒப்பிட வேண்டும். இந்த அமித மதிப்பு நூற்றுக்கு நூருக இருக்கிறது என்று ஓர் உதாரணத்தின் மூலம் மார்க்ஸ் விளக்குகிருர்.

மூலதனத்தின் தோற்றத்திற்கு அவசியமான சரித்திர பூர்வமான நிலைமைகள் யாவை? முதலாவதாக ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தனிப்பட்ட நபர்களின் கைகளிலே குவிந்திருப்பதோடு பொதுப்படையாகப் பண்ட உற்பத்தி உயர்ந்த நிலைக்கு வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். இரண்டாவதாக நிலமோ வேறு எதாவது உற்பத்திச் சாதனமோ கையில் இல்லாமலும் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லாமலும், அவ்வாறு தன் உழைப்புச் சக்தியை

விற்ருல் அல்லாமல் பிழைக்க முடியாது என்கிற நிலைமையிலும் இருக்கிற 'சுயேச்சையான' தொழிலாளிகள் இருக்க வேண்டும்.

அமித மதிப்பின் அளவை அதிகரிப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. வேலை நேரத்தை நீட்டுவது (**நேரடியான அமித மதிப்பு**) (ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய) தேவைப்படும் வேலை நேரத்தைக் குறைப்பது– (அதாவது குறைந்த அளவு நேரத்தில் பண்டம் தயாராகும்படி செய்வது) **தொடர்புள்ள அமித மதிப்பு**. முதலாவது முறையைப்பற்றி ஆராய்கையில் பதினைன்காம் நூற்ருண்டிலிருந்து பதினேழாம் நூற்ருண்டுவரை தொழிலாளி வர்க்கம் வேலை நேரத்தைக் குறைப்பதற்காக நடத்திய இடையருத போராட்டங்களையும், அரசாங்கம் வேலை நேரத்தை அதிகப்படுத்துவதற்காகத் தலையிட்டுக் கொண்டே இருந்ததையும் கடைசியாகப் பத்தொன்பதாம் நூற்ருண்டில் தொழிற்சாலைச் சட்டத்தின்படி வேலை நேரத்தைக் குறைக்க அரசாங்கம் தலையிட்டதையும், மார்க்ஸ் மிக விளக்கமாக எடுத்துக் காட்டுகிருர். 'மூலதனம்' (மார்க்ஸின் நூல்) தோன்றியதன் பிறகு, நாகரிகமடைந்துள்ள நாடுகளின் தொழிலாளர் இயக்க சரித்திரம் இந்த உண்மைக்கு மகத்தான ஆதாரங்களைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

தொடர்புள்ள அமித மதிப்பைப் பற்றி ஆராய்கையில் மார்க்ஸ், முதலாளித்வம் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்திருக்கும் சரித்திர பூர்வமான மூன்று சட்டங்களைப் பரிசீலனை செய்கிருர். 1. சாதாரண ஒத்துழைப்பு முறை. 2 வேலைப் பிரிவினை முறை, (பாகங்களாக உற்பத்தி செய்து. ஒன்று சேர்க்கும் முறை.) 3. இயந்திரங்களும் பெரிய அளவு உற்பத்தியும். முதல் இரண்டு சட்டங்களுக்கும் ருஷியாவில் 'குடிசைத் தொழில்' என்ற முறையைப் பற்றிச் செய்த பரிசீலனை ஏராளமான சான்றுகளை அளித்திருக்கிறது. பெரிய அளவு இயந்திரத் தொழிற்சாலைகளின் புரட்சிகரமான விளைவு ருஷியா ஜப்பான் முதலிய புதிய நாடுகளிலே கடந்த அரை நூற்ருண்டில் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

மூலதனக் குவியல், அல்லது அமித மதிப்பு மூலதனமாக மாற்றப்படுவது, அதன் உபயோகம் முதலாளியின் போக பாக்கியங்களுக்கல்லாமல் புதிய உற்பத்திக்காகப் பயன் படுவது—பற்றிய மார்க்ஸின் ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது. பழைய பொருளாதார விதிகள் அமித மதிப்பு முழுவதும் மாறுபடும் மூலதனமாக (தொழிலாளிக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படும் பகுதி) மாற்றப்படுகிறது என்று குறிப்பிட்டதன் தவறை மார்க்ஸ்

சுட்டிக்காட்டினர். உண்மையில் அது உற்பத்திச் சாதனத்திற்காகவும் மாறுபடும் மூலதனத்திற்காகவும் பிரிவுபட்டுத்தான் செல்கிறது. நிலையான மூலதனம் (உற்பத்திச் சாதனங்கள் மேல் செலவிடப்படுவது) மிக வேகமாக வளர்வதுதான் முதலாளித்வத்தின் வளர்ச்சிக்கும் அதிலிருந்து சோஷலிஸ மாற்றத்திற்கும் இன்றியமையாததாகும்.

மூலதனம் குவிவதானது, தொழிலாளர்களின் உழைப்புக்குப் பதிலாக, இயந்திர உழைப்பு அதிகப்பட்டு, ஒரு முனையில் செல்வத்தையும் மறு முனையில் வறுமையையும் வளர்த்து, வேலை தேடுவோர் பட்டாளத்தைப் பெருக்கி, முதலாளித்வவாதிகளின் 'ஜனப் பெருக்கக்' (*Over Population*) கூப்பாட்டிற்குக் காரணமாகி, மூலதனம் மேலும் மேலும் வேகமாக உற்பத்தியைப் பெருக்க மூலகாரணமாகிறது. இது கடன் வசதிகளும் உற்பத்திச் சாதனங்களிலே மூலதனம் குவிந்துவிடுவதுமாகச் சேர்ந்து முதலாளித்வநாடுகளிலே ஏற்படுகிற 'உற்பத்திப்பெருக்கு' (*Over Production*) நெருக்கடிக்குக் காரணமாகிறது—முதலாவது இந்த நெருக்கடி பத்தாண்டுகளுக்கொரு முறை ஏற்பட்டது. பின்னல் இன்னும் நீடித்த காலத்திற்கொருமுறை, எப்பொழுது வரும் என்று தெரியாத காலவரையரையில் ஏற்படுவதாயிற்று. மூலதனக் குவியலிலே, ஆரம்ப மூலதனக் குவியலைப் பிரித்துணர வேண்டும். உற்பத்திச் சாதனத்திலே இருந்து தொழிலாளியைப் பலவந்தமாகப் பிரித்தல், நிலத்திலிருந்து விவசாயியை ஓட்டல், பாமரர்களிடமிருந்து திருடுவது, கலோனிய தேசியகடன் முறை கடன் பத்திரங்கள், இன்னும் இவை போன்றவற்ருல்—ஆரம்ப மூலதனக் குவியலானது ஒரு பக்கம் 'சுயேச்சைத்' தொழிலாளியையும் மறுபக்கம் முதலாளியையும் உண்டுபண்ணுகிறது.

முதலாளித்வக் குவியலின் சரித்திரபூர்வமான குணத்தை மார்க்ஸ் கீழ்கண்டவாறுவர்ணிக்கிருர்: "உற்பத்திசெய்பவர்களைப் பறிமுதல் செய்வதென்பது ஈவிரக்கமற்ற அராஜகத் தன்மையோடு நடத்தப்பட்டது. விவசாயியும், கைத்தொழிலாளியும் பாடுபட்டுச் சம்பாதித்த தனம், மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுகிற முதலாளித்வ மூலதனத்தால் பிடுங்கப்பட்டுவிட்டது. அதனுல் இப்பொழுது பறிமுதல் செய்யப்பட வேண்டியவர்கள் தனக்காக, தம் சொந்த ஜீவியத்திற்காகப் பாடுபட வேண்டிய தொழிலாளிகள் அல்ல- தொழிலாளிகளைச்சுரண்டிக்கொண்டிருக்கும் முதலாளிதான். இந்தப் பறிமுதல், முதலாளித்வ உற்பத்திக்கு இன்றியமையாத நியதியாகிய, மூலதனம் மையப்படுத்தப் படுவதாலேயே நிறைவேற்றப்படுகிறது. ஒரு முதலாளி பலபேரைக்

சொல்கிறான். சில பெரு முதலாளிகள், பல முதலாளிகளைப் பறிமுதல் செய்து அழிந்துபோகச் செய்வதானது விரிவடைந்து கொண்டே போய், தொழில் முறையில் கூட்டுறவு அமைப்புகள் விஞ்ஞானத் தொழில் நுணுக்கங்கள் கையாளப்படல், உழைப்புக் கருவிகள் பொதுப்படத்தான் உபயோகப்படுத்தப்பட முடியும் என்ற நிலைமைக்கு மாற்றப்படல், உற்பத்திச் சாதனங்களுக்கான செலவைக் குறைத்தல், மக்கள் அனைவரையும் உலகச் சந்தை என்ற கயிற்றோடு பிணைத்துவிடல், இப்படியாக முதலாளித்வ முறை சர்வ தேசத்தன்மை அடைதல் என்று வளர்ச்சி அடைகிறது. தொழில்களை எல்லாம் தங்கள் கையிலேயே குவித்துக் கொள்ளும் மூலதன அரக்கர்களின் தொகை ஒரு பக்கம் குறைந்து கொண்டு வருகிறது. (சில பெரு முதலாளிகளின் கைகளில் தொழில்கள் யாவும் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.) அதே சமயத்தில் இன்னொரு பக்கம் வறுமையில், துன்பத்தில், அவமானத்தில், அடிமைத் தனத்தில், சுரண்டலில் அழுத்தப்படும் மக்களின் தொகை விரிந்துகொண்டே வருகிறது. ஆனால் இத்துடனேயே தொழிலாளி வர்க்கத்தின் கிளர்ச்சிகளும் வலுவடைகின்றன. முதலாளித்வ உற்பத்தி முறையிலேயே தொழிலாளிகள், ஒன்றுபடுத்தப்பட்டு, கட்டுப்பாடும், ஸ்தாபன அமைப்பும் உடையவர்களாகிறார்கள். மூலதன ஏகபோகத்துவம் எந்த உற்பத்தி முறையை வளர்த்து வளமாக்கி வந்ததோ அதற்கே ஒரு சங்கிலாக மாறுகிறது. உற்பத்திச் சாதனங்கள் மையப்படுத்தப்பட்டுவிட்டதும், உழைப்பு சமுதாய மயமாக்கப்பட்டு விட்டதும் ஒரு நிலையில் இந்த முதலாளித்வப் போர்வையின் கீழ் நடைபெற முடியாத நிலை ஏற்படுகிறது. இந்தப் போர்வை கிழித்தெறியப்படுகிறது. முதலாளித்வத் தனியுடைமை கூப்பாடு போடுகிறது. இதோ! இதுவரை பறிமுதல் செய்து வந்தவர்கள் (முதலாளிகள்) பறிமுதல் செய்யப்படுகிறார்கள்! (மூலதனம்: முதல் பாகம்.)

'மூலதனத்தின்' இரண்டாம் பாகத்தில், மார்க்ஸ் ஒன்று சேர்க்கப்பட்ட சமுதாய மூலதனம் புனருற்பத்தி பெறுவதை விளக்கினார். இங்கும் மார்க்ஸ் தனி நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்ளாமல் சமுதாயம் முழுவதிலும் பொருளாதார இயல் எப்படி நடைபெறுகிறது என்பதை விவரிக்கிறார்: மார்க்ஸ் சமுதாய உற்பத்தியை, 1. உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி. 2. தேவைப் பொருள்களின் உற்பத்தி என்று இரண்டு வகையாகப் பிரித்துக்கொண்டு—ஒன்று சேர்க்கப்பட்ட சமுதாய மூலதனம் முந்திய அளவிலே புனருற்பத்திக்கும், மூலதனக் குவிய

லுக்குக் புழங்கப்படும் விதத்தைப் புள்ளி விவரத்தோடு விவர மாக அலசி ஆராயப் புகுகிருர்.

'மூலதனத்'தின் மூன்ரும் பாகம் மதிப்பீடு முறைப்படி லாப விகித அமைப்பைப்பற்றிய பிரச்னேயைத் தெளிவுபடுத்துகிருர். பொருளாதார விஞ்ஞானத்திலே மார்க்ஸ் செய்த அபூர்வமான முன்னேற்றம் அவர் அதைச் சமுதாயம் முழுமைக்கும் தழுவிய பெரிய அளவில் பரிசிலனே செய்து அதன் சமுதாயத்தன்மையை விளக்கியதாகும். மற்றவர்கள் தனிப்பட்ட நிலேமைகளே எடுத்துக் கொண்டு அந்த விஞ்ஞானத்தையே குழப்பித் திரித்து இழிந்த நிலேமைக்கு ஆளாக்கி யிருந்தார்கள். மார்க்ஸ் முதலாவதாக அமித மதிப்பீட்டைப் பற்றி ஆராய்ந்து அதனுடைய பகுதிகளாகிய, லாபம், வட்டி, நிலவாடகை (குத்தகை) முதலியவற்றைப் பரிசிலனே செய்கிருர் லாபம் என்பது ஒரு தொழிலில் போடப்பட்டிருக்கும் மூலதனத்திற்கும் அதில் கிடைக்கும் அமித மதிப்பிற்கும் இடையே உள்ள விகிதாச்சாரம். பெரிய அளவு மூலதனம்—அதாவது மாறுபடும் மூலதனத்தைக் காட்டிலும் நிலேயான மூலதனம் அதிகமாக இருப்பது—ஒரு குறைந்த விகித லாபத்தையே அளிக்கிறது. ஆனல் சிறிய அளவு முதலீடு சராசரிக்கு அதிகமான லாப விகிதத்தை அளிக்கிறது. மூலதனப் போட்டியும், அது ஒரு வகை உற்பத்தியிலிருந்து இன்னெரு வகை உற்பத்திக்கு மாறுவதற்கு உள்ள சுயேச்சையும் லாப விகிதத்தைச் சாராசரியின் அளவுக்குக் குறைத்துவிடுகிறது, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்டங்களின் மொத்த மதிப்பு பண்டங்களின் விலேகளோடு பொருந்தி நிற்கிறது. ஆனல் தனிப்பட்ட பண்ட உற்பத்திகளில் போட்டியின் காரணமாக பண்டங்கள் அவற்றின் மதிப்புக்கு விற்கப்படாமல் உற்பத்தி விலேயோடு ஒரு சாராசரி லாபத்திற்கு விற்கப்படுகின்றன.

விலேக்கும் மதிப்புக்கும் உள்ள வேறுபாடும், லாபம் சமனப்படுத்தப்படும் முறையும், மதிப்பு என்கிற அடிப்படையிலிருந்து விளக்கப்படுகிறது—ஏனென்ருல் பண்டங்களின் மொத்த மதிப்பு மொத்த விலேயோடு பொருந்தி நிற்கிறது. ஆனல் சமுதாய மதிப்பில் விலேக் குறைவு என்பது நேரடியாக ஏற்பட்டுவிடுவதில்லே. சுற்றி வளேத்துக்கொண்டு சிக்கலான வழியிலேதான் ஏற்படுகிறது. தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் பண்டங்களே உற பத்தி செய்யும் ஒரு சமுதாயத்திலே, அவர்கள் சந்தையில் தவிர வேறுவிதத்தில் ஒன்றுபடுத்தப்பட்டிராததால் நியதி, சட்டம் என் பது சமூக அளவில் சாதாரணமானதாக, தனிப்பட்டவர்கள் இப்பக்கமோ அப்பக்கமோ ஒன்றையொன்று சமனப்படுத்தும் வகையில் விலகிச் செல்லும்படியாகத்தான் இருக்கும்.

உழைப்பின் உற்பத்தி அளவு அதிகரிப்பதானது, மாறுபடும் மூலதனத்தைவிட நிலையான மூலதனம் வேகமாக அதிகரித்து வளரச்செய்கிறது. ஆனால் அமிதமதிப்பு என்பது மாறுபடும் மூலதனத்தால் மாத்திரம் உண்டாக்கப்படுவதாகையால் லாபவிகிதம், (அமிதமதிப்பு முழு மூலதனத்தோடு ஒப்பிடப் படுகையில்) குறைந்து காணப்படுகிறது. மார்க்ஸ் இந்தப் பான்மை பற்றியும் அதை மறைத்து அல்லது சமப்படுத்திக் காட்டுகிற பலவகைச் சந்தர்ப்பங்களையும் பிரித்துக் காட்டுகிறார். 'மூலதனத்'தின் மூன்றும் பகுதி, வட்டிக் கடைக்காரனின் மூலதனம், வியாபார மூலதனம், பண மூலதனம் ஆகியவைப்பற்றி ஆராய்கிறது. இவற்றில் எல்லாம் முக்கியமானது நில வாடகை அல்லது குத்தகை பற்றிய கொள்கையாகும்.

முதலாளித்வ நாடுகளில் நிலம் குறிப்பிடத்தக்க அளவே இருப்பதாலும், அதுவும் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்குச் சொந்தமாக இருப்பதாலும், விவசாய உற்பத்திகளின் விலை, சாதாரண நிலத்தில் ஏற்படும் உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை. மிக மோசமான நிலத்தில், மோசமான நிலைமைகளில், சந்தைக்குக் கொண்டு போகப்பட மோசமான வசதிகளில், ஏற்படும் உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலைக்கும், நல்ல நிலத்தில் நல்ல நிலைமைகளில் உண்டாக்கும் உற்பத்தியின் விலைக்கும் உள்ள வேறுபாடு, மாறுபடும் குத்தகையாகிறது.

மாறுபடும் குத்தகை என்பது மிகமோசமான நிலத்திலிருந்து அதைவிட நல்ல நிலத்திற்கு மாறிச்செல்லும் போது ஏற்படுகிறது என்பது தவறு. வேறுபட்ட நிலப்பகுதிகளின் வளமையைப் பொறுத்து, நிலத்தில் போடப்படும் மூலதனத்தின் அளவு மாறுபடுவதிலிருந்துதான் குத்தகையின் மாறுபடும் தன்மை ஏற்படுகிறது. நிலம் (விவசாய நுணுக்கங்களில் முன்னேற்றம், நகரங்களின் வளர்ச்சி ஆகிய காரணங்களால்) ஒருவகையிலிருந்து இன்னொரு வகைக்கு மாறிவிடலாம். உற்பத்திக் குறைவுக்கு இயற்கையைக் குறைகூறும் முதலாளித்வ முறை தவறு. தொழிலின் எல்லாப் பகுதிகளிலும் லாபம் சமப்படுத்தப்படுகிறது. தேசிய பொருளாதாரம் மூலதனம் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்குத் தாவிச் செல்லப் பரிபூரண விடுதலை அளித்திருக்கிறது. ஆனால் நிலத்தில் தனி உடமை, மூலதனத்தின் சுயேச்சையான ஓட்டத்தைத் தடைப்படுத்தி நில ஏகபோகத்துவத்தை உண்டாக்குகிறது. இப்படி நிலம் ஏகபோக உடமையாக இருப்பதானது, குறைந்த அளவு மூலதனத்தைக் கொண்டு செய்யப்படும் விவசாய

உற்பத்திகள் அதிகமான லாபவிகிதம் அளிப்பதால், லாப விகிதத்தைச் சமனப்படுத்தும் முறைக்குக் கட்டுப்படுவதில்லை. நிலச் சொந்தக்காரன், தன் ஏகபோக உரிமையால் விலையைச் சாதாரண அளவுக்கு அதிகமாக வைத்திருக்கலாம். இந்த ஏகபோக விலை 'நேரடி வாடகை'யாக, (தொழிலில் கிடைக்கும் நேரடி லாபத்தைப்போல்) கிடைக்கிறது. முதலாளித்வத்தால் 'மாறுபடும் குத்தகையை' ஒழித்துவிட முடியாது. ஆனால் இந்த நேரடி வாடகையை ஒழித்துவிட முடியும்.—உதாரணமாக நிலத்தை தேசிய மயமாக்குவதன் மூலம் நில உற்பத்திகளின் விலையைக் கட்டுப்படுத்தலாம். இதனால் விவசாயத்திலும் மூலதன சுயேச்சை கிடைக்கும். இதனாலேயே, முதலாளித்வ முற்போக்கு வாதிகள் நிலத்தைத் தேசவுடமையாக்கவேண்டும் என்று கோருகின்றனர். ஆனால் பெரும்பான்மையான முதலாளிகள் இதைக் கண்டு அஞ்சுகின்றனர். ஏனென்றால் இந்தக் கோரிக்கை பொதுவாக உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையுமே பொதுவுடமையாக்க வேண்டும் என்பதில் கொண்டுவிடும் என்ற இயற்கையான பயம் அவர்களுக்கு உண்டாகிறது.

நில வாடகையின் சரித்திரத்திலே, வாடகையை உழைப்பாய்க் கொடுக்கும்—(விவசாயி நிலச் சொந்தக்காரனின் நிலத்திலே பாடுபட்டு அமித உற்பத்தி செய்து கொடுத்தல்)—முறையிலிருந்து நில உற்பத்தியையோ அல்லது வேறு பொருளையோ வாடகையாக (விவசாயி தன் நிலத்தில் அமிதஉற்பத்தியை உண்டு பண்ணி அதை நிலச் சொந்தக்காரனுக்கு பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாகக் கொடுத்தல்) கொடுக்கும் முறையும் அதன் பிறகு பணத்தை வாடகையாகக் கொடுக்கும் முறையும், (பண்ட உற்பத்தியின் வளர்ச்சி காரணமாக வாடகையைப் பணமாகக் கொடுக்கும் முறைக்கு வந்தது) கடைசியாக முதலாளித்வ நில வாடகை முறையும் அமுலுக்கு வந்தன. முதலாளித்வ நிலவாடகை முறையிலே விவசாயிக்குப் பதிலாக விவசாயத்தை வியாபாரமாகச் செய்பவன் விவசாயக் கூலிகளைக் கொண்டு விவசாயம் செய்கிறான்.

"பொருளாக நிலவாடகை கொடுப்பதிலிருந்து பணமாகக் கொடுக்கும் முறைக்கு வந்த மாற்றம் சொத்தில்லாத தினக்கூலிக்காரர்கள் என்ற வர்க்கம் தோன்றியவுடனேயே எதிர்க்கப்படவேண்டியதாயிற்று. இந்த வர்க்கம் இங்கும் அங்குமாகத் தோன்றியவுடனேயே, கொஞ்சம் நல்ல நிலைமையிலுள்ள விவசாயிகள் தங்கள் நலனுக்காக இவர்களைச் சுரண்டுகிற வழக்கம் தானாக ஏற்பட்டது. (பண்ணை விவசாயத்திலும் பணக்காரர்களான

பண்ணை எஜமான்கள் இதர பண்ணைக்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் பழக்கம் இருந்தது.) இந்த விதமாக இந்த விவசாயிகள் கொஞ்சம் பணம் சேர்க்கவும் எதிர் காலத்தில் படிப் படியாக முதலாளிகளாக மாறவும்கூடத் திறம் பெற முடிந்தது. நிலச் சொந்தக்காரர்கள் வேலைக்கு வைத்துக்கொண்ட முறை முதலாளித்துவக் குத்தகைக்காரர்களைத் தோற்றுவித்தது. இவர் களுடைய வளர்ச்சி கிராமப் புறங்களுக்கு வெளியே முதலாளித் வம் பொதுப்படையாக வளர்ச்சி அடைந்ததிலிருந்து உண்டா யிற்று. விவசாயப் பொது மக்களின் ஒரு பகுதியினரை நில உடமை இழந்து கூலி விவசாயிகளாகப் போகச் செய்ததானது தொழில் மூலதனத்திற்குத் தொழிலாளர்களை அளித்ததோடு, அது ஓரளவு உள் நாட்டுச் சந்தையையும் (பண்டங்களை வாங்குவோரை யும்)உண்டாக்கிற்று. விவசாயப்பொதுமக்களின் அழிவு மூலதனத் திற்கு ஓர் உழைப்பாளிகள் பட்டாளத்தை உண்டுபண்ணிக்கொடுக் கிறது. ஒவ்வொரு முதலாளித்வ நாட்டிலும் ஒருபகுதி விவசாயப் பொதுமக்கள் உழைக்கின்ற பாட்டாளிகளாகும் நிலைமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இம் மாதிரி 'தொடர்புள்ள' அமித ஜனத் தொகை இடையறுமல் உண்டாகிக்கொண்டே இருக்கிறது. இத ஞல் விவசாயத் தொழிலாளி மிகக் குறைந்த கூலிக்கு உழைக்க வேண்டியவனுகி ஒட்டாண்டியாகும் நிலைமையிலேயே இருக் கிருன்.

நிலத்தில் விவசாயிக்கு இருக்கும் சொந்தம் சிறிய அளவு உற்பத்தியையும் அதன் வளர்ச்சியையும் கொடுத்து ஒரு வர்க்க அமைப்பை உண்டு பண்ணுகிறது. ஆனல் அந்தச் சிறிய அளவு உற்பத்தி ஒரு குறுகலான வளர்ச்சியடையாத சமுதாய அமைப் பில்தான் சாத்தியமாகிறது. முதலாளித்வத்தின் கீழ் விவசாயி களைச் சுரண்டுவதானது தொழிலாளிகளைச் சுரண்டுவதிலிருந்து சுரண்டல் அமைப்பில் தான் மாறுபடுகிறது. சுரண்டுவது ஒன்று தான்: மூலதனம்! தனிப்பட்ட முதலாளிகள் தனிப்பட்ட விவசாயி களை அடமானக்கடன்கள் மூலமாகவும் வட்டிக்கடன்கள் மூலமாக வும் சுரண்டுகிருர்கள். முதலாளித்வ வர்க்கம் விவசாயி வர்க்கத்தை வரிகள் (கந்தாயங்கள்) மூலமாகச் சுரண்டுகிறது. விவசாயி சிறிய அளவு நிலத்தை வைத்துக் கொண்டிருப்பது முதலாளிக்கு, நிலத்தி லிருந்து, லாபம், வட்டி, குத்தகை முதலியவற்றைப் பறிக்க ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. விவசாயிக்கோ நிலம் மட்டும் மிஞ்சுகிறது. அவன் தான் பாடுபடுவற்குக் கூலி கிடைக்குமா என்று அந்த நிலத்தைப் பார்த்துப் பெரு மூச்சுவிட வேண்டிய வனுக இருக்கிருன். எனவே விவசாயி முதலாளித்வ சமுதாயத் திலே அழிந்துவிட வேண்டியவனுகிருன். முதலாளித்வ உற்பத்தி

முறை உள்ள நாட்டில் இருப்பதைவிட சிறு விவசாயிகளை உடைய நாட்டில் தான்யங்களின் விலை குறைவாக இருப்பதன் காரணம் என்ன? விவசாயி முதலாளித்வ வர்க்கத்திற்குத் தன் அமித உற்பத்தியில் ஒரு பகுதியை எந்த விதமான பிரதி பயனும் பெருமல் இழந்து விடுகிருன். விவசாய உற்பத்தியின் விலைக் குறைவுக்கு உற்பத்தியாளர்களின் வறுமையும் காரணம். அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித்தரம் அல்ல. சிறிய அளவு நில உடமை முதலாளித்வத்தின் கீழ் அருகிக் குறைந்து அழிந்து போகிறது. சிறிய விவசாயிகளின் நிலத்தில், உழைப்பின் சமுதாய உற்பத்திச்சக்தியின் வளர்ச்சிக்கோ, உழைப்பின் சமுதாயத் தன்மைக்கோ, சமுதாய மூலதனத் தொகுதிக்கோ, பெரிய அளவு கால் நடை உற்பத்தி, விவசாயத்திற்கு விஞ்ஞான உதவி பெறுதல் முதலியவற்றிற்கோ இடமில்லை. வட்டியும் வரியும் அதை நாளுக்கு நாள் அரித்து விடுகின்றன. நிலத்தின் விலை மேல் மூலதனம் செலவழிக்கப் படுவதானது அதைப் பண்படுத்துவற்கு மூலதனம் செலவு செய்யப்பட விடுவதில்லை. உற்பத்திச் சாதனங்கள் சிதறுண்டு போவதிலும் உற்பத்தியாளர்கள் மூலைக்கு மூலை பிரிந்து போவதிலும் இது கொண்டு விடுகிறது. (கூட்டுறவுச் சங்கங்கள், சிறு விவசாயிகளின் சங்கங்ளாகக் கருதப் பட்டபோதிலும் இந்தப் பண்ணைத்தான் வளர்க்கின்றன. இவை நல்ல நிலைமையில் உள்ள விவசாயிகளுக்கே அதிகம் சேவை செய்கின்றன என்பதையும் மறந்து விடக் கூடாது. இவை ஏழை விவசாயிகளுக்கு ஒன்றும் செய்வதில்லை. அதோடு கூலி உழைப்பைத் தாமே சுரண்டவும் ஆரம்பித்து விடுகின்றன). மனித சக்தி பெரிய அளவு வீணுகிறது. உற்பத்தி நிலைமைகளைப் பெரிய அளவு குறைப்பதும், உற்பத்திச் சாதனங்களின் விலையை உயர்த்துவதும் சிறு விவசாயிகளின் சொத்துடமைக்கு இன்றியமையாதவையாகும். முதலாளித்துவம் தொழிற்சாலைகளில் போலவே விவசாயத்திலும் உற்பத்தியாளர்களைப் பலி கொடுத்துத்தான் உற்பத்தி முறையை மாற்றுகிறது. கிராமாந்திரத் தொழிலாளிகள் மூலைக்கு மூலை சிதறுண்டு போவதானது, அவர்களுடைய ஒற்றுமைச் சக்தியைக் குறைக்கிறது. அதே சமயத்தில் நகரப் பகுதிகளில் தொழிலாளர்கள் குவிந்து வருகின்றனர். நவீன விவசாயத்தில், வேலையில் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் அளவும், உழைப்பின் உற்பத்தித் தரமும், உழைப்புச் சக்தியையே விரயமாக்கி, நோய் கொடிக்காளாக்கி நாசப்படுத்தும் முறையில்தான் வாங்கப்படுகின்றன. தவிர, முதலாளித்துவ விவசாயத்தின் வளர்ச்சி எல்லாம், நிலத்தையும் விவசாயியையும் ஒரே அடிப்படையாகச் சுரண்டுவதில்தான் இருக்கிறது. முதலாளித்வ உற்பத்தி, விவசாய நுணுக்

கங்களைத்தான் வளர்க்கிறது. பல்விதமான உற்பத்தி முறைகளைச் சமுதாய அளவில் ஒன்றுபடுத்துகிறது. அதே சமயத்தில் செல்வத்தின் மூலாதாரங்களான உழைப்பையும், நிலத்தையும் சுரண்டி நாசப்படுத்துகிறது.

## 4. பொதுவுடமை

சமுதாயத்தின் பொருளாதார இயக்கமானது, முதலாளித்துவ சமுதாயம் சோஷலிஸ சமுதாயமாக மாற்ற மடைவதென்பது தடுக்க முடியாத நிகழ்ச்சியாவதை மார்க்ஸ் சுருக்கிக் காட்டுகிறார். உழைப்பு சமுதாயமயமாக்கப்படல் ஆயிரக்கணக்கான உருவங்களிலே வேகமாக முன்னேறி வருகிறது. மார்க்ஸின் மரணத்திற்குப் பிந்திய அரை நூற்றாண்டிலே, பெரிய அளவு உற்பத்தி முதலாளித்துவ சங்கங்கள், ஸிண்டிகேட்டுகள், ட்ரஸ்ட்கள் முதலியவற்றின் மூலமாக, பண மூலதனத்தின் அளவு இராட்சசப் பெருக்கம் அடைந்து சோஷலிஸத்திற்கு அஸ்திவாரமிட்டு வருகின்றது. இந்த மாற்றத்திற்குக் கொண்டுபோகிற அறிவாற்றலும், உடல் வல்லமையும் முதலாளித்வத்தாலேயே தயார்ப்படுத்தப்படுகிற தொழிலாளி வர்க்கத்திற்கே இருக்கிறது. முதலாளித்வத்தை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கம் நடத்துகிற போராட்டம் பல உருவங்களில், நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து, அரசியல் போராட்டமாக உருப்பெற்றுக் கடைசியாக 'அரசியல் சக்தியை' (பாட்டாளி சர்வாதிகாரம்) அடைவதற்கான போராட்டமாக மாறுகிறது.உற்பத்தி சமுதாய மயமாவது உற்பத்திச் சாதனங்கள் சமுதாய உடமையாவதன், அதுவரை பறிமுதல் செய்தவர்கள் (முதலாளிகள்) பறிமுதல் செய்யப்படுவதன் நிலைமைக்கு கொண்டு வந்து விடுகிறது. இந்த மாற்றம் ஏற்பட்டதும் உழைப்பின் உற்பத்திச் சக்தி பன் மடங்கு அதிகரிக்கும். வேலை நேரம் குறையும். இது சிறிய அளவு, திட்டமில்லாத, ஆரம்பகால உற்பத்தியின் மிச்ச சொச்சங்களை மாற்றி, கூட்டு முறையில் வளர்ச்சி அடைந்த உற்பத்தி முறையைக் கொண்டுவரும்.

முதலாளித்வம் கடைசியாக தொழிற்சாலைக்கும் விவசாயத்திற்கும் இருந்த ஒற்றுமையை உடைத்து விடுகிறது. ஆனால் அதே சமயத்தில் அதனுடைய உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தில் ஒரு புதிய ஒற்றுமையைக் காட்டுகிறது. விவசாயத்திலும் தொழிற்சாலையிலும் விஞ்ஞானத்தையும் கூட்டுழைப்பையும் கொண்டு வருகிறது. அதே சமயத்தில் பெரிய நகரங்களிலும் மக்கள் குவிந்து கிராமாந்தரங்கள் தனிமைப் படுத்தப்பட்டு கீழ் நிலையில் ஒதுக்கப் பட்டுக் கிடப்பதை மாற்றி ஜனத்தொகை விகிதத்தைப் பரவலாக்கு

கிறது. குடும்ப அமைப்பில் ஒரு புதிய விதம், பெண்களின் அந்தஸ்திலே புதுமை, குழந்தை வளர்ப்புக்கு புதிய ஏற்பாடுகள் முதலியவற்றையும் முதலாளித்வமே தன் வளர்ச்சியோடு கொண்டுவந்துவிடுகிறது. நவீனசமுதாயத்தில் குழந்தை,பெண்கள் உழைப்பும் தந்தை வழிக் குடும்ப உறவுகள் உடைவதும் பயங்கரமான, தீய விளைவுகளை உண்டாக்குகிறது. இருந்தபோதிலும் நவீன தொழிற்சாலைகள் உற்பத்தி முறையிலே ஒரு முக்கியமான பாகம் வகிப்பதால், குடும்பத்திற்கு வெளியே பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், ஆண் பெண் குழந்தைகளுக்கும், ஒரு நல்ல விதமான குடும்ப அமைப்புக்கும், ஆண் பெண் தொடர்புக்கும் அடிப்படையாகிற பொருளாதார அஸ்திவாரத்தை உண்டு பண்ணுகிறது. பழங்கால, கிரேக்க, ரோம, ட்யூடானிய, கிழக்கத்திய குடும்ப அமைப்புகள் சரித்திர வளர்ச்சியோடு அப்படியே நீடித்திருக்கும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அதே சமயத்தில் உற்பத்திக்காகவே உழைப்பாளி இருக்கிறன், உழைப்பாளிக்காக உற்பத்தி இல்லை என்கிற நியதி உள்ள அடிமைத்தனமும் ஒழுங்கீனமும் நிறைந்த முதலாளித்வ சமுதாய அமைப்பிலே, தனிப்பட்ட ஆண் பெண்கள், பல்வேறு பிராயத்தினர் சேர்ந்து உழைக்க வேண்டிய நிலைமையிலே மனிதத்துவ வளர்ச்சிக்கு அடிப்படையாகாதென்று சொல்லவும் முடியாது. தொழிற்சாலை முறையிலே எதிர்காலப் படிப்பின் கரு, ஒரு குறிப்பிட்ட அளவு வயதடைந்த குழந்தை ஒவ்வொன்றும் ஓரளவு படிப்போடு உழைப்புக்கும் தயாராக்கப்படுவதானது, உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடு, முழு வளர்ச்சி அடைந்த மனித ஜீவன்களை உண்டாக்கும் வழியும் அமைந்திருக்கிறது.

மார்க்ஸீய சோஷலிஸம் அரசாங்கம் பற்றிய பிரச்னையையும் தேசீய இனங்கள் பற்றிய பிரச்னையையும் ஒரே விதமான சரித்திர அடிப்படையில், அவற்றின் இறந்த காலத்தைப்பற்றி விளக்குவதோடு மாத்திரம் நில்லாமல் எதிர்காலத்தில் அவை என்ன துணிகரமான சாதனைகளை நிறைவேற்ற முடியும் என்பதையும் அதற்கான வழிகளையும் முன்வைக்கிறது. தேசீய இனங்கள் முதலாளித்துவ சகாப்தத்தின் சமுதாய வளர்ச்சியில் தடுக்க முடியாத விளைவுகள் தேசத்தோடு சேர்ந்தல்லாமல் தேசீயப் பற்றுடையதாக இல்லாமல் தொழிலாளி வர்க்கம்முழு வளர்ச்சியையும் அடைய முடியாது. (முதலாளித்வ அர்த்தத்தில் அல்ல). ஆனல் முதலாளித்வ வளர்ச்சி தேசியத் தடைகளை மேலும் மேலும் உடைத்துக்கொண்டே இருக்கிறது. தேசீயப் பிரிவினைகளை அழிக்கிறது. தேசீயப் பகைமைக்குப் பதிலாக வர்க்கப் பகைமையை வளர்க்கிறது. அதனல் முழு வளர்ச்சியடைந்த முதலாளித்வ நாடுகளிலே

தொழிலாளி தாயகமற்றவனாகி விடுகிறான். நாகரிகமடைந்திருக்கும் நாடுகளைப் பொறுத்த அளவிலாவது தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட இயக்கம்தான் அதன் விடுதலைக்கு உதவக் கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் என்பது, சமுதாய வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், சமுதாயம் சமாதானப்படுத்தபட முடியாத வர்க்கங்களாகப் பிளவு பட்டு, தனக்கு மேலாக ஓரளவு தன்னிடமிருந்து பிரிந்து நிற்கிற ஒரு சக்தி இல்லாமல் அதே நிலையில் நீடிக்க முடியாது என்ற நிலைமையில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஸ்தாபன சக்தி ஆகும். வர்க்க வேற்றுமைகளிலிருந்து தோன்றிய அரசாங்கம், சக்தி வாய்ந்த வர்க்கத்தின் பொருளாதார மேலாதிக்கம் பெற்று அதன் மூலமாக அரசியல் ஆட்சியையும் கைப்பற்றி, அதன் துணை யால் சுரண்டப்படும் அடக்கப்பட்ட வர்க்கத்தை மேலும் அடக்கி வைக்க விரும்பும் வர்க்கத்தின் ஸ்தாபனமாகி விடுகிறது. இப்படி யாக, பழங்கால அரசாங்கம் அடிமை எஜமானர்களுக்கு அடிமை களை அடக்கிவைக்க உதவும் அரசாங்கமாக இருந்தது. நிலப்பிரபுத்வ அரசாங்கம் பிரபுக்களுக்கு பண்ணைக்காரர்களை அடக்கிவைக்க உதவிற்று. இன்றைய பிரதிநிதித்வ அரசாங்கம் மூலதனத்திற்குக் கூலித் தொழிலாளாளிகளைச் சுரண்டுவதற்கு உதவி வருகிறது. முதலாளித்வ அரசாங்கத்தின் மிகவும் முற்போக்கான, சுயேச்சை யான அரசாங்கம், ஜனநாயகக் குடியரசுகூட இதிலிருந்து மாறு பட்டதாக இல்லை. அமைப்பளவில் தான் மாறுபட்டதாக இருக் கிறது. (அரசாங்கத்திற்கும் 'ஸ்டாக் எக்சேஞ்சு'க்கும் உள்ள தொடர்பு, ஒழுங்கீனம்—அதிகாரத்துவம், பத்திரிகை முதலியன.)

சோஷலிஸம் வர்க்கங்களை ஒழிப்பதன் வழியாக அரசாங்க ஒழிப்புக்கும் வழி கோலுகிறது. அரசாங்கம், சமுதாயம் முழுமைக் கும் பிரதிநிதித்துவம் வகிப்பதாக, சமுதாயத்தின் பெயரால் உற் பத்திச் சாதனங்கள் முழுமையையும் தன் கையில் எடுத்துக் கொள்கிற முதலாவது சுயேச்சையான நடத்தை தான் அதனு டைய இறுதியான சுயேச்சை நடத்தையும் ஆகும் என்று ஏங் செல்ஸ் எழுதுகிறார். சமுதாய உறவுகளிலே அரசாங்கத்தின் தலையீடு ஒவ்வொரு துறையிலும் வளர்ந்து கொண்டே வந்து கடைசியில் தானாகே மறைந்து விடுகிறது. ஆட்களைக் கொண்ட அரசாங்கத்திற்குப் பதிலாக உற்பத்தி நிர்வாகம், பொருள்களின் விநியோகம் இவற்றில் ஒழுங்கு முறை என்ற அமைப்பு ஏற்படு கிறது. அரசாங்கம் என்பது (இந்தக் கட்டத்தில்) ஒழிக்கப் படுவ தில்லை; தானாகவே மங்கி மறைகிறது. உற்பததியை உற்பத்தியாளர் களின் சுயேச்சையான பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில்

காட்டுகிற புதிய சமுதாயம் அரசாங்க யந்திரத்தைத் தூக்கிப் பழம் பொருள் வைக்கப்படுகிற கண்காட்சி சாலையிலே வைத்துவிடும்.

கடைசியாகச் சிறிய விவசாயிகளைப் பொறுத்த வரையில் சோஷலிஸம் (சமவுடமை) என்ன செய்யும் என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் சோஷலிஸம் (சமவுடமை) ஏற்படுகிற கால கட்டத்திலும் இந்த வர்க்கம் இருக்கத்தான் செய்யும். சோஷலிஸ அரசாங்கம் பெரும் நிலப் பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வது போல் சிறு விவசாயிகளின் நிலங்களையும் பறிமுதல் செய்யாது. அவர்களுடைய தனிப்பட்ட விவசாயத்தை ஆரம்பத்தில் கூட்டுறவு முறையில் செய்யத் தூண்ட வேண்டும். அதுவும் பலாத்காரமாக அல்ல. இப்படிப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகளுக்குப் பொது உதவிகள் அளிப்பதன் மூலமாக விவசாயிகள் கூட்டுறவில் சேர்வதை ஊக்குவிக்க வேண்டும். அதன் பிறகு விவசாயிக்கு சோஷலிஸ முறையிலே கிடைக்கும் ஏராளமான நலன்களை எடுத்துக் காட்டித் தாங்களாக அவர்கள் அம்முறையை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும்.





பிரிவு : 3

## பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் போர்த் தந்திரங்கள்

(Tactics of the Class Struggle of the Pruletariat)

புரட்சிகரமான நடவடிக்கைகளின் நிலைமைகளையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து பாராட்டாத 'பழய பொருள் முதல் வாதத்தின்' அரை குறைத் தன்மையையும் குறைபாடுகளையும் விளக்கியதும், மார்க்ஸ்தன் தத்துவ ஆராய்ச்சி வேலைகளோடு, தன் வாழ்நாள் முழுவதும் பர்ட்டாளி வர்க்கப்போராட்டத்தின் போர்த் தந்திரங்களை பற்றிய பிரச்னைகளில் கவனம் செலுத்தி வந்தார். இதைப்பற்றிய ஏராளமான விஷயங்கள் மார்க்ஸின் எல்லா நூல்களிலும் காணப்படினும் ஏஞ்செல்ஸோடு நடத்திய கடிதப் போக்கு

வரத்தில் நிறைய இருக்கின்றன. இது இன்னும் தொகுக்கப்பட்டு, படித்து விரிவாக்கப்படவில்லை. பொருள் முதல் வாதத்தில் இந்தப் பகுதி சேர்க்கப்படாதவரை அது அரை குறையானது, ஜீவனற்றது என்று மார்க்ஸ் கருதினர் என்று கூறுவதோடு, மார்க்ஸ் கூறியுள்ள மிக முக்கியமான, தெளிவான குறிப்புகளை மாத்திரம் இங்கு ஆராய்வோம்.

மார்க்ஸ், பாட்டாளி வர்க்கத்தின் போர்த் தந்திரங்களின் அடிப்படையை, தர்க்கவியல் பொருள் முதல் வாதத் தத்துவத்திற்குப் பொருந்தும்படியாக விளக்கினர். ஒரு சமுதாயத்தில் காணப்படுகிற எல்லா வர்க்கங்களின் உள்தொடர்புகளின் முழுமையையும், அந்தச் சமுதாயத்தின் யதார்த்தவளர்ச்சிநிலையையும், அதற்கும் மற்ற சமுதாயங்களுக்கும் உள்ள உறவுகளையும் நன்கு கவனிக்கிற பொழுதுதான் முன்னேறிய (பாட்டாளி) வர்க்கத்தின் போர்த்தந்திரங்களுக்குச் சரியான அடிப்படையை உணரமுடியும். அதே சமயத்தில் எல்லா நாடுகளும், எல்லா வர்க்கங்களும் அவை அப்படியே நிலையாக இருப்பவை என்ற அடிப்படையில் அல்லாமல், அவற்றின் (ஒவ்வொரு வர்க்கத்தின் பொருளாதார இயக்கத்தாலும் ஏற்படுகிற) இயங்கும் தன்மையையும் கணக்கிட்டே கணிக்கப்பட வேண்டும். இயக்கம் என்பது சென்ற காலத்தின் அடிப்படையிலிருந்து மாத்திரமல்லாமல் எதிர்காலத்தின் அடிப்படையிலும்—தானுக மாறி வளர்ந்துவரும் (*Evolutionists*) என்று கருதுகிறவர்களின் நோக்கத்தில் அல்லாமல், தர்க்கவியல் படி இருபது ஆண்டுகளின் வளர்ச்சியைக்கூட ஒரே நாளில் சாதித்து விடுகிற சரித்திர வளர்ச்சிகளின் முறையிலே—கவனிக்கப் படவேண்டும். மனித சரித்திரத்தில் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு கணத்திலும், விலக்க முடியாத தர்க்கவியல் தத்துவங்களை பாட்டாளி வர்க்கத்தின் போர்த் தந்திரத்தில் கணக்கிடப்பட்டிருக்க வேண்டும். ஒரு பக்கத்தில் அரசியல் தேக்கங்கள், 'அமைதியான' வளர்ச்சி—இந்தக் காலத்தை வர்க்க உணர்வை வளர்க்கவும், முன்னேறிய வர்க்கத்தின் பலத்தையும் போராற்றலையும் வளர்க்கப் பயன் படுத்திக் கொள்வதும், மறுபக்கத்தில் பாட்டாளி வர்க்கம் தன் இயக்கத்தின் இறுதி லட்சியத்தை நோக்கிப் பெரிய கடமைகளைச் செயலாக்கி நிறைவேற்றத் தகுதியைப் பெறச் செய்வதும் கவனிக்கப்பட வேண்டும்.

மார்க்ஸின் '**தத்துவத்தின் வறுமை**' (*Poverty of Philosophy*) என்ற நூலில் பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார போராட்டத்தையும் பொருளாதார ஸ்தாபனங்களையும் பற்றிய விஷயத்தை

யும், கம்யூனிஸ்ட் அறிக்கையில் காணப்படுகிற பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கடமைகள் பற்றிய விஷயத்தையும் இங்கு கவனிப்பது முக்கியம். முதலாவது கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

“பெரிய அளவு தொழிற்சாலை, முன்பின் அறியாத ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் சேர்க்கிறது. போட்டி மனப்பான்மை அவர்களுடைய நலன்களைப் பிரிக்கிறது. ஆனால் கூலியைப் பாதுகாத்துக்கொள்ளல் என்ற அவர்களுடைய முதலாளிக்கு எதிரான பொது நலன் தற்காத்துக் கொள்ளும் எண்ணத்தின் அடிப்படையில் அவர்களை ஒன்று சேர்க்கிறது. முதலில் தனித்தனியான சிறு கூட்டங்களாக இந்த ஒற்றுமை ஏற்படுகிறது. ஒன்றுபட்ட மூலதனத்தின் முன்னிலையில் தொழிலாளர்களுக்குத் தங்கள் சங்கத்தைப் பாதுகாப்பது, கூலியைப் பாதுகாத்துக் கொள்வதைவிட முக்கியமானதாகிறது. இந்தப் போராட்டத்தில், வருகிற போருக்குத் தேவையான எல்லாப் பகுதிகளும் வளர்ச்சி அடையப்பட்டு ஒன்று சேர்க்கப்படுகின்றன. இந்தக் குறிக்கோளை அடைந்ததும் சங்கம் அரசியல் பண்பை மேற்கொண்டு விடுகிறது.” இங்கே நமக்கு பொருளதாரப் போராட்டத்திற்கும், தொழிற்சங்க இயக்கத்திற்கும் ஆன, பல நூற்றுண்டுகளுக்கு உதவுகிற திட்டமும் போர்த் தந்திரமும் கிடைக்கின்றன. இந்தக் காலம் தொழிலாளி வர்க்கம் தன் வருங்காலப் போருக்குத் தயார்ப் படுத்திக் கொள்ளும் காலமாகும்.

இதே சமயத்தில், மார்க்ஸூம் எஞ்செல்ஸூம் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றி, தொழில் வளமானது எப்படித் தொழிலாளர்களை விலைக்கு வாங்கிவிடும் முயற்சியை உண்டு பண்ணுகிறதென்பதும்; அவர்களைப் போராட்டத்திலிருந்து விலக்கி, அவர்களின் வர்க்க உணர்வைக் கெடுத்து, முதலாளித்வமயமாக்கி, மற்ற நாடுகளைவிட அதிகம் வளர்ச்சி அடைந்துள்ள பிரிட்டிஷ் முதலாளித்வம் முதலாளித்வச் சீமான்களும் முதலாளித்வப் பாட்டாளிகளும் பக்கம்பக்கமாக முதலாளித்வக் கட்டுக்கோப்புக்குள் இருக்கும்படியாகச் செய்ய முயலப்படுகிறதென்பதும்; பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் குணம் எப்படி மங்கி வருகிறது, பிரிட்டிஷ் தொழிலாளர்கள் இந்த முதலாளித்வ சீர்குலைவிலிருந்து விழிப்படைய எப்படி நெடுங்காலம் செல்லவேண்டியிருக்கிறது, பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்கள் எப்படித் தொழிலாளிகளுக்கும் பிரிட்டிஷ் முற்போக்கு முதலாளிகளுக்கும் இடைத் தட்டு மனப்பான்மையை உடையவர்களாயிருக்கிறார்கள், பிரிட்டிஷ் ஏகபோகத்வம் நிலை நிற்கிற வரை பிரிட்டிஷ் தொழிலாளி ஏன் விழிப்படையமாட்டான் என்பவற்றையும் எழுதி

யுள்ள எண்ணற்ற குறிப்புகளைக் கவனிக்க வேண்டியதும் முக்கியம். தொழிலாளர் இயக்கத்தின் பொதுப் படையான போக்குக்கும் அதன் பொருளாதாரப் போராட்டத்தின் போர்த் தந்திரத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு இங்கே மிகவும் விரிவாக விளக்கமாக, தர்க்க வியல் அடிப்படையில், புரட்சிகரமான கண்ணோட்டத்தோடு கவனிக்கப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் அறிக்கை பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் போர்த் தந்திரங்கள் பற்றிய மார்க்ஸீய தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளை முன் வைக்கிறது. "கம்யூனிஸ்ட்கள் பாட்டாளி வர்க்கத்தின் அன்றாடக் கோரிக்கைகளை அடைவதற்கான போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால் நிகழ்காலபோராட்டத்தைக் கவனிக்கும் அதேசமயத்தில் அந்த இயக்கத்தின்எதிர்காலத்தையும் பிரதிபலிக்கிறார்கள்.இதற்கு உதாரணமாக மார்க்ஸ் தன் காலத்தில் நடந்த பலநாட்டு இயக்கங்களைப் பற்றிக் கையாண்ட கொள்கைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றியும் ஜெர்மனியில் சோஷலிஸ்ட் எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது சோஷல்- டெமாக்ரடிக் கட்சி பயந்து எந்த நடவடிக்கையும்எடுத்துக்கொள்ளாதிருந்ததைப் பற்றியும் எடுத்துக் காட்டுகிறார். பாட்டாளி வர்க்கத்தின் மார்க்ஸீய போர்த்தந்திரம் எந்த சமயத்திலும் முதலாளித்வ தாக்குதல்களுக்குப் பணிந்து கொடாமையும் அதே சமயத்தில் தன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து ஒரு புரட்சிக்கு வேண்டிய வளர்ச்சியும் சாதகமான சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கும் பொழுது அதை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதன் வழிகளையும் கூறுகிறது.





பிரிவு; 4

# இந்தியா பற்றி கார்ல்மார்க்ஸ்

## (Karl Marx on India)

கார்ல் மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி நியூயார்க் ட்ரிப்யூன் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதினார். அந்தக் கட்டுரைகள் ஒரு நூற்றாண்டுக்குப் பின்புகூட இந்திய சமுதாயத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவுவனவாக உள்ளன.

இந்தக் கட்டுரைகளிலே மார்க்ஸ், பிரிட்டிஷ் ஆட்சி வருவதன் முன் இந்திய சமுதாயம் எப்படியிருந்தது, பிரிட்டிஷ் வியாபாரிகளும் ஆளும் வர்க்கமும் அதில் என்னென்ன மாறுதல்களை ஊன்றியிருக்கின்றனர், அதன் விளைவு என்னவாகும் என்பதை தெளிவாக விளக்குகிறார். பிரிட்டிஷ் வியாபாரிகள் ஆளும் வர்க்கத்தைத் தங்களுக்குச் சாதகமாக எப்படி உபயோகித்துக் கொண்டார்கள் என்பதையும் ஈவிரக்கமற்ற

சுரண்டலால் இந்திய நாட்டை எப்படிக் கொள்ளையடித்தார்கள், வியாபாரத் துறையில் அவர்களுடைய தலையீடு இந்தியாவில் பொருளாதார கலாச்சார மாற்றங்களைக் கொண்டுவந்த தோடு அரசியல் துறையிலும் அவர்களை எப்படி ஈடுபடச் செய்தது, பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் இந்திய அரசியல் ஆதிபத்தியத்தைக் கைப்பற்றிக் கொண்டதானது இந்திய பிரிட்டிஷ் சமுதாய அமைப்புகளை எப்படி மாறுதலடையச் செய்தது என்பனவற்றையும் விளக்குகிறார். மார்க்ஸ், இந்தியாவின் நிலைமையை எவ்வளவு ஊன்றிக் கவனித்திருக்கிறார் என்பதைக் காட்டுவதற்காக அவருடைய கட்டுரைகளிலும் மூலதனம் என்ற நூலிலும் காணப்படும் கருத்துக்களில் முக்கியமான சில பகுதிகளைச் சுருக்கித் தருகிறோம்:

முதலாவது இந்திய சமூகத்தைப் பற்றி ஆராயும் மார்க்ஸ் மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவிலும் ஆரம்பப் பொதுவுடமைச் சமுதாயத்தின் அம்சங்கள் காணப்படுவதாகவும், ஆனல் இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சி மேற்கத்திய நாடுகளில் கொண்டு வந்து விட்டதுபோல் நிலப்பிரபுத்வ சமுதாய அமைப்புக்குக் கொண்டுவந்து விடாததன் காரணம், ஆசிய நாடுகளின் பூகோள சீதோஷ்ண நிலைமைகள்தான் என்று தாம் கருதுவதாகவும் கூறுகிறார்.

விவசாயத்திற்குச் சாதகமான நிலைமைகளுக்கும் நிலத்தில் தனியுடைமை ஏற்படுவதற்கும் பொருத்தமாக இருக்கவில்லை. ஆகவே ஆசிய பொருளாதாரம் தனிப்பட்ட இயற்கைப் பண்புகளோடு உருவாயிற்று. கீழே புராதன கம்யூனிஸ அமைப்பின் மிச்சமீதங்கள் காணப்படக்கூடிய கிராமங்களும், மேலே யுத்தம் செய்வதும் கொள்ளையடிப்பதும் நீர்ப்பாசன வசதிகளைக் கவனித்துக் கொள்வதுமான வேலைகளைக் கவனித்துக் கொள்ளும் யதேச்சாதிகார மத்திய அரசாங்கமும் ஏற்பட்டன.

ஆகவே இந்தியாவின் சமுதாய அமைப்பைப் புரிந்துகொள்ள கிராமத்தின் அமைப்பைப் புரிந்துகொள்வதுதான் முக்கியமானது. மார்க்ஸின் ‘மூலதனத்தில்’ கிராமிய அமைப்பின் இலக்கணத்தைப் பற்றிய மிக அருமையாக விளக்குகிறார்.

“இந்தக் கிராமங்கள் மிகவும் புராதனமானவை. இவற்றில் சில இன்று வரை கூட நீடித்து வந்திருக்கின்றன. நிலம் சமூகத்தின் பொதுச் சொத்தாக இருக்கிறது. விவசாயமும் கைத்தொழில்களும் ஒன்றுடனென்று இணைந்து விட்டிருக்கின்றன. வேலைப் பிரிவினைகள் மாற்ற முடியாத வகையில் (குலாசார தர்மப்படி)

ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன...உற்பத்தியாகும் பொருள்களில் ஒரு பகுதி வரியாக அரசாங்கத்தின் கைக்குச் செல்கிறது. இதர பெரும் பகுதி உற்பத்தி செய்யும் மக்களின் தேவைக்கே செல வழிந்து விடுகிறது. மிகச் சிறிய பகுதிதான் விற்பனைச் சந்தைக்கு வருகிறது.

இந்தச் சமூகங்களின் உள்ளமைப்பு பல இடங்களில் பல விதங்களில் காணப்படுகிறது. சாதாரண அமைப்புள்ள இடங் களில் விவசாயம் பொதுவாகச் செய்யப்படுகிறது. ஆடைக்குத் தேவையான நூலையும் தாங்களே நெய்து கொள்கிறார்கள். சட்டி பானை செய்து கொடுக்கக் குயவனும், இதர தொழில்களைச் செய்ய இருக்கும் நாவிதர், வண்ணார், தட்டார், தச்சர், நாட் சொல்லும் சோதிடர், உபாத்தியாயர், பிரார்த்தனை நடத்தும் அந்தணர் ஆகி யோர்கள் இருக்கின்றனர். இவர்கள் கிராம மக்களால் பொது வாகப் பராமரிக்கப்படுகின்றனர். கிராம நிர்வாகத்தில் சமூக நாட் டாண்மைக்காரர் போன்ற அதிகாரிகள் இருக்கின்றனர்.

தங்கள் தேவைகளைத்தானே பூர்த்தி செய்துகொள்ளும் இந்தச் சமூகங்கள் இதே விதத்தில் இடை விடாமல் பெருகிக் கொண்டே இருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தலையிடுவதன் முன் பெரிய அரசியல் நிகழ்ச்சிகள் நடை பெற்றிருந்த போதிலும், அன்னியப் படையெடுப்புகளும் ஆட்சிகளும் ஏற்பட்டிருந்த போ திலும், சமுதாயத்தின் மேல் மட்டத்தில் (அரசாங்கத்தளவில்) நடை பெற்றனவே தவிர, சமுதாயத்தைச் சென்று தொடவே இல்லை. அரசியல் வானில் ஏற்பட்ட மாற்றங்களால் சமுதாயத்தின் பொருளாதார அமைப்புகள் சிறிதும் பாதிக்கப்படவில்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி இந்திய சமூகத்தின் உள் அமைப்பையே உடைத் தெறிந்து விட்டது. பழைய அமைப்பைத் தகர்த்துவிட்டதோடு புதிய அமைப்பொன்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவுமில்லை! உள்ளதையும் இழந்துவிட்டுப் பிறிதொன்றையும் பெறமல் தவிக்கும் கொடிய நிலைமைக்கு இந்தியன் ஆளாக்கப் பட்டிருக் கிறன்'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.

அடுத்தபடியாக பிரிட்டிஷ் ஆட்சியால் இந்திய சமூகம் எப்படி அழிவுற்றதென்பதை மார்க்ஸ் விவரிக்கிறார். இந்தியாவில் பிரிட்டன் தொடர்பு கொண்டிருந்த காலத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் என்றும் ஆங்கில முதலாளித்துவ அரசாங்கம் நேரடியாகத் தலையிட்ட காலம் என்றும் இரண்டாகப் பிரித்துக் கொண்டு இந்த இரண்டு காலங்களிலும் இந்தியசமூகம் எத்தகைய மாறுதல்கள் அடைந்தது என்பதை விளக்குகிறார்.

கிழக்கிந்தியக் கம்பெனி (1702 முதல் 1813 வரை) இந்திய சமூகத்தை நேரடியாகக் கொள்ளையடித்து ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பவுன்களை இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தது. ஆனால் அதேசமயத்தில் பழைய சர்க்கார்கள் கவனித்து வந்த நீர்ப்பாசன மராமத்து வேலைகளை அறவே புறக்கணித்து விவசாயம் அழிந்துபோக விட்டது.

நிலத்திலே தனி உடைமையை, நிலத்தை விற்பதற்கும் வாங்குவதற்கும் உரிமையை உண்டாக்கிற்று. இங்கிலீஷ் நிலச் சட்டங்களும், குற்றச் சட்டங்களும் புகுத்தப் பட்டன. இந்திய உற்பத்திப் பொருள்கள் இங்கிலாந்து ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்பட முடியாமல் தடையோ, வரியோ விதிக்கப் பட்டன.

இங்கிலாந்தில் விக் கட்சியினர் மூலமாக முதலாளித்வம் பதவிக்கு வந்ததும், 1813-ல் தொழில் முதலாளிகள் படையெடுக்க ஆரம்பித்த பின்தான் அந்தச் சமூகத்தில் அதற்கு முன் காணாத கோரமான அழிவு ஏற்பட்டது. இதைப் புள்ளி விவரங்களோடு மார்க்ஸ் நிரூபிக்கிறார். 1780-லிருந்து 1850-வரை பிரிட்டிஷ் ஏற்று மதிகள் எப்படி அதிகரித்தன என்பதை, 1850-ல் பிரிட்டனின் மொத்த ஏற்றுமதியில் எட்டில் ஒரு பாகம் இந்தியாவுக்குப் போயிற்றென்பதையும், பிரிட்டிஷ் துணி ஏற்றுமதியில் நான்கில் ஒரு பாகம் இந்தியாவுக்கே அனுப்பப்பட்ட தென்பதையும் மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார். 1824-ல் 60 லட்சம் கஜம் பிரிட்டிஷ் மஸ்லின் இந்தியாவுக்குப் போயிற்றென்றால் 1837-ல் 640 லட்சம் கஜம் ஏற்றுமதியாயிற்றென்பதையும், அதேசமயம் இந்திய ஜவுளி உற்பத்தி நகரமான டாக்கா நகரத்தின் ஜனத்தொகை 150 ஆயி ரங்களிலிருந்து 20 ஆயிரங்களாகக் குறைந்தது என்பதையும் மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

இங்கிலாந்தின் யந்திர உற்பத்தியால் இந்தியாவுக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு இணையான துன்பத்தைச் சரித்திரத்திலேயே காண முடியாது! 'இந்திய ...வாளிகளின் எலும்புகள் இந்தியச் சமவெளிகளை வெண்மையாக்கிக் கொண்டிருக்கின்றன' என்று 1834–35-ல் கவர்னர் ஜெனரலின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

இந்தியாவில் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் இருந்த பிணைப்பு அறுந்தது. நூல் நூற்கும் ராட்டினம் அறவே மறையத் தொடங்கியது. வரிப்பளுவால் விவசாயமும் நலிந்தது. கிராம அமைப்பு முறையே வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. மக்கள் புதியதாகத் தோன்றிய நகரங்களில் சென்று கூட ஆரம்பித்தனர்.


இவ்வாறேற்பட்ட கொடிய நாசங்களை வர்ணித்துவிட்டு, இந்தியாவில் எற்பட்ட இந்தச் சமுதாய அழிவு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மறைமுகமாக எப்படி உதவிற்று என்பதையும், அன்னிய ஆதிபத்ய உருவில் வந்த பிரிட்டிஷ் முதலாளித்வம், சரித்திரத்தின் தூதனாக இந்திய சமுதாயத்தை வளர்ந்து முன்னேறச் செய்ய எப்படி உதவிற்று என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

குறுகிய எல்லைக்குள்ளடங்கி, சிந்தனைக்கும் செயலுக்கும் எல்லாவற்றிற்குமே தேக்கம்போட்டு, வளர்ச்சி அடையாத நிலையிலே சமுதாயத்தைக் கட்டிவைத்து, வெளி உலகிலும் அரசாங்கத்திலும் என்ன மாறுதல்கள் ஏற்படினும் அதைக் கவனிக்காமல், பகைவர்கள் தாக்கும்போது தற்காத்துக் கொள்ளும் திறனும் இல்லாமல், மூடத்தனமான மத நம்பிக்கைகளுக்கு இரையாகிக்கிடந்த பிற்போக்கான இந்திய சமுதாய அமைப்பு விழிப்படைந்து அறிவுத்துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் முன்னேற பிரிட்டிஷ் முதலாளித்வம் எப்படி உதவுவதாயிற்று என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

இந்த நாசகாரமான அழிவு வேலையை நடத்திக் கொண்டிருக்கும் போதே சில ஆக்கவேலைகளையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டிஷ் முதலாளித்வத்திற்கு ஏற்படத்தான் செய்கிறது. இந்தியாவில் அதன் முன் இல்லாத ஓர் உறுதியான அரசியல் ஒற்றுமை ஏற்படுகிறது. சுதேசி ராணுவம் ஏற்படுத்தப் பட்டது. முதன்முதலாகப் பத்திரிகைகள் தோன்றின. நிர்வாக விஞ்ஞான அறிவுள்ள ஒரு படிப்பாளி வர்க்கம் தோன்றிற்று. நிலத்தில் தனி உடமை ஏற்பட்டது. நீராவிக் கப்பல்கள் மூலம் ஒரு நிலையான வர்த்தகத்தொடர்பு ஏற்பட்டது. இவற்றோடு இந்திய மூலப்பொருள்களைச் சுலபமாகக் கடத்திச் செல்வதற்காக இந்தியாவில் ரயில் பாதை போடப்பட்டது. ரயில் பாதையால் ஏற்படும் விளைவைப்பற்றி மார்க்ஸ், "இரும்புக்கனிகளும் நிலக்கரியும் உள்ள ஒரு நாட்டின் போக்குவரத்திற்கு இயந்திரச் சாதனங்களை உபயோகப்படுத்துவதானது யந்திரத்தொழில் விஸ்தரிப்பதில் தான் கொண்டுவிடும்," என்று கூறினார்.

இவ்வாறாக பிரிட்டிஷ் முதலாளித்வம் சமுதாய வளர்ச்சிக்கான பௌதிகச் சூழ்நிலையை இந்தியாவில் உண்டாக்குகிறது. ஆனால் இந்திய மக்களின் முன்னேற்றத்தை அவர்களேதான் சாதித்துக் கொள்ள வேண்டும். இந்திய மக்களின் புரட்சியாலோ, இங்கிலாந்தின் அதிகாரத்தை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதாலோதான் அது சாத்தியமாகும் என்று மார்க்ஸ் கூறினார்.

# மூன்றும் பகுதி



## கம்யூனிஸ்ட் அறிக்கை

(Communist Manifesto)

மார்க்ஸிஸத்தின் திறவுகோல் என்று கருதப்படும் மிக முக்கியமான இந்த அறிக்கையை மார்க்ஸும், ஏஞ்செல்ஸும், கம்யூனிஸ்ட் லீகின் கட்டளைப்படி 1848-ம் ஆண்டு எழுதி முடித்தனர். கடந்த நூறுண்டுகளிலே இந்த அறிக்கையின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் மெய்ப்படுத்தப்பட்டிருக்கின்றன. சரித்திர வளர்ச்சியோடு சமுதாயத்தின் வளர்ச்சியும், அதன் மக்களிடையே ஏற்படும் வர்க்க மாற்றங்களும், கடைசியாகச்சமுதாயம் சோஷலிஸ கட்டத்தை அடைந்தே தீருா் என்பதையும் இந்த அறிக்கை விளக்குகிறது பாட்டாளி வர்க்கத்திற்கு எந்தக் காலத்திலும் இடையருத உயிர்ப்புணர்ச்சியையும் நம்பிக்கையையும் அளிக்கும் நூல் இதைவிட வேறில்லை என்று கூறலாம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதன் வாசகங்கள் எவ்வளவு முக்கியத்துவத்தோடு, உண்மையும் வேகமும் உடையனவாய் இருந்தனவோ, அதே அளவு முக்கியத்துவத்தோடும் உண்மையும் வேகமும் உடையதாயும் விளங்குகிறது இந்த அறிக்கை.

கம்யூனிஸ்ட் அறிக்கை நான்கு பகுதிகளாக எழுதப் பட்டிருக்கிறது. முதல் பகுதி வளர்ச்சி அடைந்துள்ள முதலாளித்துவ சமுதாயத்தின் இரண்டு பெரிய வர்க்கங் களாகிய முதலாளிததுவ (பூர்ஷுவா) வர்க்கத்துனுடைய வும், பாட்டாளி (புராலிடேரியன்) வர்க்கத்தினுடையவும் குணங்களை விளக்குகிறது. இதன் பகுதிகள் மிகவும் சுருக்கப்பட்டு இங்கு தரப்பட்டிருக்கின்றன. (முழு நூலை யும் விளக்கமாகப் படிக்க விரும்புவோர் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ள 'கம்யூனிஸ்ட் அறிக்கை' என்ற நூலைப் படிக்கவும்)

## 1. முதலாளித்துவ வர்க்கமும் (பூர்ஷுவாவும்) பாட்டாளி வர்க்கமும் (புராலிடேரியன்களும்)

*சமுதாயத்தின் சரித்திரம் ஆரம்பகாலம் முதல் இன்று வரை வர்க்கப் போராட்டங்களின் சரித்திரமாகவே இருந்திருக் கிறது.*

*வர்க்கங்களின் வளர்ச்சி இன்றைய முதலாளித்வ சமுதா யத்தில் முதலாளித்வ வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கத்தையும் தோற்றுவித்திருக்கிறது.*

*முதலாளித்வ வர்க்கத்தின் வளர்ச்சி மூலதனம் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு பெரும் தொழிற்சாலைகள் தங்குதடையின்றி மக்க ளைச் சுரண்டுவதற்கான வசதி கிடைப்பதால் ஏற்படுகிறது. முதலாளித்வம் தான் வளரும்போதே தன் வர்க்க விரோதியாகிய பாட்டாளி வர்க்கத்தைத் தானே தோற்றுவிக்கிறது. இது எப்படி ஏற்படுகிறது? முதலாளித்வம் கட்டுகிற தொழிற்சாலைகளிலே முன்பின் தெரியாத மூலைக்குமூலை நாட்டுப்புறங்களில் வசித்த மக்கள், ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றனர். முதலாளித்வ வளர்ச் சிக்கு இன்றியமையாத சரித்திர கட்டத்தில் விவசாயிகளும் சிறு கைத்தொழிலாளிகளும் அடங்கிய வர்க்கங்கள் அழிக்கப்படுவதால் தாங்கள் வாழ்வதற்குத் தங்கள் உழைப்பைத்தவிர வேறு எதுவும் இல்லாத நிலைமையிலே வந்து சேரும் தொழிலாளிகள் தான் இவர்கள்.*

*முதலாளித்வம் தன் வளர்ச்சியோடு அதற்கு முன்பிருந்த நிலப் பிரபுத்வ சமுதாயம் கட்டி அமைத்த சமுதாய உறவுகள், மனப்பான்மைகள், நாகரிகம் முதலிய அனைத்தையும் அடியோ*

டழித்து அவற்றிற்குப் பதிலாகப் புதிய உறவுகள், நாகரிக மனப் பான்மை முதலியவற்றை உண்டாக்குகிறது.

முதலாளித்வம் தன் வளர்ச்சியிலே பெரிய ஆலைகளின் மூலம் குறைந்த உற்பத்திச் செலவில் வாழ்க்கைக்கு வசதியளிக்கும் பொருளை உற்பத்தி செய்து மலிவான விலையில் கொடுப்பதானது அதை உலகம் எங்கணும் ஊடுருவிப் பாவிச் செல்ல உதவுகிறது. தான் உற்பத்தி செய்யும் சாதனங்களை எங்காவது கொண்டுபோய் விற்றாக வேண்டும் என்ற நிலைமை முதலாளித்வத்தை உலகம் எங்கிலும் 'மார்க்கெட்டை' (சந்தையை) தேடி ஓடச் செய்கிறது.

முதலாளித்வம் நவீன போக்குவரத்துச் சாதனங்களைக் கட்டி அமைப்பதானது உலகத்தின் மூலைக்கு மூலை உள்ள ஜனங்களோடு தொடர்பு கொண்டு அவர்களை நாகரிகமடையச் செய்கிறது; அதன் வளர்ச்சி மற்ற ஜன சமுதாயங்களும் முதலாளித்வ சமுதாயங்களாக மாறினால் அல்லாமல் வாழமுடியாது என்கிற நிலைமையை ஏற்படுத்துகிறது.

முதலாளித்வம் அடிக்கடி நவீனமான உற்பத்திக் கருவிகளைக் கண்டுபிடித்து நாளுக்கு நாள் நவ நவமான உற்பத்தி முறைகளைக் கொண்டு தருகிறது. நகரங்களை வெகு வேகமாக வளர்ச்சியடையச் செய்து கிராமங்களை நாசப் படுத்துகிறது.

முதலாளித்வம் பொருளுற்பத்தி சாதனங்களையும் உற்பத்தி உறவுகளையும் பெரிய அளவு வளர்த்து விடுகிறது. கடைசியில் அவை அதனுடைய கட்டுக்கும் மீறி வளர்ந்து விடுகிறபொழுது என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுகிறது.

உற்பத்திச் சாதனங்கள் ஏராளமாக உற்பத்தி செய்து விடுகின்றன. உற்பத்திப் பண்டங்களை எங்கு கொண்டுபோய்த் திணிப்பது என்று தெரியாமல் முதலாளித்வம் தவிக்கிறது. அமித உற்பத்தியால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் முதலாளித்வ சமுதாயத்தைத் திக்குமுக்காடச் செய்கின்றன. ஏனென்றால், அமித உற்பத்தி பண்டங்களின் விலையை மலிவடையச் செய்கிறது; முதலாளித்வத்திற்கு லாபம் கிடைக்கவொட்டாமல் செய்கிறது.

இதேசமயத்தில் வளர்ந்துவரும் பாட்டாளி வர்க்கம் முதலாளித்வத்தை நெருக்குகிறது. முதலில் போட்டியின் காரணமாகத் தனித்தனி நலன்களுடையதாய், ஒற்றுமையற்றதாய் முளைத்த இந்த வர்க்கம் இப்பொழுது முதலாளியை எதிர்த்துத் தங்கள்

நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்காகச் சங்கங்களில் திரண்டு, வர்க்க உணர்வும் போர்க்குணமும் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது.

தொழிலாளிவர்க்கம் முதலாளித்வ வர்க்கத்திற்கும், அதன் அரசாங்கத்திற்கும் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் முதலாளித்வ வர்க்கத்தால் அதிகமாகச் சுரண்டப்பட்டு அதிகமாக அடிமைப் படுத்தப்பட்டு வருகிறது. லாபத்தை லட்சியமாகக் கொண்ட முதலாளித்வ வர்க்கத்தின் கேவலமான சுரண்டலை எதிர்த்துத் தொழிலாளிவர்க்கம் போர்க் கொடியை உயர்த்துகிறது.

வர்க்கப் போராட்டம் அரசியல் பண்பை அடைகிறபொழுது அது தேசியத்தன்மை பெறுகிறது.

முதலாளித்வ வர்க்கம் நாளுக்கு நாள் பலஹீனமடைகிறது. அதற்குள் நடைபெறும் உட்போட்டியால் தாக்குப்பிடிக்க முடியாத ஒரு பகுதி அதனிடமிருந்து பிரிகிறது. முதலாளித்வ வர்க்கத்தின் வளர்ச்சியால் நாளுக்கு நாள் அழித்துக் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் மத்தியதரவர்க்கம் அதை எதிர்க்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறது. ஆனால் இவற்றில் எதுவுமே புரட்சிகரமான வர்க்கம் அல்ல. இவர்கள் தங்கள் வர்க்க அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே முதலாளித்வத்தை எதிர்க்க வேண்டியவர்களாகிறார்கள்.

இந்நிலையில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் கிடக்கும் தொழிலாளி வர்க்கம் தங்களுடைய உழைப்பைச் சுரண்டிச் சொத்தாக மாற்றி, மேலும் மேலும் உயர்ந்து கொண்டிருக்கும் வர்க்கத்தை வீழ்த்துவதால் அல்லாமல், தங்களுக் கென்று பாதுகாக்க எவ்விதமான சொத்தும் இல்லாத அந்த வர்க்கம் சொத்துடைமைக்கு இருக்கும் சகல பாதுகாப்புகளையும் அழித்துத் தகர்த்தெறிந்து விட்டு அதை நாட்டின் உடைமையாக ஆக்காமல் தான் முதலாவது வர்க்கமாக ஆக முடியாது என்ற நிலைமைக்கு வருகிறது.

முதலாளித்வ வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திற்குக் குறைந்த பட்ச வாழும் உரிமையைக்கூட அளிக்கவில்லை. அதனால் தான் வாழ்வதற்காகவே அவ்வர்க்கத்தை அழித்துப் புதிய சரியான நிலைமைகளை ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் அதற்குண்டாகிறது.

இதற்குமுன் சரித்திரத்தில் நடந்த இயக்கங்கள் எல்லாம் சிறு பான்மையினருக்காக, நிலப்பிரபுக்களுக்காக, முதலாளிகளுக்காக நடந்த இயக்கங்களாக இருந்தன. பாட்டாளி வர்க்கத்தின் இந்த இயக்கமோ சமுதாயத்தின் மிகப் பெரும்பான்மையினருக்காக நடக்கும் இயக்கமாக இருக்கிறது.

முதலாளித்வ வர்க்கம் மேற்கொண்டு நீடித்து நிற்கமுடியாத நிலைமையை அடைகிறது. அது உயிர் வாழவேண்டுமானால் மூல தனம் உருவாகிக் கொண்டே இருக்கவேண்டும். அதற்கும் கூலி உழைப்பு தங்குதடையின்றிக் கிடைக்கவேண்டும். அதற்குத் தொழிலாளர்களுக்கிடையே போட்டி இருக்க வேண்டும். ஆனால் தொழிலாளி வர்க்கம் முதலாளித்வ வர்க்கத்தின் வளர்ச்சியா லேயே தடுக்கமுடியாதபடி ஒன்று சேர்க்கப்பட்டுப் புரட்சிகரமான வளர்ச்சி அடைகிறார்கள். அதனால் அவர்களுக்கிடையே போட்டி மறைந்து விடுகிறது. அதனால் மேற்கொண்டு முதலாளித்வம் வாழமுடியாத நிலைமைக்கு வந்து விடுகிறது.

முதலாளித்வம் தன் வளர்ச்சியால் தனக்குக் குழிபறிப் பவர் களையே வளரச் செய்கிறது. எனவே அதன் வீழ்ச்சி தடுக்க முடியாதது. தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி தடுக்கப்படவே முடியாதது.

## 2. பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுகளும்

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க முக்கியத்துவததையும் சமுதா யத்தில் அதன் நிலைமையையும், அதன் வளர்ச்சிக் கட்டங்களையும் விஞ்ஞான பூர்வமாக உணர்ந்து, அதன் போராட்டங்களில் மிகவும் முன்னேறிய பகுதியினராக அதனுடன் இரண்டறக் கலந்து நிற்பவர்கள் தாம் கம்யூனிஸ்ட்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைத் தவிரக் கம்யூனிஸ்ட் களுக்கு வேறுவித வர்க்க நலன்கள் எவையும் கிடையா. ஆயினும் தொழிலாளி வர்க்கத்தின் மற்ற கட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட்களுக் கும் இரண்டு முக்கியமான வேறுபாடுகள் உண்டு. அவை, (1) கம்யூனிஸ்டுகள் பற்பல நாடுகளில் தொழிலாளர்கள் தேசியப் போராட்டங்களை நடத்துகிற போதிலும் உலகத் தொழிலாளி வர்க்கம் முழுமைக்கும், (ஒரு வர்க்கம் என்கிற ரீதியில்) பொது வாக உள்ள நலன்களைச் சுட்டிக் காட்டி அவற்றை முன்னணிக்குச் கொண்டு வருகின்றனர். (2) முதலாளித்துவத்தை எதிர்த்து நடக்கிற போராட்டங்களின் ஒவ்வொரு கட்டங்களிலும் வர்க்க

இயக்கம் முழுமைக்கும் பொருந்துகிற நலன்களைப் பிரதிபலிக்கின்றனர்.

சிதறிக்கிடக்கும் தொழிலாளர்களை ஒன்று சேர்ப்பதும், வர்க்க ரீதியில் ஒரு பேரணியில் திரளச் செய்வதும், முதலாளித்துவ வர்க்கத்தைத் தூக்கி எறிய அதைத் தயார்ப்படுத்துவதும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி முன்னேற வழி கோலுவதும் கம்யூனிஸ்ட்களின் கடமையாகும்.

இவை கம்யூனிஸ்ட்களின் கற்பனை தத்துவங்கள் அல்ல. சரித்திரத்தின் வளர்ச்சியே ஆகும். அதை உணர்ந்துகொண்டு அவ்வளர்ச்சிக்கு உதவுபவர்களே கம்யூனிஸ்டுகள்.

சொத்துக்களை அழிப்பவர்களா கம்யூனிஸ்டுகள்? அல்ல! முதலாளித்வத் தனியுடமையை உடைத்துத் தகர்க்க வேண்டும் என்பவர்களே கம்யூனிஸ்டுகள்!

ஏன்?

முதலாளித்துவ தனியுடமை, சமுதாயம் முழுவதையுமே சுரண்டி, மக்கள் அனைவரையும் பறிமுதல் செய்தே வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. அதைப் பறிமுதல் செய்வதும், மக்கள் அனைவருக்கும் அதைப் பொதுவுடமையாக்கி வாழ வழி செய்து கொடுப்பதும் நியாயம் மாத்திரம் அல்ல; கடமையும் கூட. 'தனி உடமை ஒழிப்பு' என்பதுதான் கம்யூனிஸ்ட்களின் தத்துவம்.

தனி உடமை என்பதால் எதைக் குறிக்கிறோம்?

சிறு கைத்தொழிலாளிகளின், விவசாயிகளின் சொத்துக்களை அல்ல! அவற்றை முதலாளித்துவம்தான் அழித்துக் கொண்டு வருகிறது. அவற்றைக் கம்யூனிஸ்டுகள் அழிக்க விரும்பவில்லை.

நவீன முதலாளித்வத்தின் தனி உடமையைச் சொந்த முயற்சியால் பாடுபட்டுச் சம்பாதித்தது என்று சொல்ல முடியாது. ஏனென்றால் கூலி உழைப்பால் தொழிலாளிகள் எந்த விதமான சொத்தையும் சேர்த்துக் கொள்ள முடியவில்லை, அது மூல தனத்தைத்தான் திரட்டி முதலாளியின் கையிலே கொடுக்கிறது. அந்த மூலதனம் தானே இயங்கிப் பொருளுற்பத்தி செய்யக் கூடியதல்ல. சமூகம் முழுவதுமே சேர்ந்துதான் அதை இயக்கிப் பொருளுற்பத்தி செய்ய முடியும். அப்படி இருக்கையில் மூல தனத்தை ஒரு தனி மனிதனின் சக்தியால் உண்டாக்கியது என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? அது ஒரு சமூகத்தின் சொத்து. ஏனென்றால் அது சமூக சக்தியால் உண்டாக்கப்பட்டது. அதைச்

சமூகத்திற்குச் சொந்தமாக்குவது என்றால் அழித்து விடுவது என்று அர்த்த மல்ல. அது குறிப்பிட்ட சிலர் கைகளில் அகப்பட்டு வர்க்கத் தன்மை பெறுவதை மட்டுமே ஒழிப்பது ஆகும்.

கூலி உழைப்புக்குப் பிரதி பயனாகத் தொழிலாளி வர்க்கத்திற்குக் கிடைப்பது என்ன? உயிரோடு வாழ எந்த அளவு தேவைப் பொருள்கள் வேண்டுமோ அந்த அளவு தேவைப் பொருள்களின் விலைதான். தன் உழைப்பின் மூலம் உண்டாக்குகிற செல்வத்தில் உடலோடு உயிரை வைத்துக்கொண்டிருக்கப் போதுமான அளவு பங்கையே அவன் பெறுகிறான். மற்றபடி மூலதனத்தைப் பெருக்குவதற்காகத்தான் அவன் உயிரோடிருக்கிறான். அதுவும் மூலதனத்திற்குத் தேவைப்படுகிற வரைதான் அவன் வாழவிடப் படுகிறான். இந்தக் கேவலத் தன்மையை ஒழித்து, உயிருள்ள உழைப்பு மூலதனத்தைப் பெருக்குவதற்காக உபயோகப் படுத்தப் படாமல், மூலதனம் உயிருள்ள உழைப்பின் வாழ்வை வளமாக்கவும் செழுமைப் படுத்தவும் உபயோகப் படுத்தப் படவேண்டும்.

முதலாளித்வ சமுதாயத்தில் மூலதனம் எல்லா சுதந்திரங்களும் உடையதாக இருக்கையில் பல்லாயிரக்கணக்கான தனி மனிதர்கள் எந்த விதமான உரிமையும் இல்லாத அடிமைகளாய் இருக்கிறார்கள். முதலாளித்வத்தின் தனி உடமையை, தனி சுதந்திரத்தை ஒழிப்பதைத்தான் 'தனி நபர் சுதந்திரத்தை' ஒழித்து விடுவதாக முதலாளித்வம் கூச்சல் போடுகிறது. ஆம் அதை ஒழித்தே ஆக வேண்டும்!

சமூகத்தில் உழைப்பினால் கிடைக்கிற பலன்களை எடுத்துக் கொள்வதை எந்தத் தனி மனிதனிடமிருந்தும் பறித்துவிடக் கம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை. மற்றவர்களின் உழைப்பைப் பறித்துக் கொள்ளச் சிலரிடம் இருக்கும் சக்தியைப் பறித்து விடுவதே கம்யூனிஸ்டுகளின் நோக்கம்.

இந்த முதலாளித்வ சமுதாய அமைப்பை அடிப்படையாகக் கொண்டு உண்டாகியிருக்கிற சுதந்திரம், கலை, சட்டம் முதலிய எல்லாவற்றிற்கும் மாறாக மக்கள் எல்லோர் வாழ்வையும் தழுவுகிற புதிய சுதந்திரம், கலை, சட்டம் முதலியவற்றை உண்டாக்குவதே கம்யூனிஸ்ட்களின் நோக்கம்.

கம்யூனிஸ்ட்கள் குடும்ப அமைப்பை ஒழித்து விடுவார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் ஏற்கெனவே முதலாளித்வம் சமுதாயத்தின் பெரும் பகுதிக்குக் குடும்பம் என்பதே இல்லாமல் போகும்படிச் செய்து விட்டது. முதலாளித்வக் குடும்ப உறவமைப்பு கம்யூனிஸத்தின் கீழ் அழிந்து போகலாம். ஆனால் அதை

விட வளமையான, இன்பம் நிறைந்த குடும்ப அமைப்புக்கு அடிப்படையான சிறந்த பொருளாதார அமைப்பைக் கம்யூனிஸ்ட் அளிக்கிறது.

பெற்றோர்கள் குழந்தைகளைச் சுரண்டுவதைக் கம்யூனிஸ்ட் தடுக்கிறது. குழந்தைகளுக்கு முதலாளித்வத்தின் சொறுகுகண்ணிகளாகும் அடிமைக் கல்விக்குப் பதிலாக சமூகக் கல்வி முறையைத் தருகிறது.

கம்யூனிஸ்டுகள் பெண்களைப் பொது உடமையாக்கி விடுவார்கள் என்று கூச்சல் போடுகிறது. முதலாளித்வம் பெண்களை ஆடுமாடுகளைப் போல் ஆண்களின் சொத்தாக இருக்கும் நிலைமையில் வைத்திருக்கிறது. பெரிய அளவு விபச்சாரத்தையும் வளரவிட்டுச் சமுதாயம் முழுவதுமே அழுகி நாசமாகப் போகச் செய்துகொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் இன்றைய பொருளுற்பத்தி முறையே காரணம். இது ஒழியும் போது பெண்கள் சொத்தாகக் கருதப்படும் நிலைமையும், விபச்சாரமும் ஒழிந்து போகும். அவர்கள் மனிதப் பிராணிகளாக, ஆணோடு சரி சமான வாழ்வு பெறுவார்கள். பெண்களைச் சொத்தாகக் கருதுவது என்ற பேச்சுக்கே இடமில்லாதபோது அவர்களை உடமையாகக் கருதும் மனப்பான்மையும் ஒழிந்தே போகும்.


கம்யூனிஸ்ட்கள் தேசங்களையும் தேசிய இனங்களையும் அழித்து விடுவார்கள் என்று கூறப்படுகிறது.

தொழிலாளிகளுக் கென்று எந்த தேசமும் கிடையாது. அவர்களுடைய தேசிய மனப்பான்மைகளை ஆரம்பத்திலேயே முதலாளித்வம் அழித்து விட்டது. முதலாளித்வத்தின் வளர்ச்சியில் பொருளுற்பத்தி முறைகள் ஒரே மாதிரி ஆவதானது மக்களின் வாழ்க்கை நிலைமைகளை ஒரே மாதிரி ஆக்குவதால் தேசிய வேறுபாடுகள் மறைந்து போகச் செய்து விட்டது. தொழிலாளி மக்கள் அரசியல் ஆதிக்கம் பெறும் போது கொஞ்சநஞ்சம் இருக்கும் வித்தியாசமும் அடியோடு மறைந்து போகும்! மனிதனை மனிதன் சுரண்டுகிற பழக்கம் மறையும் போது நாட்டை நாடு சுரண்டும் பழக்கமும் மறைந்து போகும்! குறைந்த பட்சம் நாகரிக நாடுகளின் பாட்டாளிகள் ஒன்று சேர்வதானது அவர்களுடைய விடுதலையைத் துரிதப் படுத்தும்.

மதத்தை அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸத்தை எதிர்ப்பவர்கள் உளர். ஆனல் உற்பத்தி முறையில் ஏற்படும் மாறுதல் மனித சிந்தனையை எவ்வளவு வேகத்தில் மாற்றி வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். மதம் ஒவ்வொரு காலத்திலும் திருத்தி அமைக்கப் பட்டுக் கொண்டே வந்திருக்கிற தென்பதையும் கவனிக்க வேண்டும். அதிலும் கடந்த காலங்களில் சமுதாயம்

வெவ்வேறு வளர்ச்சியை அடைந்து வந்திருப்பினும் சுரண்டு பவனும் உள்ள சமுதாயமாகவே இருந்திருக்கிற தென்பதையும் அதனுல் மத உணர்வு, ஒழுக்க நெறிகள் முதலியவை சுரண்டல் அமைப்புக்கு ஆதரவானவையாகவே இருந்து வந்திருக்கின்றன என்பதும் மறுக்கப் பட முடியாதவை.

வர்க்க முரண்பாடுகளை மறைந்து போகச் செய்யும் புரட்சி யானது எண்ணங்களிலும் புரட்சிகரமான மாறுதல்களை உண் டாக்கியே தீரும்.




அடுத்த படியாக ஆட்சி புரிகிற வர்க்கமாக மாறியதும் பாட் டாளி வர்க்கம் என்ன செய்யும் என்று கவனிப்போம். வெற்றி பெறும் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் நாட்டுக்கு நாடு வேறு படுமாயின் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் கீழ்க்கண்ட படி யாக இருக்கும்.

1. நிலத்தைப் பொதுவுடமையாக்கி, நில வருமானத்தைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தல்.
2. வருமானம் அதிகரிக்க வரியும் அதிகரிக்கும் முறையில் வரிவிதித்தல்.
3. வாரிசு பாத்யதைகளை ஒழித்தல்.
4. புதிய அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள், நாட்டைவிட்டு ஓடுபவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்.
5. தேசிய பாங்கை ஏற்படுத்திப் பண வரவு செலவுகளை அரசாங்கத்தின் கைக்குக் கொண்டுவருதல்.
6. போக்குவரத்துச் செய்திச் சாதனங்களை அரசாங்க உடமையாக்கல்.
7. அரசாங்கத் தொழிற்சாலைகளை வளர்த்தல், திட்டப்படி பொது நலத்தை வளமாக்கல்.
8. உழைப்பை மக்கள் எல்லோருக்கும் கடமையாக்குதல்; விவசாயத்துக்கு இயந்திர வசதி அளித்தல்.
9. விவசாயத்தையும் இயந்திரத் தொழிலையும் இணைத்து, நகரத்துக்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஒழித்து மக்கள் பரவலாக வாழும்படி செய்தல்.
10. பொதுப் பள்ளிக்கூடங்களில் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கல்வி கற்பிப்பதும், குழந்தை வேலையைத் தடை செய்வதும், இயந்திரப் பொருளுற்பத்தியுடன் கல்வியை இணைப்பதும் ஆகும்.

இந்த அடிப்படையில், வர்க்க முரண்பாடுகள் பரிபூரணமாக மறைந்து, ஒரு பொதுவான ஜனசங்கமாக நாடு வளர்ச்சியடையச் செய்வதுதான் கம்யூனிஸத்தின் லட்சியமாகும்.

# 3. சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் இலக்கியம்



## 1. பிற்போக்கு சோஷலிஸம்

### (i) நிலப் பிரபுத்வ சோஷலிஸம்

முதலாளித்வத்தால் வீழ்த்தப்பட்ட நிலப் பிரபுக்கள் வேறு எவ்வகையிலும் தங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டிக் கொள்ள முடியாமல் சில சமயங்களில் சோஷலிஸம் பேசக் கிளம்பிவிடுகிருர்கள். அடிப்படையில் இவர்கள் கருத்தென்னவென்று பார்த்தால் முதலாளித்வம் புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தை உண்டாக்குவதைக் கண்டிப்பதும் அது தொழிலாளி

வர்க்கத்தை மேலும் மேலும் அடக்கி வைக்க உதவுவதுந்தான். மத சோஷலிஸமும் நிலப் பிரபுத்வ சோஷலிஸத்தைப் போன்றதே!

### (ii) மத்தியதர வர்க்கத்தின் சோஷலிஸம்

முதலாளித்வ வர்க்கத்தின் தோற்றத்தில் நாகரிகம் அடைந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் ஒரு ஊசலாடும் வர்க்கம் தோன்றுகிறது. இது நாளுக்கு நாள் தொழிலாளி வர்க்கத்தை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டே இருப்பதால் தன் நிலையைக் காத்துக் கொள்ளப் போராடிக் கொண்டே இருக்கிறது. இந்த வர்க்கத்திலிருந்து வந்த சோஷலிஸ்ட்டுகள் சில அடிப்படை உண்மைகளை உள்ளவாறு உணர்ந்த போதிலும் இவர்களுடைய இறுதிலட்சியம்பழைய பொருளுற்பத்தி சாதனங்களை நிலைநாட்டுவதும், தந்தைவழி விவசாயம் போன்ற முறையில் ஒரு கூட்டத்தார் விவசாயம் செய்து தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வது என்பது போன்ற முறைகளைக் கையாளுவதுமாக இருப்பதால் வளர்ச்சிக்கு ஒவ்வாததாகவும் பிற்போக்கானதாகவும் இருக்கிறது.

### (iii) ஜெர்மானிய (ஒரிஜினல்) சோஷலிஸம்

பிரெஞ்சு சோஷலிஸ இலக்கியத்தை, பிரெஞ்சு சரித்திர வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பார்க்காமல் அதை அப்படியே தங்களுக்கேற்பத் திரித்துக் கொண்டார்கள், ஜெர்மானிய மத்தியதர வர்க்கத்தினர். இவர்களுடைய சோஷலிஸம் நடைமுறையில் பூர்ஷுவா வர்க்கத்தைப் பயப்படுத்தவும் புராலிட்டேரியட் வர்க்கம் வளர்ச்சியடையாமல் செய்யவும் பயன்படுத்தப்பட்டது. சரியான வர்க்க போதத்தைக் கவனியாமலும் மத்தியதர வர்க்க மனிதனையே அடிப்படையாகக் கொண்டும், கூறப்பட்ட இந்த சோஷலிஸம் அடிப்படைக் கம்யூனிஸ தத்துவங்களைப் பழிக்கிற அளவு சென்றுவிட்டதில் அதிசயம் இல்லை.

## 2. முதலாளித்வ சோஷலிஸம்

முதலாளி வர்க்கத்தில் மனிதாபிமானிகளும் பரோபகாரிகளும், இன்னும் இவர்களைப் போன்றவர்களும் ஒரு வகைச் சோஷலிஸம் பேசுகின்றனர். அதாவது வர்க்க சிந்தனையுள்ள பாட்டாளி வர்க்கமே இல்லாமல் முதலாளி வர்க்கம் இருக்க வேண்டும் என்பதும், பாட்டாளிகள் பரலோக சிந்தனை மட்டுமே கொண்டு இகலோகத்தில் முதலாளி வர்க்கத்துக்கு அடங்கி

ஒடுங்கி இருக்க வேண்டும் என்பதும் இவர்கள் சித்தாந்தம். இன்ஞெரு வகையினர் பொருளுற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் கையிலேயே இருக்க அரசாங்கச் செலவுகளைச் சுருக்கி, சீர்திருத்தங்கள் செய்து பாட்டாளி வர்க்கத்தைச் சமாதானப்படுத்த வேண்டும் என்பது. பாட்டாளி வர்க்கத்தின் நன்மைக்காக என்று சொல்லிக் கொண்டு முதலாளித்வ வர்க்கத்தைக் கட்டிக் காப்பதுதான் இவர்கள் நோக்கம். நடைமுறையில் இவர்கள் முதலாளித்வத் திட்டங்கள் ஒவ்வொன்றையும் ஆதரிப்பது கண்கூடு!

## 3. விமர்சன—கற்பஞ சோஷலிஸமும் பொதுவுடமையும்

தொழிலாளி வர்க்கம் குழந்தைப் பருவத்தில் இருந்த காலத்தில் சரித்திர வளர்ச்சியில் அது எவ்வாறு தோன்றியது, எவ்வாறு வளர்ச்சியடையும் என்பவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், வர்க்கப் போராட்டம் முதலிய சரித்திர பூர்வமான அம்சங்களைப் பாராமல் சில கற்பஞ வாதிகளின் திட்டப்படி சமுதாயம் வளர்ச்சியடைந்து வரும் என்று கருதியவர்களே கற்பஞ சோஷலிஸ்ட்கள். நடைமுறையில் இவர்கள் வர்க்கப் போராட்டத்தை எதிர்ப்பவர்களாகவும், பணமூட்டைகளின் ஆதரவால் பூலோகத்தை சொர்க்கமாக்கி விடமுடியும் என்று நம்புபவர்களாகவும் இருக்கிருர்கள்.

## 4. இன்றுள்ள பல எதிர்க் கட்சிகளிடம் கம்யூனிஸ்டுகள் நடந்துகொள்ளும் முறை

கம்யூனிஸ்ட்கள் ஒவ்வொரு நாட்டிலும் இன்றைக்கிருக்கும் சமூக—பொருளாதார ஏற்பாடுகளுக்கெதிராக நடக்கும் புரட்சிகரமான இயக்கங்கள் எல்லாவற்றையும் ஆதரிப்பார்கள்.

அந்த இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் சொத்துடமை பிரச்னையை, அந்தச் சமயத்தில் அதன் வளர்ச்சி எந்த நிலைமையில் இருந்த போதிலும், முதலாவது பிரச்சினையாக முன்னணிக்குக் கொண்டுவருவார்கள்.

கடைசியாக அவர்கள் எல்லா நாடுகளிலும் உள்ள ஜன நாயகக் கட்சிகளுக்கிடையே ஒரு வகை ஒற்றுமையை உண்டாக்கப் பாடுபடுகிருர்கள்.

கம்யூனிஸ்டுகள் தங்கள் நோக்கங்களையும், லட்சியங்களையும் மறைத்து வைக்க விரும்பவில்லை. அவர்கள் இன்றைய சமுதாய நிலைமைகளைப் பலாத்காரமாகத் தூக்கி எறியாமல் தங்கள் லட்சியங்களைச் சாதிக்க முடியாதென்று பகிரங்கமாகக் கூறுகிறார்கள். பொதுவுடமைப் புரட்சியைப்பற்றி நினைத்து ஆளும் வர்க்கங்கள் அலறிக்கொண்டிருக்கட்டும். உழைப்பாளிகள் இழப்பதற்குத் தங்களைப் பிணைத்திருக்கும் தளைகளைத் தவிர வேறொன்றும் இல்லை. அடைவதற்கோ ஓர் உலகமே இருக்கிறது!

**உலகத் தொழிலாளிகளே ஒன்றுசேருங்கள்!**





# கார்ல் மார்க்ஸின் சிந்தனைகள்

மதம் மக்களுக்கு அபின் மாதிரி.

உலகாயதத்தை மனிதனின் மனம் கிரகித்து அதனைச் சிந்தனை வடிவமாக மாற்றுவது தான் எண்ணம் ஆகும்.

நமக்கு முந்தைய தலைமுறை தத்துவஞானிகள் உலகத்தைப் பற்றி வியாக்யானம் செய்தார்கள். ஆனால் தத்துவ ஞானிகளின் உண்மையான வேலை உலகை மாற்றுவதுதான்.

பிழையை எடுத்துக் காட்டாமல் விடுவதானது, அறிவுத் துறையிலே ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்.

தலைவணங்குவதையும் கெஞ்சுவதையும் நான் பெரிதும் வெறுக்கிறேன்.

விஞ்ஞானம் என்னும் அழியா ஜோதி அறியாமை எனும் திரைக்குப் பின்னே பிரகாசிக்கிறது.

மனிதனின் வாழ்க்கையை அவனது மனச்சாட்சி நிர்ணயிப்பதில்லை; ஆனால் சமூக வாழ்க்கைதான் அவனதுமனச்சாட்சியை நிர்ணயிக்கிறது.

இதுவரை இருந்து வரும் சமுதாயத்தின் சரித்திரமெல்லாம் வர்க்கப் போராட்டங்களின் சரித்திரமே!

சமுதாய ரீதியில் துணிந்து செயலாற்றும் சக்தி படைத்த வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் தான்.

இராணுவ நோக்கத்துடன் எல்லைகளை வகுக்கத் தொடங்கினால் அவைகளுக்கு முடிவே இருக்க முடியாது. ஏனெனில் எல்லா இராணுவ முடிவுகளுமே தவறானவை. எனவே, தவறைத் திருத்துவதற்காக புதியநாடுகளைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் நேரிடும். அத்துடன் வெற்றி அடைந்தவர்களோ, தோல்வி அடைந்தவர்களோ எல்லைகளை மீண்டும் திருத்தி அமைக்க முயல்வார்கள். அது யுத்தத்தை வளர்க்கும்.

வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பொழுது மக்கள் நிர்ணயமான, அத்தியாவசியமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது அவர்களின் விருப்பத்தை ஒட்டியதல்ல. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு பொருத்தமான உற்பத்தி உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்த உற்பத்தி உறவுகள்தான் சமுதாயத்தின் பொருளாதார அமைப்புக்குரிய அஸ்திவாரம். இந்த அஸ்திவாரத்தின் மீது தான் சட்ட அரசியல் கட்டிடங்கள் எழுப்பப் படுகின்றன. இதைத் தொடர்ந்துதான் இதற்குப் பொருத்தமான சமுதாய உணர்வு தோன்றுகிறது.

மனிதனின் உணர்வு அவன் இயக்கத்தை நிர்ணயிக்கவில்லை: ஆனால் அவனது சமூக இயக்கந் தான் அவனது உணர்வை நிர்ணயிக்கிறது.

வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் முறைதான் வாழ்க்கையின் சமுதாய, அரசியல், அறிவியல் போக்குகளை நிர்ணயிக்கிறது.

மனிதனுக்கு இயற்கையுடன் உள்ள தொடர்பை இயந்திரக் கலை தெளிவு படுத்துகிறது; வாழ்விற்காக அவன் நேரடியான உற்பத்திச் செயலில் ஈடுபடுவதையும் இது விளக்குகிறது. இது சமூகஉறவுகளையும், அதன் விளைவாக ஏற்படும் மனோநிலை பிரித்துக் காட்டுகிறது.

ஒரே விதமான தொழிலில் ஓயாமல் ஈடுபடும் நிலையான உழைப்பானது, மனிதனிடமுள்ள ஜீவ உற்சாகத்தின் தீவிரத்தையும் பொழிவையும் தின்றுவிடுகிறது; தொழில் மாறுதல் மூலமோ அது புத்துயிரும் புது மகிழ்ச்சியும் காண்கிறது. உபயோக நோக்கற்ற எந்தப் பொருளுமே மதிப்பீடு பெறமுடியாது. அது உபயோகமற்றதாயிருந்தால், அதில் அடங்கியுள்ள உழைப்பும் உபயோகமற்றதாகும். அதை உழைப்பு என்றும் கணிக்க முடியாது; அதனால் அது மதிப்பை உற்பத்திசெய்யவும் முடியாது.

சமுதாயமானது சக்திக்குத் தகுந்த உழைப்பு, உழைப்பிற்குத் தகுந்த ஊதியம்—என்பதிலிருந்து, சக்திக்குத் தகுந்த உழைப்பு, தேவைக்குத் தகுந்த ஊதியம் என்ற நிலைமைக்கு வளர்ச்சி அடையும்.

முதலாளி என்பவன் ஒரு காரியவாதிதான்! அவன் தன் காரியாலயத்திற்கு வெளியே என்ன பேசுகிறனே அதைப் பற்றி எப்போதுமே சிந்திப்பதில்லை. ஆனால் தன் காரியாலயத்தின் உள்ளே என்ன செய்கிறனே அதை எப்போதுமே அறிந்துகொண்டிருக்கிறன் என்பதும் உண்மைதான்!

முதலாளித்துவ—கம்யூனிஸ, சமுதாயங்களுக்கிடையே, ஒன்றிலிருந்து இன்னென்ருக மாறும் புரட்சிகரமான இடைக்காலம் ஒன்று இருக்கிறது. இதனேடு ஏற்படும் அரசியல் மாற்றத்திலே, அரசாங்கமானது பாட்டாளி சர்வாதிகாரமாக மாத்திரம் இருக்கும் காலம் உண்டு.

உற்பத்தி முறையின் வளர்ச்சிக் கட்டங்களில்தான் வர்க்க வேறுபாடுகள் உருப்பெறுகின்றன. வர்க்கப் போராட்டம் கண்டிப்பாகப் பாட்டாளி சர்வாதிகாரத்தில் கொண்டுபோய் விடும். அந்தச் சர்வாதிகாரமானது வர்க்கப் பிளவுகளை ஒழித்து வர்க்கமற்ற சமுதாயத்தில்கொண்டுபோய்ச்சேர்க்கும்.

கம்யூனிஸச் சமுதாயம் தன்னுடைய சொந்த அஸ்திவாரத்தின் மேல் கட்டுப்பட்டு எழவில்லை. அதற்கு மாருக, முதலாளித்துவத்தின் வயிற்றிலிருந்து, அதனுடைய அடையாளங்களோடு, பொருளாதாரத் துறையிலும், மனப்பான்மையிலும், ஒழுங்கிலும், இன்னும் ஒவ்வொரு துறையிலும், அந்தப் பழைய முதலாளித்துவ இயற்கையுடனேயே, அப்பொழுதுதான் பிறந்து வந்திருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்!

வெற்றியின் ஓர் அம்சம் தொழிலாளர்களுக்கு இருக்கிறது. அதுதான் எண்ணிக்கை. ஆனால், கூட்டு முறையிலே ஒன்றுபட்டால்தான், அறிவு முறையிலே நடத்தப்பட்டால்தான் எண்ணிக்கை பயனுள்ளதாகும்.

ஒருவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறன் என்பதைக் கொண்டு நாம் அவனை மதிப்பிடமாட்டோம். அதே போல புரட்சி சகாப்தத்தை அதன் உணர்ச்சியைக் கொண்டு நாம் மதிப்பிட மாட்டோம்.

ஆளும் வர்க்கத்திற்கு எதிராக, ஒரு வர்க்கம் என்ற முறையிலே தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் அரசியல் போராட்டம் ஆகும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட

தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரத்தைக் குறைக்கும்படி முதலாளிகளை வேலைநிறுத்தத்தின்மூலம்நிர்ப்பந்தப்படுத்துவது பொருளாதாரப் போராட்டமாகும்; ஆனல் 8 மணி நேர வேலையை சட்டமாக்குவதற்காக தொழிலாளிகள் நடத்தும் போராட்டம் அரசியல் போராட்டம்ஆகும். தனிப்பட்ட பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து அரசியல் இயக்கம் பிறக்கும்.

முதலாளித்துவ தனிச்சொத்துடைமை முறையின் சாவு மணி கேட்கும். சுரண்டுபவர்கள் சுரண்டப்படுவார்கள்.

பாட்டாளிகள்— இழந்துவிடுவதற்குத் தங்களைப் பிணைத்திருக்கும் தளைகளைத் தவிர வேறெதுவுமில்லை; வென்றடைவதற்கோ ஓர் உலகமே இருக்கிறது. உலகத் தொழிலாளிகளே, ஒன்று சேருங்கள்.

தொழிற் பிரிவினைகளும், உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் உள்ள முரண்பாடும் மறைந்தொழிந்த பிறகு உழைப்பானது வாழ்க்கைக்கு உபகரணமாக மட்டும் இராமல் வாழ்க்கையின் அத்தியாவசியமான அம்சமாக மாறினபிறகு, மனிதனின் வளர்ச்சியை ஒட்டி உற்பத்தி சக்திகளும் வளர்ந்த பிறகு, கூட்டுச் செல்வம் ஏராளமாகக் குவியும்போதுதான், முதலாளித்துவ உரிமை என்ற குறுகிய அடிவானத்தைக் கடந்து மனித சமுதாயம் முன்னேறிச் செல்ல முடியும். அதன் பிறகுதான் சக்திக்கு ஏற்ற உழைப்பு, தொழிலுக்கேற்ற ஊதியம் என்ற நியதி சமுதாயத்தில் இடம் பெறும்.

உள்நாட்டின் பல வகுப்பினரிடையே உள்ள வர்க்கப் பகைமை மறைகிற அளவைப் பொருத்து, நாடுகளுக்கிடையே உள்ள பகைமையும் ஒரு முடிவுக்கு வந்துவிடும்!

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS
UNIVERSITY EXTENSION LIBRARY, MADURAI
1210
Univ. Grants Commission.

MADURAI UNI…

# கலைச் சொற்களைப்பற்றி

(இந்த நூலில் கையாளப்பட்டிருக்கும் ஆங்கிலக் கலைச் சொற்களும் அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களும் கீழே தரப்பட்டுள்ளன)

**Bourgeoisie** :— முதலாளித்வம்.

**Capital** :— மூலதனம்.
மூலதனம் என்ற மார்க்ஸின் நூல்.

Constant Capital :— நிலையான மூலதனம் (இயந்திரங்கள், மூலப் பொருள்கள், முதலியவற்றிற்காகச் செலவிடப்படும் மூலதனத்தின் பகுதி.)

Variable Capital :— மாறுபடும் மூலதனம். (உழைப்பை விலைக்குப் பெறுவதற்காக உபயோகப்படுத்தப்படும் மூலதனப் பகுதி. அமித மதிப்பீட்டை (லாபத்தை) அடைந்து பெருகுவதால் இது மாறுபடும் மூலதனமாகிறது.)

**Class Struggle** :— வர்க்கப் போராட்டம்.

**Communism** :— பொதுவுடமை. (சோஷலிஸச் சமுதாயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து எல்லோரும் சம அறிவும், திறனும், உழைப்பும், நிலையும் பெறும் சமுதாய நிலைமை கம்யூனிஸம் என்று குறிப்பிடப்படுகிறது.)

**Communist League** :— பொதுவுடமைக் கழகம்.

**Communist Manifesto** :— கம்யூனிஸ்ட் அறிக்கை.

**Dialectics** :— தர்க்கவியல் (ஒரு விஷயத்தைப் பற்றித் தர்க்கித்து முடிவுகாணும் முறை.)

**Feudalism** :— நிலப் பிரபுத்வம்.

**First International** :— முதலாவது அகிலம்.

**Idealism** :— கற்பனைவாதம். (ஏதோ ஒரு கற்பனையினால் ஆண்டவனால் உலகமும் பிற பொருள்களும் படைக்கப்பட்டன என்ற தத்துவம்.)

**Materialism** :— பொருள் முதல்வாதம். (பொருளே

முதலாகக் கொண்டே சிந்தனையும் பிறவும் தோன்றின என்று கூறும் தத்துவம்.)

Dialectical Materialism :— தர்க்கவியல் பொருள் முதல் வாதம்,

**Historical Materialism**:— சரித்திர பூர்வமான பொருள் முதல் வாதம்

**Philosophical Materialism** :— தத்துவார்த்தப் பொருள்முதல் வாதம்

**Middle Class**:— மத்திய தர வர்க்கம்.

**Monopoly** :— ஏகபோகத்துவம். (குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலை குறிப்பிட்ட நபர்தான் நடத்த வேண்டும் என்று கட்டுப்படுத்துவது.)

**Means of Production** :— உற்பத்திச் சாதனங்கள்.

**Political Economy** :— அரசியல் பொருளாதாரம்.

**Product** :— பண்டம்.

Proletariat :— எந்த விதமான சொத்தும் இல்லாத உழைப்பால் மாத்திரமே பிழைக்க முடியும் என்ற நிலைமையில் உள்ள பாட்டாளி.

**Rent** (Ground) :— நில வாடகை—குத்தகை.

Absolute Rent :— நேரடியான குத்தகை.

Differential Rent :— மாறுபடும் குத்தகை.

**Rheinische Zeitung** :— ரைன்லாந்து கெஜட்.

Serf :— பண்ணைக் குடியானவன்.

**Socialism** :— சமவுடமை— சோஷலிஸம் (முதலாளித்வம் வீழ்த்தப்பட்டு, உற்பத்திச் சாதனங்கள் அரசாங்க உடமையாக்கப்பட்ட சமுதாய அமைப்பு முறை சோஷலிஸம் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறது.)

**Social Relations** :— சமுதாய உறவுகள்.

Transitional Stage :— மாறும் கட்டம்.

**Value** :— மதிப்பீடு.

Exchange Value :— மாற்று மதிப்பு.


Surplus Value :— அமித மதிப்பு.

| | |
|---|---|
| Absolute Surplus :— | நேரடியாகக் கிடைக்கும் அமித மதிப்பு. |
| Relative Surplus :— | வேறொரு காரியத்தோடு உள்ள தொடர்பால் உண்டாகும் அமித மதிப்பு. |



# சிந்தனையாளர் டார்வின

--ஜெகசிற்பியன்--




'குரங்கினமும் மனித இனமும், ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தவர் டார்வின்.

டார்வின் வரலாறு; ஆராய்ச்சி; டார்வினஸமும் தசாவதாரமும்; டார்வின் எழுதிய 'ஜீவராசிகளின் மூலம்' (Origin of species) எனும் நூலின் சுருக்கம் - இவ்வளவும் அடங்கிய அருமையான நூல்.

விலை ரூ. 1-4-0

oooo

# சிந்தனையாளர் பிளேட்டோ

—அரு. ராமநாதன்—

பிளேட்டோவின் வரலாறு, அவர் எழுதிய குடியரசு (Republic), கூடிக்களித்தலான ஆத்மீகக் காதல் (Symposium) முதலான பல்வேறு நூற்களின் சுருக்கம், அவரது சிந்தனைகள்—அவற்றிற்கு இணையான தமிழ் நாட்டுக் கருத்துகள்.

விலை ரூ. 1—4—0

பிரேமா பிரசுரம் :: சென்னை-24.

# நாநாவின் தாய்

உலகமேதை எமிலி ஜோலாவின்

புரட்சிகரமான நாவல்




இந்த நாவலில் தான் பாரிஸ் நகரின் போதைகளுக்குக் காரணமான நாடகக் கணிகை நாநாவின் ஆரம்ப வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. நாநா[illegible] தாயை நற்[illegible]ன் திருஉரு [illegible] று கூற இயலா[illegible]. ஆனல் வாழ்க்கை வாழ வேண்டுமென்று நினைத்து சூழ்நிலை காரணயாக [illegible]ழுக்கி விழுந்து வாழத் தவறியவள், அவ்வளவுதான்! உலக முழுவதும் அதிக விற்பனையாகிய நாவல்களில் இதுவும் ஒன்று. 402 பக்கங்கள்! இருபுறமும் மூவர்ன அட்டையுள்ள கண்கவர் பதிப்பு! ரா. ஆறுமுகம் தமிழாக்கியது

விலை ரு. 4—0—0

பிரேமா பிரசுரம் :: சென்னை-24.

# புதுமணத் தம்பதிகளுக்கு

இளவேனில்' எழுதியது

ஏன்?—திருமண, உடல், வயசு பொருத்தங்கள்—முதல் இரவு-பின்னிரவுகள்—உணர்ச்சி அலைகள்—இன்ப நிலை, I, II, முதற் குழந்தை—கரு ஆகும் விதம்—ஆணா, பெண்ணா? — ஆண் மலடு, பெண் மலடு,—கருத் தடை, இளமையின் பாதுகாப்பு—இளமை தரும் மருந்துகள்—கனவொழுக்கு... இழந்த இளமையை மீண்டும் பெற வழி—முதலான பல்வேறான அத்தியாவசியக் கருத்துக்கள் அனைத்தும் நிறைந்த, மணமான ஒவ்வொரு தம்பதியும் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டிய, அருமையான விஞ்ஞான நூல்—அநேக விளக்கப்படங்கள் அடங்கியது.

விலை ரூ. 2—4—0

பிரேமா பிரசுரம் :: சென்னை-24.